உ

மகாமகோபாத்தியாய, டாக்டர்

உ. வே. சாமிநாதையரவர்கள்

இயற்றிய

தமிழ்ப்பா மஞ்சரி

இரண்டாம் பாகம்

★

பதிப்பாசிரியர் :

கி. வா. ஜகந்நாதன்

★

மகாமகோபாத்தியாய, டாக்டர்

உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்

அடையாறு :: சென்னை-20

1962

உ

மகாமகோபாத்தியாய டாக்டர்

உ. வே. சாமிநாதையரவர்கள்

இயற்றிய

தமிழ்ப்பா மஞ்சரி

இரண்டாம் பாகம்

★

பதிப்பாசிரியர் :

கி. வா. ஜகந்நாதன்

★

மகாமகோபாத்தியாய டாக்டர்

உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்

அடையாறு :: சென்னை-20

1962

முதற் பதிப்பு—1962

விலை ரூ. 2-50

வ. உ. சி. அச்சகம், 13, லாயிட்ஸ் ரோடு, சென்னை-5

முகவுரை

திங்களணி சடைப்பெருமான் திருநாமம் மறவாத
சிந்தை கொண்டோன்
சங்கமலி நூல்மீண்டும் தண்டமிழ்த்தாய் பூணும்வகை
சமைத்த வள்ளல்
துங்கமுறு தன்னடிக்கீழ் எனையுமடி மைகொண்டு
தொன்னூல் ஈந்த
அங்கணன்அந் தண்சாமி நாதகுரு பேரருளை
அடைந்துய்ந் தேனே.

உரிமை வாழ்வைப் பெற்ற பாரத நாட்டில் பதினான்கு மொழிகள் தேசீய மொழிகள் என்னும் தகுதியைப் பெற்றுள்ளன. அந்த அந்த மாநிலங்களில் வழங்கும் மொழிகளின் வரலாற்றை ஆராய்ந்தால், தமிழைப்போன்ற தொன்மையை உடையதாக வேறு எந்த மொழியும் இல்லை என்பது தெளிவாகும். மிகப் பழங்காலத்தில் புலவர்கள் இயற்றிய நூல்களைத் தமிழ் பெற்றிருக்கின்றது. வெறும் தொன்மைப் பண்பு மட்டும் உடையன அல்ல அவை; இனிமையும் உரனும் இன்றும் நலந்தரும் பயனும் உடையனவாக அவை விளங்குகின்றன. தமிழ் மக்களின் உள்ளத்து உயர்வும் மொழிவளமும் செயற்சிறப்பும் அந்த நூல்களால் புலனாகின்றன. அந்தப் பழைய நூல்களையே சங்க நூல்கள் என்று நாம் போற்றி வருகிறோம்,

அத்தகைய சங்க காலத் தமிழ்ச்சோலை இடையிலே பல காலம் இருப்பது தெரியாமல் இருள் மண்டிக் கிடந்தது. அதனை மீட்டும் மலரவும் கனியவும் வைத்துத் தமிழ் நாட்டில் சங்கத் தமிழ் மணமும் சுவையும் பரவ வைத்தவர்கள் மகாமகோபாத்தியாய டாக்டர் ஐயரவர்கள். கருவிலே தமிழுடைய அவர்கள் இளமை தொடங்கியே தமிழ்க்காதல் மிகுதியாகப் பெற்றிருந்தார்கள். அதனால் பல பல புலவர்களை அண்டிப் பாடம் கேட்டார்கள். ஒரு பாட்டை மட்டும் சொன்னவர்களிடமும, சில நூல்கள் முழுவதையும் கற்பித்தவர்களிடமும் அன்பும் பணிவும் பூண்டு கற்றார்கள். அவர்களுடைய தமிழ்ப்பசி ஆனைப்பசியாக இருந்தமையால் இளமையில் அவர்களுக்குப் பாடம் சொன்ன புலவர்களால் அவ்வேட்கையைத் தணிக்க முடியவில்லை. கடைசியில் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளையவர்களை அவர்கள் அணுகிப் பாடம் கேட்கலானார்கள். அதன் பிறகே அவர்களுடைய தமிழ்ப்பசி அடங்கத் தொடங்கியது. கல்வியிற் சிறந்து நின்ற பிள்ளையவர்கள் கவிச் சக்கரவர்த்தியாகவும் விளங்கினர். அக்காலத்தில் தமிழ் நாட்டில் உலவிய நூல்களில் அந்தப் புலவர் பெருமான் அறியாத நூல் ஏதும் இல்லை. அத்தகைய கற்பகத்தின் பேரன்புக்கு இலக்கான ஐயரவர்கள் தமிழ் அமுதை நுகர்ந்தார்கள்.

கம்பராமாயணமும், புராணங்களும், பிரபந்தங்களுமே அக்காலத்துத் தமிழ்ப் பூஞ்சோலையாக விளங்கின. நன்னூலே சிறந்த இலக்கணமாக மதிக்கப்பெற்றது. கல்லாடம் படித்துவிட்டால் அவன் பெரிய புலவன். "கல்லாடம் படித்தவனோடு சொல்லாடாதே" என்று ஒரு பழமொழிகூட எழுந்தது

மகாவித்துவான் பிள்ளையவர்கள் காலத்துக்குப்பின் சில ஆண்டுகள் தமிழ் மாணவராகவே இருந்த ஐயரவர்கள் வித்துவான் சி. தியாகராச செட்டியாருடைய தூண்டுதலால் கும்பகோணம் அரசினர் கல்லூரியில்

தமிழாசிரியப் பணியை மேற்கொண்டார்கள். அங்கே இருந்தபோது தமிழ்நாடு செய்த நல்வினைப் பயனாகச் சங்க நூல் ஆராய்ச்சியில் தலைப்படும் வாய்ப்பு உண்டாயிற்று.

அவர்கள் கற்ற தமிழ் நூற்பரப்புக்கும், ஆராயப் புகுந்த சங்க நூற்பரப்புக்கும் பலபல வேறுபாடுகள் உண்டு. ஆயினும் இடைவிடா முயற்சியினாலும் இறைவன் திருவருளாலும் கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டு பிடித்ததுபோல அவர்கள் அந்தப் பழைய நூல்களைத் தெளியவும் பிறரும் தெளியும் வகையில் அச்சிடவும் முடிந்தது. இன்று தொடக்கப் பள்ளியில் பயிலும் இளஞ்சிறுனும் பாரியைப் பற்றியும் இளங்கோவடிகளைப்பற்றியும் தெரிந்துகொள்ளும் வகையில் அவர்கள் செய்த தொண்டு பரந்தது.

மாணாக்கராக வாழ்ந்தபோதும், ஆசிரியராக இருந்தபோதும், ஆராய்ச்சியில் ஈடுபட்டபோதும் அவர்களுக்குக் கவிஞர் பலருடன் பழகும் வாய்ப்புக் கிடைத்தது. அவர்கள் காலத்தில் மிகச் சிறந்த கவியரசராக விளங்கினவர் மகாவித்துவான் பிள்ளையவர்கள். அப்புலவர் பெருமானுடைய மாணாக்கராக இருந்த காலத்தில் அவரிடமிருந்து கவிவெள்ளம் எவ்வாறு பெருக்கெடுத்து வந்ததென்பதை ஐயரவர்கள் நேரிலே உணர்ந்தார்கள். நூற்றுக் கணக்கான நூல்களைப் பாடம் கேட்டதனால் தமிழின் பல துறைகளும் அவர்களுக்கு எளியன ஆயின. இவற்றிற்கும் மேலாகச் சங்க நூல்களை ஆராயும் தொண்டை மேற்கொண்டதனால் சங்ககாலக் கவிஞர்களின் வாக்கில் ஆழும் வாய்ப்பு, மற்றவர்களுக்குக் கிடைக்காத வகையில் அவர்களுக்குக் கிடைத்தது. இவ்வாறு பலவகைப் புலவர்களின் நூல்களிலே பயின்று சங்ககாலமுதல் தாம் வாழ்ந்த காலம் வரையிலுள்ள கவிஞர்களின் திறத்தை நன்கு உணர்ந்தவர்கள் ஐயரவர்கள்.

இக்காலத்தில் நூல்பயில் அறிவும், செய்யுள் இயற்றும் வன்மையும் ஒருங்கே ஒருவரிடம் காண்பது அரிதாக இருக்கிறது. நூலறிவுடையவரைப் புலவரென்றும், கவி பாடுபவரைக் கவிஞரென்றும் சொல்லுகிறோம். புலவரல்லாத கவிஞரையும், கவிஞரல்லாத புலவரையும் இன்று பார்க்கலாம். ஆனால் முற்காலத்தில் புலவர் யாவரும் கவிஞரே. ஐயரவர்கள் தமிழ் பயின்ற காலத்தில் தமிழிற் புலமையுடையவர்களிற் பெரும்பாலோர் கவிபாடும் ஆற்றலைப் பெற்றிருந்தார்கள். தமிழ் பயிலும் மாணாக்கர்கள் கவி பாடியும் பழகினார்கள்.

இந்த மரபில் வந்த ஐயரவர்கள் இளமை தொடங்கியே கவிகளைப் பாடும் பயிற்சியை வளர்த்துக்கொண்டு வந்தார்கள். அவர்களுடைய தமிழறிவு ஏற ஏற அவர்களுடைய கவிகளில் அந்த அறிவின் மணம் செறியலாயிற்று. நாள்தோறும் தேவார பாராயணம் செய்யும் வழக்கம் அவர்கள்பால் இருந்தது. எப்போதும் சிவநாமத்தை ஜபித்துக்கொண்டே இருப்பார்கள். நின்றும் இருந்தும் கிடந்தும் அந்த நாம ஜபத்தில் ஈடுபட்டிருப்பார்கள். அவர்களுடைய சிவபக்தி சிறந்ததா, தமிழ்ப்புலமை சிறந்ததா என்று எடை போட்டுப் பார்த்து வரையறுக்க இயலாது.

இளமை தொடங்கியே அவர்களுடைய சிவபக்தியும் தமிழறிவும் இணைந்தே வளர்ந்து வந்தன. மலருக்கு நிறமும் மணமும் தனித்தனியே வந்து அமைவதில்லை. இரண்டும் ஒருங்கே வளர்கின்றன. அவ்வாறே ஐயரவர்களிடம் சிவபக்தியும் தமிழ்ப்புலமையும் வளர்ந்தன. அதன் பயனாக அவர்கள் இயற்றிய கவிகளில் அவ்விரண்டும் மணந்தன.

ஐயரவர்களுடைய நற்பண்புகள் பலரை அவர்கள்பால் ஈர்த்தன; புலமையும் பலரை இழுத்தன. செல்வர்களும், பேராசிரியர்களும், புலவர்களும், அதிகாரிகளும் அவர்களுக்கு நண்பர்களாயினர். மடாதிபதிகளும் வள்ளல்களும் அவர்களுக்கு உதவி செய்தார்கள். தமக்குச் சிறிதளவு உதவி செய்தாரையும் மறவாமல் நன்றியறிவு கூர்வது ஐயரவர்களுடைய பண்பு. அவர்களுடைய சிவபக்திக்கும் தமிழறிவுக்கும் அடுத்தபடியாக அவர்களிடம் நிரம்பியிருந்த பண்பு செய்ந்நன்றியறிவு. பக்தியினால் அவர்கள் பாடிய பாடல்கள் பல; அப்படியே நன்றியறிவினால் அவர்கள் பாடிய பாடல்களும் பல.

சிலர் இறைவனைப் பாடுவதுதான் பாட்டென்றும் மக்களைப் பாடுவது பாட்டாகாதென்றும் கூறுவதுண்டு. 'நரஸ்துதி' என்று எளிதிலே பல பாடல்களைப் புறக்கணித்து விடுவார்கள். அப்படியானால் சங்க காலத்து நூல்கள் யாவும் பயனற்றவையா? இதுபற்றி ஐயரவர்களுடைய உறுதியான கருத்தை நாம் தெரிந்துகொள்வது இன்றியமையாதது. ஒருவரிடம் ஒன்றைப் பெறுவதற்காக அவரை இந்திரனென்றும் சந்திரனென்றும் வானளாவத் தூக்கி வைத்துப் பாடுவதுதான் வீண் புகழ். ஒருவர் செய்த உதவியை நினைந்து பாராட்டுவது அத்தகையது அன்று; அது நன்றியறிவுக்கு அறிகுறி.

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்; உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு"

என்பது பொதுமறை. நல்ல மனிதன் நன்றியறிவைக் காட்ட முற்பட்டால் தன்னுடைய ஆற்றலுக்கு ஏற்ற வகையில் அதைக் காட்டுவான். மொழி வளம் படைத்த புலவர்கள் கவியாற்றலால் அதனைப் புலப்படுத்துவார்கள். அப்படி எழுந்தவையே பலபல சங்கப் பாடல்கள்.

மனிதன் செய்த உபகாரத்தை நன்றியறிவுடன் நினைக்கத் தெரியாதவன், இறைவன் பேரருளை நினைக்கும் ஆற்றலை எவ்வாறு பெறுவான்? ஆகவே சிறிய உபகாரம் செய்தாலும் அது செய்தவரைப் பாராட்டுவதே சிறந்த மனிதப் பண்பு என்ற கருத்துடையவர்கள் ஐயரவர்கள். இந்தப் பண்பு அவர்களிடம் எப்படி மிக மிகச் சிறந்து விளங்கியதென்பதை அவர்களோடு பழகியவர்கள் நன்கு அறிவார்கள்; அவர்கள் வரலாற்றை "என் சரித்திரத்"திலே படித்தவர்களும், அவர்களுடைய நூற்பதிப்பின் முகவுரைகளைப் படித்தவர்களும் இந்தப் பண்பு அவர்களிடம் நிரம்பியிருந்ததென்பதைத் தெளிவாக அறிந்துகொள்ளலாம். அவர்கள் இயற்றிய கவிகளிலும் இந்தப் பண்பு தேங்கியிருப்பதை உணரலாம்.

ஐயரவர்களுடைய கவிகளைக் கால அடைவு நோக்கி மூன்று வகையாகப் பிரிக்கலாம். இளமைக் காலத்தவை, பிள்ளையவர்களிடம் சேர்ந்த பிறகு பாடியவை, பிற்காலத்தில் பாடியவை என்று அவற்றைப் பிரிக்கலாம். பொருள்வகையால் பார்த்தால் அவர்களுடைய பக்தி உணர்ச்சியைக் காட்டுவன ஒருவகை; நன்றியறிவைக் காட்டுவன மற்றொரு வகை. பக்திப் பனுவல்கள் தமிழ்ப்பா மஞ்சரியின் முதல் பாகமாக வெளிவந்துள்ளன. மற்றவை இப்போது இந்த இரண்டாம் பாகமாக வெளிவருகின்றன.

ஐயரவர்கள் இளமையில் பாடியவை எளிய நடையில் புலமையின் மிடுக்கில்லாமல் உள்ளன. பிள்ளையவர்களிடம் சேர்ந்து தமிழின் விரிவை அறிந்த பிறகு பாடியவையோ வரவரச் சொற்செறிவும் பொருட்செறிவும்

யமகம், திரிபு, மடக்கு, சிலேடை முதலிய அமைப்பும் கற்பனையும் உடையனவாக அமைந்திருக்கின்றன. அவர்கள் அறிவிலும் அநுபவத்திலும் பழுத்து முதிர முதிர அவர்கள் நடையில் தெளிவும் குழைவும் நிரம்பி நிற்றலைப் பார்க்கிறோம். அவர்கள் உரை நடையிலும் இந்த இயல்பு வெளிப்படுகிறது. முதலில் நீண்ட வாக்கியங்களும் சற்றே புலமைத் திறத்தைக் காட்டும் சில சொல்லமைதியும் உடையதாக இருந்த உரைநடை நாளடைவில் சிறு சிறு வாக்கியங்களும் கண்ணாடியைப்போன்ற தெளிவும் உடையதாகக் கனிந்தது.

அவர்களுடைய பிள்ளைப் பருவப் பாடல்களில், கவி பாடிப் புகழ் பெற வேண்டும் என்ற ஆசை அந்தப் பருவத்தில் மீதூர்ந்து நின்றதென்பதைக் காட்டும் சான்றுகள் பல உண்டு.

"அடியேன் நவில அருங்கவிதை பாடக்
கடியாமல் ஈதல் கடன்" (8)

"ஆசறு பாடல்கள் ஆனவை பாடிட
ஏசறு சீரருள் யாவையும் ஈவனே" (17)

"பாகினை நேர்தரு பாடல்க ளோதிடு
வாகினை நீயருள் வாயெனில் வாழ்குவன்" (20)

"பாடலை யோதிடு மாறருள் நீபுரி" (21)

"தேனன பாடல்கள் ஓதிட நீயருள்" (22)

"தாபன மார்சுவை மேவிய பாடல்கள்
சோபனம் மேவுற ஓதிட நீயருள்" (23)

"பாரணி யார்தரு பாடல்கள் ஓதிட" (24)

"கழைவளர் சாறெனத் தித்தித் தொழுகும் கவிதைகளைப்
பிழைவளர் ஏழை சொலஅருள் செய்தல் பெரிதுகொலோ" (41)

இவற்றையும் வேறு பல பாடல்களையும் (45, 46, 50, 55, 70, 72, 94, 95, 114, 115, 117, 118, 119, 121, 122, 319, 332, 335, 338, 341) பார்த்தால் இந்த ஆசை பல காலம் அவர்களிடம் குடிகொண்டிருந்தது என்பது புலனாகும்.

தமிழ்ப்புலமை நிரம்பியிருந்த காலத்தில் அவர்கள் பாடிய மிடுக்குடைய பாடல்கள் பல. முதல் பாகத்தில் திரிபும் (82, 83, 85, 154 - 88, 202 - 3), யமகமும் (84), மடக்கும் (145 - 8, 152 - 3) வந்துள்ள செய்யுட்களைப் பார்த்தால் இது விளங்கும்.

"ஆரானை வல்விடம் ஆர்ந்தானை நான்மறை அச்சுவங்கொள்
தேரானை யாவையும் தேர்ந்தானை மாமறை செப்புபல
பேரானைத் திங்குளம் பேர்ந்தானைத் தான்பெற்ற பிள்ளைக்குநல்
கூரானை மால்விடை ஊர்ந்தானை நாளும் உணர்தி நெஞ்சே" (150)

என்பதுபோன்ற சொல்முரண் அமைந்த பாடல்களையும் (149, 151, 527) இந்தப் பருவப் பாடல்களிடையே காணலாம். மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களுடைய கவி நடையைப்போன்ற நடை இக்காலத்தில் ஐயரவர்களுடைய பாடலில் தானே வந்து அமைந்தது.

"என்னமொழிந் திடினுமெனக் காராமை மீக்கூரும்
ஈது நிற்க
முன்அடைந்தோர் தமைப்பிரம ராக்கிமறைப் பொருள்பலவும்
மொழிந்தே பின்னர்
அன்னவரை மாலாக்கி யுடன்பீதாம் பரதரர்கள்
ஆக்கி நீசெய்
இன்னபரி சாதிகளைக் கலியாண சுந்தரன்வந்
தியம்பி னுனல்" (410)

"இதுபொழுதில் எனக்கின்றி யமையாத தின்னதென
இயல்பால் ஓர்ந்த
மதுவிரவும் தொடைப்புயத்து வள்ளலே வெளிப்படையா
வழங்க என்னெஞ்
சதுதுணி வுற் றிலதால்நின் திருமுகமாற் றம்கேட்கும்
ஆசை யேற்குக்
கதுமெனவே மகிழ்வுமிக நினதுதிரு முகமாற்றம்
காணச் செய்யே" (429)

என்பன போன்ற செய்யுட்களில் அமைந்த சிலேடையும் (351, 352, 364, 393, 416, 431, 436, 528 என்பவற்றையும் பார்க்க).

"அகத்தியனே குறியன்நின தருங்கவிநா வலன்நெடியன்
அவனோர் நூலே
சகத்தினிடை நவின்றனன்மற் றதுவுமற்ற தென்பர்நினைச்
சார்ந்தோன் யாரும்
மிகத்துதிக்க இயற்றியவை பலஅவையிந் நாள்மேன்மேல்
விளங்கும் தென்றல்
நகத்தினன்பன் னிருவர்க்கின் னவன்பலர்க்கா சானிவன்சீர்
நவிலற் பாற்றே" (406)

என்பதில் அமைந்த உறழ்ச்சியும் பிள்ளையவர்கள் போக்கை ஒட்டியவை. கோபாலராவுக்கும் சந்திரனுக்கும் உள்ள வேற்றுமை (511), ஆறுமுக நாயனார்க்கும் கண்ணனுக்கும் உள்ள வேறுபாடு (576), பாஸ்கர சேதுபதிக்கும் சூரியனுக்கும் உள்ள வேறுபாடு (630, 639), அச்சேதுபதி திருவிடை மருதூருக்கு வந்ததைப் பாராட்டும் பாடல்களில் உள்ள கற்பனை (650 - 53) ஆகியவற்றைக் காணும்போது அவை பண்டைப் புலவர் பாடிய கவிகளை நினைப்பூட்டும்.

ஐயரவர்களுக்குச் சிவத்தலங்களில் உள்ள பக்தி கரையற்றது. தேவாரத் திருப்பதிகங்களில் உள்ள ஈடுபாடோ உவமை காண ஒண்ணாதது. தேவார பாராயணம் செய்து வரும்போது அந்த அந்தப் பதிகச் சந்தத்தில் தாமும் பாடல்களை எழுதி வந்தார்கள். சில சமயங்களில் பாராயணம் செய்த பதிகத்தின் உள்ளுறையை வைத்துப் பாடினார்கள். வேறு சில சமயங்களில் பதிகங்களைப் பாடிய பெருமக்களைப் பாராட்டி உருகிப் பாடினார்கள். இத்தகைய பாடல்களில் தேவாரத்தின் சொல்லும் பொருளும் கலந்து இழைந்திருக்கின்றன (193 - 252.)

ஐயரவர்கள் தாம் பழகிய பல பெருமக்களைப் பற்றிப் பாடியிருக்கிறார்கள். பலருக்குச் செய்யுளாகவே கடிதம் எழுதும் பழக்கம் அவர்களிடம் இருந்தது. அப்படி அமைந்த கடிதச் செய்யுட்கள் இந்த இரண்டாம் பாகத்

தில் பல உண்டு. திருவாவடுதுறையாதீனத்தில் முதலில் மாணாக்கராகவும், பிறகு ஆதீன வித்துவானாகவும், அப்பால் ஆதீனத் தலைவரால் போற்றப் பெறும் மதிப்புக்குரிய பெரியவர்களாகவும் அவர்கள் விளங்கினார்கள். அவ்வக் காலத்தில் ஆதீனத் தலைவர்களாக இருந்தவர்களை அவர்கள் பாடியிருக்கிறார்கள். சுப்பிரமணிய தேசிகர், அம்பலவாண தேசிகர், வைத்தியலிங்க தேசிகர் ஆகியவர்களைச் சிறப்பித்துப் பாடிய பாடல்கள் பல இத்தொகுதியில் உள்ளன. கவர்னர்களும், சிற்றரசர்களும், பேராசிரியர்களும், செல்வர்களும், அதிகாரிகளும், புலவர்களும் அவர்களுடைய பாடலைப் பெற்றிருக்கிறார்கள்.

பிறருக்காகப் பாடிக் கொடுத்த பாடல்களும் இத்தொகுதியில் உண்டு. திருவாவடுதுறையில் ஞானாசிரியராக இருந்த மேலகரம் சுப்பிரமணிய தேசிகர் வேதநாயகம் பிள்ளைக்கு எழுதியனவாகப் பாடிய பாடல்கள் முதல், மகாவித்துவான் பிள்ளையவர்களின் கொள்ளுப் பேரர் வைத்திய லிங்க தேசிகரிடம் விண்ணப்பம் செய்து கொள்ளப் பாடியளித்த பாடல்கள் வரை இந்த வகையில் பல உண்டு.

ஐயரவர்களுடைய சிறப்புப் பாயிரத்தைப் பெற்றால் தமிழ்நாடு நன்கு மதிக்குமென்று பலர் அவர்களிடம் தம் நூல்களுக்குச் சிறப்புப் பாயிரம் பெற்றார்கள். அவரவர்கள் தகுதிக்கு ஏற்றபடி அவர்கள் பாடி வழங்கினார்கள். அத்தகைய பாடல்களும் இத்தொகுதியில் சேர்ந்துள்ளன.

அங்கங்கே ஐயரவர்கள் பெற்ற அநுபவங்களும், அவர்களை ஆழ்த்திய பலவகை உணர்ச்சிகளும், வாழ்க்கைப் பயணத்திலே இடையிட்ட இடையூறுகளும், கிடைத்த நலங்களும் பாடல்களினூடே நின்று நிழல் காட்டுகின்றன.

கல்லூரியில் படிக்கும் மாணவர்களில் சிலர் மிக்க வறிய குடும்பத்தில் பிறந்தவர்கள். அவர்கள் தந்தையர், பிச்சையெடுத்தாவது தம் பிள்ளைகளைக் கல்லூரிப் படிப்புக்கு அனுப்பினர். அவர்களோ பெரிய செல்வர்களைப் போலத் தம்மை எண்ணிக் கொண்டு தம் குடும்பத் தொழிலை எண்ணி நாணினார்கள். இந்த நிலையை,

> " இரக்கும் தொழிலின ராய்த்தம் பெரியார் இளைந்திடவும்
> புரக்கும் தொழிலர் எனமதித் தேதமைப் புன்கணின்றிப்
> பரக்கும் குடும்ப முயற்சியில் நாணம் பரித்துழல்வார்
> துரக்கும் தொழிலினர் ஆங்கிலம் கற்பவர் சொற்றிடினே " (348)

என்பதில் குறிப்பிக்கிறார்கள்.

ஏடு தேடி அலைந்த காலத்தில் பல சுவடிகளைப் பலர் வெள்ளத்தில் விட்டும் அடுப்பெரித்தும் வீணாக்கியதை அறிந்து மனம் நடுங்கினவர்கள் ஐயரவர்கள்.

> " புனலாற் பலநூல் கனலாற் பலநூல்
> அழித்தே காலம் கழித்தனர் சிலரே " (353)

என்று அந்த அநுபவத்தை ஓரிடத்தில் வெளியிடுகிறார்கள்,

மகாவித்துவான் பிள்ளையவர்களுடைய புதல்வருக்குப் பொருளுதவி செய்ய வேண்டுமென்று பெருமுயற்சி செய்தார்கள் ஐயரவர்கள். எதிர்

பார்த்த பயன் கிடைக்கவில்லை. திருவாவடுதுறை ஆதீனத் தலைவர் அவருக்கு வீடு தருவதாகச் சொன்னார். அப்போது ஆதீனத் தலைவருக்கு எழுதிய கடிதத்தில் தாம் பட்ட பாட்டை அவர்கள் குறிப்பித்திருக்கிறார்கள்:

“ பார்பூத்த பரிதியெனா விளங்கியடுத் தவர்துயரம்
  பாற்றி ஓங்கும்
சீர்பூத்த துறைசையில்அம் பலவாண தேசிகஇச்
  செய்நி யைமுன்
பேர்பூத்த பலர்க்கெழுதிக் கைசோர்ந்தேன் நாச்சோர்ந்தேன்
  பேசிப் பேசிக்
கார்பூத்த கொடையமைநின் திருமுகங்கண் டல்லலொரீஇக்
  களித்திட் டேனல்,” (408)

பழகியவர்கள் உலகவாழ்வை நீத்தபோது பாடிய கவிகள் பல இதில் உள்ளன. அவற்றில் ஐயரவர்கள் அப்பெருமக்களின் இயல்பைப் படம் பிடித்துக் காட்டுவது போலச் சொல்லியிருக்கிறார்கள்.

பழம் புலவர்களிடம் அவர்களுக்கு இருந்த பேரன்பை என்னவென்று சொல்வது! பல சமயங்களில் நல்ல பாடல்களைப் படிக்கும்போது, “இந்தப் புலவர் வாழ்ந்த காலத்தில் இவரோடு பழகி வாழும் பேறு நமக்குக் கிடைக்க வில்லையே!” என்று வருந்துவார்கள்.

“ பாரும் விசும்பும் புகழ்தக்க யாகப் பரணியின்பால்
ஆரும் சுவைபல ஆரும் தெளிய அணியுரைசெய்
சீரும் சிறப்பும் உடையோய் இருமொழிச் செல்வநின்றன்
பேரும் தெரிந்திலன் என்செய்கு வேன்இந்தப் பேதையனே ” (382)

என்ற பாட்டில் இத்தகைய ஆராமையைப் பார்க்கிறோம்.

நன்றியறிவே வடிவாகத் திகழ்ந்த ஐயரவர்கள், சங்கப்புலவர்கள் பாடிய பாடல்களில் அந்த நன்றியறிவையே கண்டு பாராட்டினார்கள். புறநானூற்றுப் பாடல்களைப் பற்றிச் சொல்லும் பொழுது,

“ நன்றி அறிக என்றிசைப் பனவும் ” (371)

என்றும், பெருங்கதை முகவுரைக்கு முன் அமைத்த பாட்டில்,

“ நன்றி அறிவொடு துன்றுபு பல்குணம்
மேவுமுச் சங்க நாவலப் பெரியரும் ”

என்றும் கூறுவதிலிருந்து அவர்கள் கருத்தை உணரலாம். நச்சினார்க் கினியரை,

“ எவனுலை வாயிடைவந் தமுதவாய் உடையனென
  இயம்பப் பெற்றோன்
எவன்பண்டைப் பனுவல்பல இறவாது நிலவவுரை
  எழுதி யீந்தோன்
எவன்பரம வுபகாரி எவன்நச்சி னார்க்கினியன்
  எனும் ப ராளன்
அவன்பாத இருபோதும் எப்போதும் அலர்கவென
  தகத்து மன்றே ”

என்று பாராட்டும் பாட்டில் அவ்வுரையாசிரியப் பெருமானின் பேருபகாரத்தை நன்குணர்ந்த உள்ளம் பேசுகிறது.

தம்முடைய ஆசிரியரை ஐயரவர்கள் சொல்லும் இடங்களிலெல்லாம் எத்தனை பக்தியும் நன்றியறிவும் பெருக்கெடுத் தோடுகின்றன !

" எண்ணிய பலவும் மாணவர்க் கன்பின்
ஈந்திடும் நிதிதமிழ் விளங்க
நண்ணிய புகழ்மீ னுட்சிசுந் தரநன்
னுவலன் நன்கினி தாய்ந்து
பண்ணிய விதி விடங்கர்தம் ஆடற்
பனுவலைப் பதிப்பிக்க இயைந்த
புண்ணிய மதனை நினைதொறும் எனது
புந்திமிக் கின்புறு மாலோ " (376)

என்று பாடிக் கசிந்ததும்,

" அருத்திமிக எனை அருகில் இருத்தியருந்
தமிழ்நூல்கள் அறைந்து பின்னர்த்
திருத்துறைசை அமர்ந்தருள்சுப் பிரமணிய
அருட்கடலின் திருமுன் சாரப்
பொருத்திஅனை யான்கருணைக் கிலக்காக்கி
இருபயனும் பொருந்தச் செய்தோன்
மருத்தபொழிற் சிரகிரிவாழ் மீனுட்சி
சுந்தரநா வலவர் ஏறே " (665)

என்று பாராட்டியதும், தம் தந்தையார் மறைவு குறித்துப் புலம்பிய புலம்பலில்,

" பற்றலெங்கே செந்தமிழைப் பற்றிக்கற் றோர்பலர்பால்
துற்றலெங்கே மீனுட்சி சுந்தரநல் லாரியன்பால்
கற்றலெங்கே கற்றுக் கவலையொரீஇ அவ்வழியில்
நிற்றலெங்கே இன்றுவரை நீயருள்செய் யாவிடினே " (705)

என்று உருகியதும் அந்தப் பண்புகளைத் தெளிவாக்கும்.

தமிழே ஐயரவர்களுடைய உணவு ; தமிழே அவர்களுடைய மூச்சு ; தமிழே அவர்களுடைய உயிர். ஒருசமயம் பொறுக்க இயலாத மனவருத்தத்தில் அவர்கள் ஆழ்ந்திருந்தார்கள். அப்போது, 'இவ்வுலகில் நாம் ஏன் வாழ வேண்டும் ? இந்த உயிரைப் போக்கிக் கொண்டு விடலாமே!' என்ற எண்ணங்கூட உண்டாயிற்று. உயிரை விட எண்ணியும் தமிழை விட மனம் இல்லை. அப்போது அவர்கள் உள்ளத்துணர்ச்சி ஒரு பாடலாக உருவெடுத்தது;

" தேனிருக்கும் சுவைத்தமிழே சீரியர்நாப்
பயிலமுதத் தெளிவே இந்த
ஊனிருக்கும் துயராலும் உள்ளொன்று
புறமொன்றும் உலக ராலும்
ஏனிருக்க வேண்டுமென எண்ணுகின்றேன் ;
நினைப்பிரிய எண்ண மில்லேன் ;
மானிருக்கும் கரதலத்து வள்ளலருள்
வழங்கியிடர் மாய்த்தாள் வாயே !" (201)

ஆம்; ஐயரவர்களுக்கு உயிரினும் சிறந்தது தமிழ். அதனால் அல்லவா அவர்கள்,

" இருந்தமிழே உன்னால் இருந்தேன் ; இமையோர்
விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன் - திருந்த
உதிப்பித்த பன்னூல் ஒளிர அடியேன்
பதிப்பிக்க வேகடைக்கண் பார் " (379)

என்று பாடினார்கள் ?

இந்த உணர்ச்சியைத் தமிழன்பு என்பதா? தமிழார்வம் என்பதா? தமிழாசை என்பதா? அல்லது தமிழ்ப்பெரும் பேராசை என்பதா? எப்படிச் சொன்னாலும் அதுதான் இந்தத் தமிழ்ப்பெரும் பேராசிரியர் வாயிலாகத் தமிழ் மகளும் தமிழ் மக்களும் அரிய தமிழ்ச் செல்வம் பல வற்றைப் பெறக் காரணமாயிற்று என்பதில் சிறிதும் ஐயம் இல்லை.

" காந்தமலை "
சென்னை - 28

கி. வா. ஜகந்நாதன்
6—2—62

நன்றியுரை

ஸ்ரீ மகாமகோபாத்தியாய டாக்டர் ஐயரவர்கள் இயற்றிய தனிப் பாடல்களைக் கொண்ட **தமிழ்ப்பா மஞ்சரியின்** இரண்டாம் பாகம் இறைவனருளால் இப்பொழுது வெளி வருகிறது. இதன் முதற் பாகத்தை உரிய தலைப்புக்களுடனும் குறிப்புரை களுடனும் பதிப்பித்த **ஸ்ரீ வாகீசகலாநிதி கி. வா. ஜகந்நாதன்** அவர்கள் இப்பாகத்தையும் திறம்பட அமைத்து உதவினர். அவர்கட்கும், இப்பதிப்புச் செலவின் பாதியை அன்புடன் உதவிய இந்திய அரசியல், அறிவியல் பண்பாட்டியல் வளர்ச்சித் துறை அமைச்சர் பெருந்தகையாளர் அவர்கட்கும், இதனை விரைவில் அச்சிட்டுக் கொடுத்த வ. உ. சி. அச்சகத்தார்க்கும் இந்நூல் நிலையம் தன் மனமார்ந்த கடப்பாட்டைத் தெரிவித்துக் கொள்கின்றது.

10—2—62 **நூல் நிலையத்தார்**

உள்ளுறை

		பக்கம்
1.	தனிப் பாடல்கள்	85— 92
	நூலுக்கும் நீருக்கும் சிலேடை	85
	பனையகணிக் கட்டிலின் பெருமை	85
	இக்கால மாணவர் இயல்பு	86
	காவிரியின் பெருமை	86
	ஆடிக் காற்றால் விளைந்த சேதம்	87
	தமிழ்	88
2.	மொழிபெயர்ப்புப் பாடல்கள்	93— 96
3.	பதிப்புப் பாடல்கள்	96—104
	நச்சினார்க்கினியர்	96
	பத்துப்பாட்டு	97
	புறநானூறு	97
	மணிமேகலை	99
	தியாகராச லீலை	100
	நன்னூல் - மயிலைநாதர் உரை	100
	பெருங்கதை	101
	தக்கயாகப் பரணி	102
	ஒட்டக் கூத்தர்	102
	உரையாசிரியர்	103
	இரண்டாம் இராசராச சோழன்	103
	பிள்ளையவர்கள் சரித்திரம்	104
4.	திருத்தொண்டர்கள்	104—105
	நால்வர் துதி	104
	ஞான சம்பந்தர்	104
	நாவுக்கரசர்	104
	சுந்தரர்	105
	அறுபத்து மூவர்	105
5.	பழகிய பெரியோர்	105—221
	அம்பலவாண தேசிகர்	105
	அரங்கநாத முதலியார் - பூண்டி	115
	ஆம்பட் ஹில் துரை	122

	பக்கம்
ஆர்நாலட் ஓயிட்	123
இராசராசேசுவர சேதுபதி	124
இராமகிருஷ்ண பிள்ளை - தோட்டக்காடு	129
இராமசாமி முதலியார் - சேலம்	130
இராமலிங்கத் தம்பிரான்	131
இருதயாலய மருதப்ப தேவர்	136
இராமசாமிப் புலவர் - சர்க்கரை	137
கனகசபை முதலியார்	137
கிப்சன் கார்மேகல்	138
குடந்தை நண்பர் சங்கத்தினர்	139
குமாரசாமித் தம்பிரான்	139
குமாரசாமி ரெட்டியார்	142
கோபால கிருஷ்ண பாரதியார்	144
கோபால ராவ்	145
கோஷன் - வைகவுண்ட் ஜார்ஜ்	148
சின்னசாமிப் பிள்ளை	150
சுந்தரலிங்கத் தம்பிரான்	150
சுப்பிரமணிய ஐயர் (பென்னுத்தூர்) உயர்நிலைப் பள்ளி	151
சுப்பிரமணிய தேசிகர்	152
சுப்பிரமணிய முதலியார் - வெ. ப.	157
செண்பகக் குற்றாலக் கவிராயர்	157
சேஷையர் - சாது	158
சொக்கலிங்கத் தம்பிரான் - காசிவாசி	159
சோமசுந்தர பாரதியார் பள்ளிக்கூடம்	161
சோமசுந்தரம் பிள்ளை	161
தியாகராச செட்டியார் - சி.	162
திருவாரூர்ப் பள்ளித் தமிழ் மாணவர் சங்கம்	173
நாராயணசாமிக் குரிசில்	173
நெல்லையப்ப பிள்ளை - கவிராச	174
பட்டாபிராம பிள்ளை	176
பாண்டித் துரைத் தேவர்	177
பார்த்தசாரதி ஐயங்கார்	182

	பக்கம்
பாஸ்கர சேதுபதி	184
மீனாட்சிசுந்தரம் பிள்ளை - மகாவித்துவான்	195
சுப்பிரமணிய தேசிகர்	197
தியாகராச செட்டியார்	199
பிச்சுவையர் - வேம்பத்தூர்	202
பெரியசாமி முத்தைய உடையார்	202
பென்னிங்டன் - ஜே. ஸி.	204
பொன்னுசாமி செட்டியார்	205
பொன்னுப் பிள்ளை	206
மார்த்தாண்ட வர்மா	206
மீனாட்சிசுந்தரம் பிள்ளை-மகா வித்துவான்	208
லேடி லாலி	209
வாணி விலாச சபை	210
விக்டோரியா மகாராணி	210
வேங்கட சுப்பையர்	212
வேங்கடரமண வைத்தியசாலை	214
வேங்கடேசுரெட்டுப் பாண்டியர்	216
வேதநாயகம் பிள்ளை	217
வேதாசல முதலியார் - தொட்டிக்கலை	218
வைத்தியலிங்க தேசிகர்	219
வைத்தியலிங்கம் பிள்ளை	221
ஹாவ்லக் துரை - லார்டு	221

6. சிறப்புப் பாயிரங்கள் 222—240

அவிநாசி, கருணாம்பிகை சதகம்	222
இங்கித மாலை உரை	222
கந்தபுராணக் கீர்த்தனைப் பதிப்பு	223
கலாவதி	223
குருவாசகக் கோவை	223
கைவல்ய நவநீத உரை	224
கொங்குமண்டல சதகப் பதிப்பு	224
சாக்கை உமையம்பிகை பிள்ளைத்தமிழ்	224

	பக்கம்
சாவித்திரி வெண்பா	225
சித்த மான்மியம்	225
சிவகாசி மான்மியம்	225
சுப்பிரமணிய தேசிகர் பாமாலை	226
சுப்பிரமணிய தேசிகர் மும்மணிக் கோவை	226
செந்தமிழ்ச் சிறப்பு	227
ஞான சித்த சம்பு	227
ஞான ரத்திநுவளி	228
தணிகைப் புராணப் பதிப்பு	228
தம்பு சிந்தாமணி	229
திருக்குறள் முதற்பா விளக்கம்	229
திருப்புகழ்ப் பதிப்பு	229
திருப்புகழ்ப் பாராயணத் திருமுறை	230
திருமுக விலாசம்	230
திருவரங்கச் சிலேடை வெண்பா	231
திருவுசாத்தானப் புராணம்	231
திருவேடகப் புராணம்	232
துறைசைச் சிலேடை வெண்பா	232
நமச்சிவாய தேசிகர் நான்மணிமாலை	233
பாரிகாதை	233
பேரகராதி	235
மங்களாம்பிகை திருவருள் விலாசம்	235
மதுரைத் தமிழ்ச்சங்க மான்மியம்	236
மயிலைச் சிலேடை வெண்பா	236
மயூரகிரிக் கலம்பகம்	237
மயூரகிரிக் கோவைப் பதிப்பு	237
மாம்பழக் கவிச்சிங்க நாவலர் பிரபந்தத் திரட்டுப் பதிப்பு	237
முத்தமிழ் வசனக் கோவை	239
வாகனக் கவி	240
வேதநாயகி பிள்ளைத்தமிழ்	240
ஸ்ரீ ரமண சந்நிதிமுறை	240

உ

மகாமகோபாத்யாய ஐயரவர்கள்

அருளிய

தமிழ்ப்பா மஞ்சரி

[இரண்டாம் பாகம்]

தனிப் பாடல்கள்

நூலுக்கும் நீருக்கும் சிலேடை

(வெண்பா)

344. வெள்ளைநிறத் தாற்செயற்கை மேவியே வேறுநிறம்
கொள்ளுகையாற் றோயக் குறியினால்—உள்ளவன்பிற்
றாய்நேர்ந்த வாறுமுகத் தாளாளா நீமொழிந்த
ஆய்நூலு நீருநிக ராம்.

பனையகணிக் கட்டிலின் பெருமை

(கட்டளைக் கலித்துறை)

345. நனைய கணிக்கு நிகரா மரமு நலவளஞ்சார்
அனைய கணிக்கு நிகரா நிலமு மவிரிளைய
முனைய கணிக்கு நிகரா மகளிரு முன்றிற்றுஞ்சப்
பனைய கணிக்கு நிகர்பா யலுமிலை பார்த்திடினே.

---

344. முன்பாதி பிள்ளையவர்களும் பின்பாதி ஐயரவர்களும் பாடியது; **மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள் சரித்திரம்,** II. ப. 59. தோயக்குறியினால் - தோய்கின்ற அந்த அடையாளத்தால்; தோயமென்னும் பெயரால்.

345. நனைய **கணிக்கு** - அரும்புகளையுடைய வேங்கை மரத்துக்கு. **அனைய கண்** இக்கு நிகரா நிலம் - அத்தகைய கணுக்களையுடைய கரும்புப் பயிர் **விளையும்** நிலம். இளைய முனைய கண்ணிக்கு - இளமையை உடைய வளாகிய கூர்மையையுடைய கண்ணைப் பெற்ற மனைவிக்கு. பனை அகணி - பனை மட்டையின் தோற்சிம்பு. • பாயல் - படுக்கை.

இக்கால மாணவர் இயல்பு

346. உண்ணும் விருப்பம் ஒழிந்தார் கவலை ஒழிந்து துயில்
பண்ணும் விருப்பம் ஒழிந்தார் உறவினர் பால்விரும்பி
நண்ணும் விருப்பம் ஒழிந்தார் தமக்கு நலனிதென
எண்ணும் விருப்பம் ஒழிந்தார் படிக்கும் இளைஞர்களே.

347. சும்மா இருக்க அறியாமல் ஆங்கிலச் சொல்விழைந்து
தம்மாற் பொறுத்தற் கரிதாய துன்பம் தனைச்சுமந்தே
அம்மா விரையச் சமைஎன்பர் தூங்கிடு மப்பொழுதும்
எம்மால் நுவல அருந்துன்பம் சார்வர் இளைஞர்களே.(2)

348. இரக்கும் தொழிலின ராய்த்தம் பெரியார் இனைந்திடவும்
புரக்குந் தொழிலர் எனமதித் தேதமைப் புன்கணின்றிப்
பரக்குங் குடும்ப முயற்சியில் நாணம் பரித்துழல்வார்
துரக்குந் தொழிலினர் ஆங்கிலம் கற்பவர்
சொற்றிடினே. (3)

349. மனையிழந் தார்சிலர் மாடிழந் தார்சிலர் வாய்த்தநிலந்
தனையிழந் தார்சிலர் சார்பிழந் தார்சிலர் தந்தைதன்னோ
டனையிழந் தார்சிலர் ஆங்கிலச் சொல்லை அநுதினமும்
இனைவரக் கற்றல் புருடார்த்த மாக்கொள்
இளைஞர்களே. (4)

காவிரியின் பெருமை

(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

350. தூமேவு தனதுருவப் பெருமைகுறைந் துங்கலங்குந்
தோற்ற முற்றும்
பூமேவு பன்னாட்டுப் பணைப்பைங்கூழ் கருகாது
புரக்கும் பொன்னி

---

346. பழங்காலத்தில் ஆங்கிலம் படித்த பிள்ளைகள் பட்ட தொல்லை களைப் பாடிய பாடல்கள் இதுமுதல் உள்ளன. கும்பகோணத்தில் இருந்த போது பாடியவை.

348. புரக்கும் தொழிலர் என - அரசாட்சி செய்பவரைப் போல.

349. மாடு - செல்வம். இனைவர - துன்பம் உண்டாக.

தாமேவு பொருள்குறைந்து மனங்கலங்கி வறுமையினுல்
தளர்ந்தும் ஏனைத
தேமேவு பலரையுங்காத் திடும்பெருமை உடையாரைச்
சிவனும் மாதோ.

ஆடிக் காற்றுல் விளைந்த சேதம்

351. கழுத்துயரம் உறுமுடலொட் டகமாதி பன்மிருகம்
கவலப் பல்வீக்
குழுத்துயரக் கமுகுபனை தெங்காதி மரங்கள்குலை
குலைய வேரோ
டிழுத்துயர எறிந்துயிர்கள் விழுத்துயர மருவமருத்
தியற்றும் நோயாம்
முழுத்துயரம் ஆயவிதைக் காற்றுயரம் எனவெவரும்
மொழிவார் என்னே? (1)

352. உரம்பயிலும் பலமரமும் அரம்பையுமக் காற்றினுல்
ஒடிந்து சாய்ந்த
வரம்பையறு காலுதையால் எவ்வுயிரும் தலைசாய்தல்
மரபாம் அன்றே
சிரம்பயிலும் பந்தருறும் பலகால்இவ் வொருகாலிற்
சிதைந்து வீழ்ந்த
தரம்பயிலீ ததிசயங்கொல் ஒன்றுபல வற்றைவெலல்
சகச மன்றே? (2)

---

351. 1880-ஆம் ஆண்டில் ஆடிக் காற்றுல் கும்பகோணத்தில் மரங்களுக்கும் பயிர்களுக்கும் சேதம் நேர்ந்தபோது பாடியவை இதுவும் அடுத்த பாடலும்.

பல் வீ குழு துயர - பல பறவைக் கூட்டம் துயரையடைய. விழுத்துயரம் - மிக்க துன்பம். மருத்து - காற்று. கால்துயரம் - காற்றுல் வரும் துன்பம்; கால்பகுதியாகிய துன்பம்.

352. அரம்பை-வாழை. கால் உதையால்-காற்று வீச்சினுல்; காலின் உதையால். பலகால்—பல கம்பங்கள். ஒரு காலால்—ஒரு காற்றுல்.

தமிழ்

(நேரிசை ஆசிரியப்பா)

353. பூவுறை நான்முகன் நாவுறை மடந்தைக்கு
அமலமார் சுவேத கமலம தாகிக்
காமனை அருள்பரந் தாமன்மார் புறைதிரு
மாமகட் கொருசெந் தாமரை யாகி
இமையமீன் றளித்த உமையவட் குலவாப்
பாடமை மந்திர பீடம தாகிச்
சங்கரன் சுரிமுகச் சங்கரி கரிமுகத்
தைங்கர னிராறு செங்கரன் முதலாம்
பற்பல வானவர் அற்பினோ டமர்பல
சிற்பமார் சினகரப் பொற்பின தாகிப்
பூவிரி பொழிற்கரைக் காவிரி இருபால்
இயங்க லுற்ற நயம்பெற் றதுவாய்ப்
பன்மதத் தவர்தந் தன்மையின் வழாது
மனமகிழ்ந் துறைபெருந் தனமுடைத் தாகித்
தண்டலைச் சோழ மண்டல மடமகட்கு
இலகுறு நெற்றித் திலகம தாகி
விளங்குறு குடந்தை வளம்பதி இதன்பால்
நயசகு ணத்தால் உயரர சர்க்குறு
கல்வியால் உயர்ந்த செல்வர்காள்! வானத்
தமிழ்திற் சுவையுறு தமிழின் பெருமையும்
ஒன்றுந் தெரியா என்றன் சிறுமையும்
ஒத்துற நோக்கிடின் எத்தனை தூரம்
என்பதற் கையம் எள்ளள வும்மிலை
என்பதை எண்ணு திருப்பவர் எவரே?
அப்படி இருப்பினுஞ் செப்புறு மொழியுட்

---

353. 2. சுவேத கமலம் - வெண்டாமரை.

7. சுரிமுகச்சங்குஅரி - திருமால்.

10. சினகரம் - கோயில்.

15. தண்டலை - சோலை.

குணமே கொள்ளும்நும் குமிணகத் தூண்டச்
சொல்லத் துணிந்தஎன் சொல்லைக் கேண்மினோ :
யாவரும் என்றும் எச்சம யத்தும்
மேவரும் தமிழையே விளம்புக என்கிலேன் ;
எம்மொழி கட்கும் இம்மொழி யேஉயர் .
செம்மொழி எனவுஞ் செப்புகி லேன்; ஈ
திமிழ்கடல் வரைப்பில் தமிழ்நா டாதலின்
ஆசறத் தமிழை நேசமொ டியம்பின்
மிகப்பயன் உண்டென் றகத்தெண் ணினன்; மற்
றித்தமிழ் நாட்டுறும் எம்மொழி யவரும்
இத்தமிழ் மொழியையே எளிதியம் புவரால் ;
அன்றியுங் கற்றற் கின்றமிழ் எளிதால் ;
ஆரிட மென்னவும் அறையப் படுமால் ;
வழுவா அறிஞர் தழுவிய திதுவே ;
முந்நா ளிடையே இந்நா டளித்த
விரைசெறி மலர்த்தார் அரசரிற் பலர்தாம்
இம்மொழி நாடொறும் ஏற்றம துறவே
செம்மொழி அறிஞரைச் சேர்த்தினி தளித்தே
அன்னோர் தம்மாற் பன்னூ லாக்குவித்
தளித்தனர் உலகங் களிப்படைந் திடவே ;
வடமொழி நூல்சில திடனுற மொழிபெயர்த்
தீந்தன ராற்சில வேந்தர்கள் தாமே ;
நலமிகு முத்தமிழ்ப் புலவர்க ளோடு
வீறிய சங்கம் ஏறினர் சிலரே ;
மன்னவன் எப்படி மன்னுயிர் அப்படி
என்னும் தொன்மொழிக் கியையஇன் னோர்தம்
காலத் தெவரும் கடைப்பிடித் தன்பொடு
சாலத் தமிழையே தாம்கற் றனரே ;
இந்தக் காரணத் தித்தமிழ் மொழிதான்
இந்தப் பைதிரத் திலங்கிய தால்பின்
பிறந்தவேற் றரசரில் இந்நினைவின்றி
இருந்துண் டுடுத்தே இறந்தனர் சிலரே ;

38. ஆரிடம் - ரிஷியாற் செய்யப் பெற்றது.
55. பைதிரம் - உலகம்.

புனலாற் பலநூல் கனலாற் பலநூல்
அழித்தே காலங் கழித்தனர் சிலரே ;
இன்புறு தமிழிடை அன்புவைத் திருந்தும்
பெயர்ப்பித் தெழுத அயர்த்தனர் சிலரே ;
இக்கா ரணத்தால் மிக்கார் புகழும்
எத்தனை நூல்கள் இறந்தன ! அவைதாம்
இத்தனை என்ன எண்ணப் படுங்கொலோ ?
இறவா நூல்களைத் துறவா தெழுதிப்
படித்தும் பிறரைப் படிப்பித் தும்பல
பாடியும் அச்சிற் பதிப்பித் தும்மிதைப்
பாலனம் செய்த மேலவர் பலரின்
சரித்திர மதனை விரித்திடிற் பெருகும் ;
இவ்வியல் பிற்றாம் இம்மொழி முன்னாள்
நம்புறு கும்ப சம்பவ ராற்புரி
இலக்கண முடைத்தாய் இருத்தலின் இந்நாள்
மாணமை கும்ப கோணநன் னகர்வாழ்
உங்களாற் காத்தற் குரிமையும் உடைத்தால் ;
ஈங்கிது நிற்க; தாங்கல் இலாது
தம்மொழி அன்றி எம்மொழி களுமே
விருத்தி பெறச்செய் கருத்துடை யவரும்
தினந்தொறும் புதுமையைத் தெரித்தே நம்மவர்
மனந்தொறும் அறிவை வளர்த்திடு பவரும்
அன்புடை யவரும் ஆகிய இந்தத்
துரைத்தனத் தார்செயல் உரைக்கடங் குவதோ ?
இவர்திற முங்கட் கியம்பிட நானார் ?
இக்கா லத்தும் புக்கா தரவொடு
நவமுறும் இவர்மொழி நாள்பல முயன்று
கற்றோ ரன்றி மற்றோர் முன்னை
நிலைமையி னின்று நீங்கினர் அல்லர் ;
விதம்வித மாவுறு புதுமைகள் பலவும்
கண்ணிற் கண்டு களிப்பதை அன்றி
எண்ணிச் செய்வலி இயைகின் றாரலர் ;
அப்போ தப்போ தரசர்பால் உறுவன

71. கும்பசம்பவர் - அகத்தியர்.

எப்போ துந்தெரிந் திடுவார் அல்லர் ;
எச்சம யத்திடை என்வந் துறுமோ
என்றே நடுங்கு கின்றார் சிலரே ;
ஆகையால் தமிழோ டரசர்தம் மொழியும்
ஓகையால் அறிந்தோர் உவப்புடன் அன்னோர்க்
காவன வற்றை அடிக்கடி அவையின்
மேவுற உணர்த்தி விளக்குக; அன்றியும்
இன்றி யமையா தொன்றுபன் னூலை
ஆங்கிலே யத்திருந் தருந்தமிழ் மொழியிற்
பாங்கில் ஏயப் பயன்பட எழுதி
எழுதா எழுத்தின் இயைவித் தவர்க்கு
வழுவா வண்ண மாண்புற உணர்த்தின்
ஆங்கவர் துன்பம் அகலும்
ஈங்கிதிற் செய்வ தில்லைவே றென்றே. (1)

(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

354. மாதனமென் றறிஞர்கொளும் அருந்தமிழை
முன்னையிலும் வளர்த்தற் கேற்ற
சாதனங்கள் பலஇருப்ப இவற்றானன்
கியற்றவல்லோர் தாமி ருப்ப
ஏதமிலாப் பொருள்நயந்தேர்ந் தகமகிழும்
பேரறிஞர் இருப்ப இந்தப்
பூதலமீ திம்மொழிதான் பெருகாமல்
அருகலென்ன புதுமைத் தாமால் ? (2)

355. ஆரியமென் றியம்பலுறும் அருந்துணையை
அணைந்திலகும் அமுதத் தீஞ்சொல்
நேரியசெந் தமிழ்மடந்தை அகங்குளிர்ந்து
முகமலர்ந்து நிலைபெற் றோங்கக்
சூரியநன் மதியரசர் மொழிப்பொருளை
அளித்தணிந்து குலவச் செய்திப்
பாரியல அளித்திடின்நம் காரியங்கள்
தடையின்றிப் பலிக்கு மன்றே. (3)

---

354. அருகல் - குறைதல்.
355. அரசர் மொழி - ஆங்கிலம்.

356. பன்மொழி நூல் களைமுயன்று மொழிபெயர்த்துப்
பலரும்வெளிப் படுத்த லாலிம்
மன்மொழிதான் நாட்குநாள் வளர்ந்தோங்கு
கின்றதிந்த வகைசெய் தானந்
தென்மொழியும் பெருகுமெனற் கையமெவன்
இவ்வண்ணம் செய்வேம் என்று
முன்மொழிவோர் தமக்கும்பின் மொழிவோர்க்கும்
நினைவூட்ட மொழிந்தேன் மன்னே. (4)

(கட்டளைக் கலித்துறை)

357. நானுங் களுக்கு மொழிவதென்
னேஇந்த நாட்டின்மொழிப்
பால்நுங் கருத்தை அமைத்தே
அவையிற் பகரின்மலை
மானும் துயரங்கள் மாயும்பல்
லோரும் மகிழ்பெறுவர்
தேனுஞ் சுவைபெறு பாலும்
கலந்த செயலொக்குமே. (5)

358. விரும்பி அரசர் மொழிபடிப்
போரினும் வேட்கைமரீஇக்
கரும்பிற் சுவைபெறு தென்மொழிப்
பால்தம் கருத்தமைத்தே
திருந்தப் படித்திடின் தாமேபன்
னூல்கள் தெரிதிறமை
பொருந்தி இருமைப் பயன்மிக
மேவுவர் பொய்யி தன்றே. (6)

---

356. மன் மொழி - அரசாங்க மொழியாகிய ஆங்கிலம். தென் மொழி - தமிழ்.

357. அவையில் ; சபையில். மானும் - ஒக்கும்.

மொழிபெயர்ப்புப் பாடல்கள்

(நேரிசை ஆசிரியப்பா)

359. எதுமுத லயனால் இயற்றப் பட்டதோ
எதுசொரி அவியை இமையவர்க் களிப்பதோ
எதுகன விடையவி யினைச்சொரி வதுவோ
எதுபகல் தருமோ எஃதிர வளிக்குமோ
எதுசெவிப் புலனாகும் இயல்பினை மருவி
எங்கும் வியாபித் திருக்கின் றதுவோ
எஃதெலாப் பூதப் பகுதியா இயைவதோ
எதனாற் பிராணிகள் எல்லாம் பிராணனோ
டியைந்தன வாக இயம்பப் படுமோ
அத்தன் மையன வாயுஞா னேந்தியத்
தறியப் படுநவு மாய
எட்டுறுப் புடையவவ் விறைவன் புரக்கவே.

(நேரிசை வெண்பா)

360. கற்றவர்கள் நெஞ்சுவக்கும் காறபிந யத்துணர்ச்சி
உற்ற திருத்தமென உன்னேனால்—தெற்றெனவே
கற்றாலு மாய்ந்தொருவன் கண்டிடற்குத் தன்றகுதி
வற்றாகா தால்தன் மனம்.

---

359. சாகுந்தலத்திலுள்ள நாந்தி சுலோக மொழிபெயர்ப்பு இது.
எது அயனால் முதலில் படைக்கப்பட்டதோ, எது சாத்திர விதிப்படி ஓமஞ் செய்யப்பட்ட அவியைத் தேவர்களிடத்துச் சேர்ப்பிக்கிறதோ, எது ஓமஞ் செய்கிறதோ, எது பகலிரவைச் செய்கின்றதோ, எது காதாற் கேட்கப்படுங் குணத்தையுடையதாயெங்கும் வியாபித்திருக்கிறதோ, எதை எல்லாப் பூதப் பகுதியாகச் சொல்லுகிறார்களோ, எதனாலே பிராணிகளெல்லாம் பிராணனோடு கூடியவையாகின்றனவோ, அப்படிப்பட்டனவும் காணப்படுவனவுமாகிய எட்டு வடிவங்களையுடைய அவ்வீசன் உங்களைக் காக்கட்டும் என்பது இதன் பொருள்.

360. மற்றொரு சுலோகார்த்தம்: கற்றோர்க்கு மகிழ்வுண்டாகிற வரையில் அபிநயவறிவைத் திருத்தமுற்றதாக நினையேன். ஒருவன் நன்றாகப் படித்திருப்பினும் தன்னுடைய மனமே தன் யோக்கியதை விஷயத்தில் பிரமாணமாகமாட்டாது.

361. செல்லென்ன யான்குருநேர் சீடன் குரனுரப்பி
நில்லென்ன நோக்கினள் நீர்க்கண்ணல்—புல்லென்னை
நீரோடு மேவணையாள் நேத்திரம்வெப் பாற்றும்விடக்
காரோடு சல்லியத்திற் காண்.

362. அன்றியமூக் கடைந்தவுடை மடியினில்வீ
ணையைவைத்தேன் அபிதா னத்தோ
டொன்றியபா டலைப்பாடற் காசையுடை
யவளாகி ஊற்று கண்ணீர்
துன்றிநனைந் திடுநரம்பை வருத்தமுற்றுத்
திருத்துபுதான் தொடங்கு பண்ணின்
நன்றியலுந் தானமிசை தெனலையடிக்
கடிமறந்துள் நலிவாள் கண்டாய்.

(கட்டளைக் கலித்துறை)

363. நேரார் பதத்துப் புனைவிலங்
கால்அயம் நீங்கினநிற்
சேரா துலர்க்கருள் சாசனத்
தாற்செம்பு தீர்ந்தவென்றால்
ஏரார்நின் னுட்டிடைப் போசஇத்
தோலன்றி யானிதமும்
நீரா தரத்தோ டெடுப்பமற்
றியாது நிகழ்த்துவையே.

---

361. சாகுந்தலப் பாடலின் மொழிபெயர்ப்பு.

362. மேகசந்தேசப் பாடல் ஒன்றன் மொழிபெயர்ப்பு.

363. தோல் பையில் நீர் எடுத்து வந்த அந்தணன் ஒருவனை, "ஏன் இதில் நீர் எடுத்து வருகிறாய்?" என்று கேட்ட போஜ மன்னனுக்கு அவ் வந்தணன் கூறியது. நேரார் - பகைவர். அயம் - இரும்பு. ஆதுலர்க்கு - இரவலருக்கு. சாசனம் - பட்டயம். ஆதரத்தோடு - அன்போடு.

364. கொடையிற் சிறந்தனை என்றுனை
யாவரும் கூறலென்னே
நடையிற் சிறந்த பரநா
ரியரொடு நண்ணலர்க
ளிடையிற் சிறந்தமை முன்னொடு
பின்னின்றும் ஈந்திலைநீ
தொடையிற் சிறந்த புயபோச
ராச சுகோதயனே.

(வெண்பா)

365. பிரியவந்த தென்கொலென்று பேதுறேல் பேதாய்
பெரியஅற நூலனைத்தும் பேசும்—உரியபொருள்
யாவுந் தவறிலவேல் எஞ்ஞான்றும் வெந்நரகம்
யாவும் கலந்துறுவோம் யாம்.

(அறுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்)

366. மீகாமன் செயல்முறையும் பிறழ்ந்ததுவீழ்ந் தனதுடுப்பு
மீன்தோன் ருமல்
ஆகாயம் மறைத்தபுயல் அம்புதியோ கடக்கரிதால்
அந்தோ மார்க்கம்
ஏகாத விதம்அலைகள் உடையதுநௌ இதைக்கரைப்பால்
ஏகச் செய்து
நீகாஅ லதுகவிழ்இவ் விரண்டும் உன்றன் கையனவாம்
நிகழ்த்துங் காலே.

---

364. பரநாரியருக்கு முன்னும், நண்ணலர்களுக்குப் பின்னும் (முதுகும்) ஈந்திலை. தொடை - மாலை.

365. தகாத ஒருத்தியோடு இணைந்து வாழ்ந்த ஒருவன் உயிர்நீங்கும் தருணத்தில் அவள் வருந்த அவன் பாடியது. நாம் நரகத்திலும் கூடி வாழ்வோம் என்று ஆறுதல் கூறுகிருன்.

366. மீகாமன் - மாலுமி. அம்புதி - கடல். நௌ - தோணி. காலே - காற்றே.

(தரவு கொச்சகக் கலிப்பா)

367. நீயோ நிகரிலிநின் நேருளதா டிப்படிவம்
நீயோ உயர்வுடையை நின்மேல் உனதுகுடை
நீயோ அசகாயன் நின்னுடைய கையதுவாள்
தாயோ எனுமரங்க நாத தராபதியே.

(வெண்பா)

368. அளவில்பதந் தம்மை அளவில்நாள் ஆராய்ந்
தளவில் அறிஞர் அறைந்தார்—அளவில்கவி
ஏதமில்பன் னூல்கள் இசைத்துமகிழ்ந் தேன்அரங்க
நாத பதயுகத்தால் நான்,

பதிப்புப் பாட்டல்கள்

நச்சினார்க்கினியர்

(அறுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்)

369. எவனுலை வாயிலைவந் தமுதவா யுடையனென
இயம்பப் பெற்றோன்
எவன்பண்டைப் பனுவல்பல இறவாது நிலவவுரை
எழுதி ஈந்தோன்
எவன்பரம உபகாரி எவன்நச்சி னார்க்கினியன்
எனும்பே ராளன்
அவன்பாத மிருபோதும் எப்போதும் அலர்கவென
தகத்து மன்னே.

---

367. நீ நிகரில்லாதவன்; ஆயினும் உன்னை ஒப்பது கண்ணாடியில் தோன்றும் உன் உருவம். நீ உயர்வுடையாய்; ஆயினும் உனக்குமேல் உயர்ந்திருப்பது உன் குடை. நீ வேறு ஒரு சகாயம் வேண்டாதவன்; ஆயினும் உன் கையில் துணையாக இருப்பது வாள்.

368. பதம்தம்மை - சொற்களை. அளவில் அறிஞர் அளவில் கவி அறைந்தார். பதயுகம் - இரண்டு அடி; இரண்டு சொற்கள் என்பது தொனி. பல பதங்களை ஆராய்ந்து அறிஞர் பலகவிகள் பாடினர்; நான் இரண்டே பதங்களைக்கொண்டு பல நூல்களை இயற்றினேன் என்றபடி.

369. ஐயரவர்கள் பதிப்பித்த நூல்களின் முகவுரைகளில் சில புதிய பாடல்களை இயற்றி இணைத்திருக்கிறார்கள். அவற்றை இது முதற் காணலாம். இது சீவக சிந்தாமணி, நச்சினார்க்கினியர் வரலாற்றின் முன் புள்ளது. (1887)

பத்துப் பாட்டு

370. அண்டர்கள் உறுகண் விண்டிட முந்நீர்
அலைகடல் குடித்தும் மலைநிலம் அழுத்தியும்
தென்றிசை உயர்ந்த நொய்ம்மை போக
அப்பணி சடையாற் கொப்பவீற் றிருந்தும்
பன்னு வலர்புகழ் தென்னா டாண்ட
இராவணன் றனையவண் இராவணம் போக்கியும்
இலங்குறு பொதியில் விலங்கல்வாழ் பெருந்தவத்
தகத்தியன் புரந்தருண் மகத்துவ மிகுத்த
அமிழ்தினிற் சிறந்த தமிழெனு மடந்தை
கந்தரத் தணிமணிக் கலனர சென்ன
உத்தமர் புகழுமிப் பத்துப் பாட்டு

புறநானூறு

371. முன்னா ளிடையே யிந்நா டாண்ட
காவலர் பல்லோர் பாவலர் பல்லோர்
மாசரி தத்தை ஆசற விளக்கிச்
சொற்சுவை பொருட்சுவை துவன்றியெஞ் ஞான்றும்
ஒப்புமை இல்லாத் திப்பிய நடையுடைத்
திறப்பா டமைந்தஇப் புறப்பாட் டுக்கள்
தெய்வ வணக்கம் செய்யுமின் என்பவும்
அறத்தின் பகுதியை உறத்தெரிப் பனவும்
பாவ வழியை நீவல்நன் றென்பவும்
இம்மைப் பயனொடு மறுமைப் பயனைச்
செம்மையின் வகுத்துத் தெரிவிப் பனவும்
அந்தணர் இயல்பைத் தந்துரைப் பனவும்
அரச நீதியை உரைசெய் வனவும்
வணிகர் இயல்பைத் துணிவுறுப் பனவும்
வேளாண் மாக்களின் தாளாண் மையினை
இயம்பு வனவும் வயம்புரி போர்க்கு
முந்துறும் அரசரைச் சந்துசெய் வனவும்
ஒற்றுமைப் பயனைச் சொற்றிடு வனவும்

370. 1889-ஆம் ஆண்டில் பதிப்பித்த பத்துப் பாட்டு முகவுரையிற் கண்டது.

371. புறநானூறு முகவுரை (1894).

வீரச் சிறப்பை ஆரத் தெரிப்பவும்
இல்லற மாகிய நல்லறம் உரைப்பவும்
துறவற மதனைத் திறவிதின் தெரிப்பவும்
மிடித்துன் பத்தை எடுத்துரைப் பனவும்
வண்மையும் தண்மையும் உண்மையும் திண்மையும்
என்னும் இவற்றைப் பன்னுகின் றனவும்
அளியையும் ஒளியையும் தெளிவுறுப் பனவும்
தம்மைப் புரந்தோர் தாமாய்ந் திடவே
புலவர்கள் புலம்பி அலமரல் தெரிப்பவும்
நட்பின் பயனை நன்கியம் புநவும்
கல்விப் பயனைக் கட்டுரைப் பனவும்
நீர்நிலை பெருக்கென நிகழ்த்துகின் றனவும்
மானந் தன்னைத் தாம்நன் குரைப்பவும்
இளமையும் யாக்கையும் வளமையும் நிலையா
என்றே இசைத்து நன்றேய்ப் பனவும்
அருளுடை மையினை மருளறத் தெரிப்பவும்
தரமறிந் தொழுகென் றுரனுற விதிப்பவும்
அவாவின் கேடே தவாவின் பென்பவும்
இனியவை கூறல் நனிநலன் என்பவும்
உழவின் பெருமையை அழகுற உரைப்பவும்
நன்றி அறிக என்றிசைப் பனவும்
கொடுங்கோன் மையினை விடுங்கோள் என்பவும்
தவத்தின் பெருமையைத் தவப்பகர் வனவும்
மடியெனும் பிணியைக் கடிமின் என்பவும்
கொலையெனும் பகையைத் தொலைமின் என்பவும்
நல்லோர்ப் புணர்ந்து புல்லோர்த் தணந்து
தாழ்வொன் றின்றி வாழ்மின் என்பவும்
சுற்றம் புரக்கும் நற்றிறம் உரைப்பவும்
கற்பின் திறத்தைக் கற்பிப் பனவும்
மக்கட் பேற்றின் மாண்புரைப் பனவும்
கணவனை இழந்த மணமலி கூந்தலார்
தீப்பாய் செய்தி தெரிவிப் பனவும்
கைம்மை விரத வெம்மை விரிப்பவும்

இன்னும் பற்பல பன்னு வனவுமாய்ச்
செப்புநர் எவர்க்கும் எய்ப்பிடை வைப்பாய்
அரும்பெறன் மரபிற் பெரும்பயன் தருமே.

(வெண்பா)

372. எண்ணிய காரியங்கள் எல்லாம் இனிதியற்ற
அண்ணிய மாந்தர் அகமகிழப்—பண்ணி
அறிவடையச் செய்திட்டே ஐங்கரனே தீயோர்ப்
பிறிவடையச் செய்தி பெயர்த்து.

(ஆறுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்)

373. வறனுண்மிக் குலர்ந்துபசி வருத்தமிக வாடுமுயிர்
வருக்கஞ் செவ்வை
உறநானி லத்துமுகில் மழைபொழிந்தா லெனவைங்கை
ஒருகோட் டெந்தாய்
புறநானூற் றிருநூற்று மிசையுறு மையைந்தின்மிகைப்
பொலிபாக் கட்கோர்
உறநானற் பதவுரையும் குறிப்புரையும் எழுதவருள்
உதவு வாயே.

மணிமேகலை

(ஆசிரியப்பா)

374. உலகமார் பன்னூற் றிலகமாய் இலகி
நவையறு மொன்பான் சுவைபுணர்ந் தினிமைத்
திரட்டுறு மைந்து பொருட்டொடர் நிலைகளுள்
அமிழ்தினிற் சிறந்த தமிழெனும் மடந்தை
அணிமே கலையாம் மணிமே கலைதான்,
நச்சும் பெருமை முச்சங் கத்துட்

---

372. **புறநானூறு,** இரண்டாம் பதிப்பைச் சித்தம் செய்தபோது பாடியவை. இதுவும் அடுத்த பாட்டும் பாடிய தேதி, 13-10-1906.

373. பாடிய தேதி, 14-10-1906. வறனுல் - பஞ்சத்தால்.

374. **மணிமேகலை** - முகவுரை 1898.

கறைமிடற் றிறைவன் இறையனா ரெனும்பெயர்
வாய்ந்தே புலம்பல ஆய்ந்த சங்கத்
தொல்லிசை பலவுறு நல்லிசைப் புலவருட்
சீலமார் மதுரைக் கூல வாணிகன்

சீத்தலைச் சாத்தனா ரென்னும் புலவர் பெருமானால் அருளிச் செய்யப் பட்டது.

தியாகராச லீலை

(கட்டளைக் கலித்துறை)

375. தேனாட்சி செய்கவி யானின் செயன்முற் றும் செப்புமுன்
மீனாட்சி சுந்தர வள்ளலை எங்கள் விழுப்பொருளை [னே
வானாட்சி செய்யப் புரிந்ததென் னேமன் வடிவுகொடு
தானாட்சி செய்திரு வாரூர்த் தியாகசிந் தாமணியே.

(எழுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்)

376. எண்ணிய பலவும் மாணவர்க் கன்பின்
ஈந்திடு நிதிதமிழ் விளங்க
நண்ணிய புகழ்மீ னாட்சிசுந் தரநன்
னாவலன் நன்கினி தாய்ந்து
பண்ணிய வீதி விடங்கர்தம் ஆடற்
பனுவலைப் பதிப்பிக்க இயைந்த
புண்ணிய மதனை நினைதொறும் எனது
புந்திமிக் கின்புறு மாலோ.

நன்னூல்—மயிலைநாதர் உரை

377. நன்னூலி னோர்மயிலை நாதருரை முன்னுரையைச்
சின்னாளும் தேரேனாட் டேர்ந்தெழுத—எந்நாளும்
ஓவாது போற்றும் ஒருவா வுயர்மதுரைத்
தேவா கருணையது செய்.

---

375. தியாகராச லீலை, முகவுரை 1905.

376. தியாகராச லீலை, முகவுரை

377. மே, 1918.

பெருங்கதை

(ஆசிரியப்பா)

378. தேமலி கயிலைச் சிலம்பில்வீற் றிருக்கும்
பாமலி உமையோர் பாகத் தண்ணலும்
குருகு பெயர்க்கிரி கொன்றே தன்னினைந்
துருகு பவர்க்கருள் முருக வேளும்
சகத்தியல் முனைஇத் தலைவனை அறிந்துயர்
அகத்தியன் முதலாம் அருந்தவப் பெரியரும்
நன்றி அறிவொடு துன்றுபு பல்குணம்
மேவுமுச் சங்க நாவலப் பெரியரும்
விரசு பெருங்கொடை அரசர் பலரும்
அப்பால் விளங்கிய எப்பா லவரும்
வாய்ந்த அன்புடன் ஆய்ந்த செழுந்தமிழ்
பொங்குமண் டலத்துட் கொங்குமண் டலத்தில்
உறும்பல வளமார் குறும்புநன் னாட்டில்
எப்பனு வலையுந் தப்புத லின்றி
அங்கையா மலகமா அறிபெரி யோர்செறி
மங்கைமா நகரின் மஞ்ஞையம் பரிமீத்
தங்குவேள் எனவாழ் கொங்கு வேளிர்
மலர்தொறுஞ் சென்று நிலவிய மதுவின்
துளிக்கணம் தொகுக்கும் அளிக்கணம் பொருவ
நூல்பல வற்றிற் சால்புறக் குழுமிய
சொன்னயம் பொருணயந் தொடைநய மாதி
எந்நயங் களுமமைந் தினிமை தோன்ற
அற்றைக் காலத் தமைதியைப் பிற்றைக்
காலத் தவர்தாங் கண்கூ டாக
நாடி உணருமோர் ஆடி பொருவவும்
காப்பிய இயலெலாம் யாப்புற அமையவும்
பாவிக அணிசுவை மேவிநன் கிலகவும்
புலவர் கூட்டுணும் புத்தமு தாக
உதயணன் சரிதை ஓதினர் அதுபெருங்

---

378. **பெருங்கதை**, முகவுரை, 1924.

கதைகதை உதயணன் கதைப்பெயர் பெற்றித்தான்
பிறந்தமண் டலத்தின் பெயர்ப்பொருட் கேற்பச்
சிறந்தவின் சுவைத்தாய்த் திகழ்ந்தில குறுமே.

தக்கயாகப் பரணி

(வெண்பா)

379. இருந்தமிழே-உன்னால் இருந்தேன் இமையோர்
விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன்—திருந்த
உதிப்பித்த பன்னூல் ஒளிர அடியேன்
பதிப்பிக்க வேகடைக்கண் பார்.

ஒட்டக்கூத்தர்

(எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

380. கன்றாடுங் கரதலத்துச் சிவகாமி அம்மை
கண்டுகளித் திடத்தில்லைக் கடிநகரிற் கனக
மன்றாடுங் கூத்தனைப்போல் இருமொழிக்கும் தலைமை
வாய்ந்துவிறற் புலவர்சிகா மணியாகி விளங்கி
என்றாடுங் குலத்தேவர் மூவர்வழி படவைந்
தியற்றிஇணை யிலியாகிச் சருவஞ்ஞ னாகி
நின்றாடும் புகழ்க்கூத்தன் கவிச்சக்ர வர்த்தி [னே.
நேர்மையினை எடுத்துரைக்கும் நீர்மையன்கொல் யா

---

379. **தக்கயாகப் பரணி,** முகவுரை; 1930. இதன் முதல் இரண்டடி 'தமிழ்விடு தூது' என்னும் பிரபந்தத்தில் உள்ள கண்ணி.

380. **தக்கயாகப் பரணி,** நூலாசிரியர் வரலாறு. கன்று - வளை. இரு மொழி - வட மொழி, தென் மொழிகள். புலவர் சிகாமணி - தேவர் தலைவன், புலவர் தலைவன். என்று ஆடும் குலத்தேவர் மூவர் - சூரியனைக் கோயிலாகப் படைத்த திரிமூர்த்திகள்; சூரிய குலத்திலுதித்த மூன்று சோழர்கள்; விக்கிரம சோழ தேவர், குலோத்துங்க சோழ தேவர், இராச ராச சோழ தேவர் என்னும் மூவர். ஐந்து - பஞ்ச கிருத்தியம்; மூவருலா, குலோத்துங்கன் பிள்ளைத் தமிழ், தக்கயாகப் பரணி என்னும் ஐந்து நூல்கள். இணையிலி - ஒப்பற்றவன். சருவஞ்ஞன் - எல்லாமறிந்தவன்; சர்வஞ்ஞ **கவி** என்பது ஒட்டக் கூத்தர் பெயர். ஆடும் - நடனமிடும், சொல்லும்.

381. எண்ணுமிரு வேறுலகத் தியற்கையெனுங் குறளை
எதிர்மறுத்தே இருபொருளும் ஒருங்குபெறுங் கூத்த
கண்ணுபல குணக்குன்றும் வரராச ராசன் [ன்
கரசிரகம் பிதஞ்செய்யக் கவிஞர்குழாங் களிப்பப்
பண்ணுமிரு மொழிச்சுவைகள் நண்ணுதக்க யாகப்
பரணியினைப் புகழ்ந்திடுகோ முரணிலதன் கண்ணே
அண்ணுசுவை பலவிளங்க அரியவுரை செய்த
ஆசிரியன் பெரும்புலமை பேசிடுகோ யானே.

உரையாசிரியர்

(கட்டளைக் கலித்துறை)

382. பாரும் விசும்பும் புகழ்தக்க யாகப் பரணியின்பால்
ஆருஞ் சுவைபல ஆரும் தெளிய அணியுரைசெய் [றன்
சீருஞ் சிறப்பும் உடையோய் இருமொழிச் செல்வநின்
பேரும் தெரிந்திலன் என்செய்கு வேன்இந்தப் பேதை
[யனே.

இரண்டாம் இராசராச சோழன்

(வெண்பா)

383. தெங்கார் உறந்தைபுகார் தென்பழையை வீறுதஞ்சை
கங்கா புரம்புரந்த காவலவன்—மங்காப்பேர்
வாய்ந்தவிறற் கண்டன் வரராச ராசன்சீர்
ஆய்ந்துரைக்க வல்லேன் அலன்.

384. குணமழியா தென்பர்தமிழ் கோதாட்டும் நின்றன்
குணம்எங் கொளித்துவைத்தாய் கொல்லோ—குண
மன்னர் வழுத்தும் வரராச ராசஅஃ [மலையே
தின்னஇடம் என்றெற் கியம்பு.

---

381. **தக்கயாகப் பரணி,** நூலாசிரியர் வரலாறு. வரராச ராசன் - இரண்டாம் இராச ராசன்.

382. **தக்கயாகப் பரணி,** உரையாசிரியர் வரலாறு. ஆரும் சுவை - நிரம்பும் சுவையை.

383, 384. **தக்கயாகப் பரணி,** இரண்டாம் இராசராச சோழன் வரலாறு.

பிள்ளையவர்கள் சரித்திரம்

385. எல்லாக் கலைக்கும் இறைவா இயற்சங்க
நல்லார்க் கரசேநன் நற்கவிசெய்—வல்லார்க்
கரையனென் ஆசான் அரிய சரிதம்
வரைய அருள்வாய் வரம்.

தொண்டர் துதி

386. என்னைப்பெண் ஆக்கும் இறையும் அரம்பையரை
என்னைக்கண் டாங்குணர்ந்த ஏந்தலும்—மன்பதியை
என்றும் துணைகொண்டோன் ஈறின்மணி வாசகனும்
என்றுந் துணையாம் எனக்கு.

ஞானசம்பந்தர்

387. எனக்குநிகர் யாரே இருங்காழி வைப்பில்
தனக்குநிகர் தானேயாய் வந்தோன்—மனக்கினிய
முந்நூல் நவின்ற முதுமறையோன் தாள்போற்றி
எந்நாளும் பெற்றேனால் இன்று.

நாவுக்கரசர்

388. இன்றே பெரும்பயனை எய்தினேன் பாடல்வகை
இன்றே எலாமும் இயம்பினேன்—இன்றே
நடராசன் நல்லருட்கு நானிலக்கம் ஆனேன்
திடராசன் சொல்லரசைச் சேர்ந்து.

சுந்தரர்

389. சேர்ந்தேன் திருநாவற் செல்வன் திருவடியைச்
சேர்ந்தேன் இனியகவி செப்பும்வலி—சேர்ந்தேன்
கல்வி அறிவொழுக்கம் காதலித்தோர் தங்களையும்
பல்விதஇன் பங்கள் படைத்து.

---

385. பிள்ளையவர்கள் சரித்திரம் எழுதத் தொடங்குமுன் பாடியது.

386. இறை – ஞானசம்பந்தர். ஏந்தல் – நாவுக்கரசர். பதியை – சிவபெருமானை. கொண்டோன் – சுந்தரர்.

387. காழி – சீகாழி.

மாணிக்க வாசகர்

390. படைத்துச் சலித்தான் பதுமத்தோன் காலன்
துடைத்துச் சலித்தான் தொழிலில்—உடைத்தாய
துன்பமெலாம் போக்கியருள் சொல்வாத வூர்வந்த
நன்பனவ னென்செய்கேன் நான்.

அறுபத்து மூவர்

391. நானடைந்த நன்மைஎவர் நண்ணினரால் ஓர்மூன்று
தானடைந்த ஈற்றறுபான் சான்றோரைத்—தேனடைந்த
சொல்லால் துதித்தின்பம் துய்த்தேன் பலவின்பம்
எல்லாம் அடைந்தேனிந் தால்.

392. இதுவேநன் மார்க்கம் இதுவேநல் லின்பம்
இதுவே கவிபாட லீயும்—மதுவேய்
செழுங்கொன்றைத் தாரான்றன் சேர்ந்த அடியார்
அழுங்கலில்சீ ரோதும் அது.

பழகிய பெரியோர்

அம்பலவாண தேசிகர்

[இவர் திருவாவடுதுறை ஆதீனத்தில் 17-ஆம் பட்டத்தில் தலைவராக இருந்து விளங்கியவர். பல கலைச் செல்வர்.]

(ஆசிரியப்பா)

393. அந்தி வண்ணன் அடியரைப் புரக்கத்
தந்தி உரித்த தலம்முத லாய
பலதல தரிசனம் பண்புடன் இயற்றி
மாதங்க வத்திரன் ஆதிவா னவர்க்கு
மாதங்க வத்திர வகைமிக அளித்தே
அனமுந் தனமும் ஆடையும் மணியும்

393. கடிதப் பாட்டு. தந்தி உரித்த தலம் - வழுவூர். மாதங்க வத்திரன் - கணபதி. மாதங்கவத்திரம் - பீதாம்பரம்.

கனமுந் தருவுங் கடுப்ப அடுத்தோர்க்
கன்புடன் ஈந்தே அனைவருங் களிப்ப
இன்புடன் இரசத இரதக் காட்சிக்கு
இடைமா மருதிற் கினிதடைந் தமைகேட்டு
அடைமா மகிழ்ச்சிக் களவதே இன்றே
ஆயினும் அம்பல வாண தேசிக
தாயினும் இனியாய் தயைக்கொரு நிலையே
அருங்கலை விநோத அடுத்தவர்க் கெளியாய்
தீரர்கள் சிகாமணி செல்வருட் செல்வ
தருமம் புரக்கும் தலைமைசால் நிதியே
நெருநல் வந்து நின்சமு கஞ்சார்ந்
தின்றொரு நாளையாண் டிருக்க
நேரா மையிற்றுயர் நிறைகுவன் யானே. (1)

(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

394. திண்மையால் வடமொழிதென் மொழியாளர்க்
காத்தளிக்கும் செயலால் யார்க்கும்
அண்மையால் அளவாத அன்பினால் அயல்நாடும்
அடைந்து மேவும்
ஒண்மையால் அளப்பரிய ஊக்கத்தால்
உற்றவரை உவந்துகாக்கும்
வண்மையால் விளங்குறும்அம் பலவாண
தேசிகயான் வகுப்பக் கேண்மோ. (2)

395. இம்மகர மதியிரண்டாந் தேதிவரு திருமுகமீண்
டெய்தப் பெற்றேன்
அம்மகர வாதநின தன்புடைமை அறிந்தின்பம்
அடைந்திட் டேனால்

---

393. கனம் – மேகம். தரு - கற்பகம். இரசத இரதம் - வெள்ளி ரதம்.
394-6. 29-1-1908 அன்று எழுதிய கடிதப் பாடல்கள். ஒண்மை - புகழ்.
395. கர்வாத - கொடுப்பதற்கு மறைக்காத.

வெம்மகர கேதனனை வென்றருள்பஞ் சாக்கரப்பேர்
விமலன் நாளில்
கம்மனைய கரமுடையாய் அவண்வந்து
கண்டெவையும் களிப்பேன் மன்னோ. (3)

396. தூசிலா அரையரைத்தென் மதுரையில்வென்
றவர்க்கம்பொன் சுரந்த ளித்த
மாசிலா மணிதிருநாட் காட்சிதரி
சனம்புரிய வாஞ்சை மிக்கும்
ஏசிலா அரசர்பரா தீனனா
தலின்வருதற் கில்லை யாலோ
காசிலா தவரைஅளித் திடுதுறைசைக்
கற்பகமே கனகக் குன்றே. (4)

397. சீர்பூத்த தென்கலைக்கும் வடகலைக்கும் இசையாய
செழுங்க லைக்கும்
வார்பூத்த பிறகலைக்கும் கொள்கொம்பாம் சயிலாதி
மரபென் றோதும்
ஏர்பூத்த அணிமலையின் மணிவிளக்கே அடைந்தவர்கட்
கெய்ப்பில் வைப்பே
கார்பூத்த கொடையுறும்அம் பலவாண தேவனென் று
கழறக் கேண்மோ. (5)

398. அங்கிருந்திங் கடைந்ததினம் முதலாக நினதியல்பை
ஆராய்ந் தாராய்ந்
திங்கிருந்தே நினைந்துநினைந் திருத்தலினால் எழுதமறந்
திட்டேன் அந்தோ

395. மகரகேதனன் - காமன். பஞ்சாக்கரப் பேர் விமலன் நாள் - நமசிவாய மூர்த்தியின் குருபூசைத்தினம். கம் - மேகம்.

396. தூசு இலா அரையர் - சமணர். வென்றவர் - சம்பந்தர். அவருக்குத் திருவாவடுதுறை இறைவன் ஆயிரம் பொன் வழங்கினான். காசு இலாதவரை - பணம் இல்லாதவரை; குற்றம் அற்றவரை.

397-400. இவை 20-7-1908 அன்று எழுதிய கடிதப் பாடல்கள்.

397. சயிலாதி - நந்தி.

பங்கிருந்த பெருநலத்தோ டேகநா யகர்மகிழப்
படிகொண் டாடத்
தெங்கிருந்த பொழிலிடைமா மருதில்விழா ஆற்றுதிறச்
செம்மை வாய்ந்தோய். (6)

399. முத்திக்கு வித்தாய தமிழ்மறையின் பங்களைநீ
முறையே யார்க்கும்
தித்திக்கும் படிநவிலும் அருமையும்பன் னூலாயும்
சிறப்பும் நூற்கும்
உத்திக்கும் பொருந்துறவே புலவர்கள்பால் நவில்வழக்கும்
உதவும் மாண்பும்
எத்திக்கும் புகழ்ந்திடுமம் பலவாண தேவவெனக்
கியம்பப் போமோ. (7)

400. ஆயினுஞ்சொற் றிடவேண்டு மெனத்தூண்டு
மாதரத்தால் அறைந்திட் டேனால்
தாயினுமன் பினின்மிகுந்தோய் தாவரநூ லுணர்அரங்கா
சாரி அண்ணல்
நீயினிது பார்த்திடத்தான் இயற்றியநூ லொன்றங்கு
நேர்ந்தே னென்றான்
மேயினதை ஒய்வுள்ள வேளைகளிற் பார்த்தளிக்க
வேண்டு வேனால். (8)

401. மாமேவு வடமொழிதென் மொழிவாணர் இசைவாணர்
மகிழ்ந்து போற்றக்
காமேவு பெருவண்மை மருவியவர்ப் புரக்குமருங்
கலைவி நோத
பாமேவு புகழுடையாய் ஆவடுதண் டுறையென்னும்
பதியின் மேய
கோமேவு விறன்மிகுமம் பலவாண தேசிகயான்
கூறல் கேண்மோ. (9)

398. பெருநலம் - இடைமருதில் எழுந்தருளியிருக்கும் பெருநலமா முலையம்பிகை. ஏகநாயகர் - இடைமருதில் உள்ள உற்சவமூர்த்தி. படி - உலகம்.

401. இதுமுதல் மூன்று பாடல்கள் மகா வித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் குமாரராகிய சிதம்பரம் பிள்ளைக்கு ஒரு வீடு அளிக்க வேண்டுமென்று தெரிவித்துப் பாடியவை.

402. இனமளித்தற் கியலாமல் தனையடைந்த மாணுக்கர்க்
கிரங்கி என்றும்
அனமளித்தும் தனமளித்தும் அரியபல நூலளித்தும்
அவையா ராயும்
மனமளித்தும் விளங்கியசிர் மீனாட்சி சுந்தரநா
வலவர் கோமான்
முனமளித்த அரும்புதல்வன் இடமின்றி வருந்துதலும்
முறைமை யாமோ? (10)

403. வரமளிக்கும் வள்ளலஞ்சல் நாயகியோ டினிதமரும்
மாயூ ரத்தில்
தரமளிக்குந் தென்மறுகில் நினதுதிரு மடத்தருகே
சார்ந்த தாகத்
திரமளிக்கும் வீடொன்று கட்டுவித்தே அவனிருக்கச்
செய்வித் தாள்வாய்
உரமளிக்கும் அடியவர்க்கு வீடளித்தல் நின்மரபிற்
குரிய தன்றோ? (11)

404. வான்பூத்த கயிலாய பரம்பரையிற் சயிலாதி
மரபிற் றேன்றித்
தேன்பூத்த சுவைபழுத்த தமிழ்மறையின்
பொருளையனு தினமுந் தேர்ந்தே
ஊன்பூத்த பவப்பிணியும் மிடிப்பிணியும் அடுத்தவருக்
கொழித்துப் போதிக்
கான்பூத்த நகர்வளரம் பல்வாண தேவகடைக்
கணிக்க வீதே. (12)

---

403. வள்ளல் – மாயூர நாதர்.

404. இதுமுதல் எட்டுப் பாடல்கள் ஒரு கடிதப் பாடல்கள். மகா வித்துவான் பிள்ளையவர்களின் குமாரராகிய சிதம்பரம் பிள்ளைக்கு ஒரு வீடு தருவதாக ஸ்ரீ அம்பலவாண தேசிகர் திருவுள்ளம் கொண்டிருப்பதை யறிந்து எழுதியவை இவை.

போதிக்கான் பூத்த நகர் - அரசவனம் உள்ள திருவாவடுதுறை.

405. இந்துமதி துணிவிருப தாங்கேதித் திருமுகமீண்
டெய்தப் பெற்றே
சந்தவரைக் குறுமுனியும் மதித்திடுமா றொருமூன்று
தலைச்சை லப்பால்
வந்தபெருந் தமிழ்ச்செல்வன் மீனுட்சி
சுந்தரநா வலவர் கோமான்
மைந்தனுக்கு வசதியளித் திடலாதி
தெரிந்துமிக மகிழ்வுற் றேனுல். (13)

406. அகத்தியனே குறியனின தருங்கவிநா வலன்நெடியன்
அவனோர் நூலே
சகத்தினிடை நவின்றனன்மற் றதுவுமற்ற
தென்பர்நினைச் சார்ந்தோன் யாரும்
மிகத்துதிக்க இயற்றியவை பலஅவையிந் நாள்மேன்மேல்
விளங்கும் தென்றல்
நகத்தினன்பன் னிருவர்க்கின் னவன்பலர்க்கா
சானிவன்சீர் நவிலற் பாற்றே. (14)

407. இன்னபெரு நாவலனின் மொழிப்படிநின்
னிடைப்பலஆண் டிருந்தென் போல்வார்க்
குன்னரிய பலநூலும் உளங்கொளுமா றன்புடனன்
குரைத்த லாலே
என்னவருத் தமுமின்றி இருக்கின்றேம் அவன்புதல்வற்
கில்ல மீய
நன்னரமை செயலில்லம் நினக்கன்றி யெவர்க்கிதனை
நவிலு வேமால். (15)

---

405. சந்தவரை - பொதியமலை. மூன்றுதலைச் சைலம் - திரிசிராமலை. வசதி - வீடு.

406. மகாவித்துவான் மீனுட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் திருவாவடு துறையில் 17-ஆம் பட்டத்தில் எழுந்தருளியிருந்த ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர் காலத்தில் இருந்தவர். ஆயினும் எல்லாக் குருமூர்த்திகளையும் ஒருவராகவே பாவிக்கும் மரபுபற்றி, 'நினது அருங்கவி நாவலன்' என்றார். ஓர் நூல் - அகத்தியம். தென்றல் நகம் - பொதியில்மலை. பன்னிருவர்க்கு ஆசான்.

407. செயல் இல்லம் - செயல் இல்லாதேம்.

408. பார்பூத்த பரிதியென விளங்கியடுத் தவர்துயரம்
பாற்றி ஓங்கும்
சீர்பூத்த துறைசையிலம் பலவாண தேசிகவிச்
செய்தி யைமுன்
பேர்பூத்த பலர்க்கெழுதிக் கைசோர்ந்தேன்
நாச்சோர்ந்தேன் பேசிப் பேசிக்
கார்பூத்த கொடையமைநின் திருமுகங்கண்
டல்லலொரீஇக் களித்திட் டேனால். (16)

409. நினையடைந்தோர்க் கொருகுறையு மிலையெனினும்
உளதொன்று நிகழ்த்து கென்னின்
அனையனைய வருட்குருசுப் பிரமணிய குருமணிநின்
அளவி லாற்றல்
தனைநிகரில் கொடையினைக்கல் வியைமனோ
தைரியத்தைச் சாந்தந் தன்னை
இனையபல வற்றையிவ ணிருந்துணர்ந்து
மகிழ்ந்திலனே என்ப தாமால். (17)

410. என்னமொழிந் திடினுமெனக் காரமை மீக்கூறும்
ஈது நிற்க
முன்னடைந்தோர் தமைப்பிரம ராக்கிமறைப்
பொருள்பலவும் மொழிந்தே பின்னர்
அன்னவரை மாலாக்கி யுடன்பீதாம் பரதரர்கள்
ஆக்கி நீசெய்
இன்னபரி சாதிகளைக் கலியாண சுந்தரன்வந்
தியம்பி னானால். (18)

411. மந்தரமா ளிகைவீதித் துறைசையிலம் பலவாண
வள்ள லேவாண்
கந்தரனே ரருள்மிகுசுப் பிரமணிய குருமணியால்
கவின்மீ னாட்சி

410. பிரமர் - அதிசயத்தினால் மயங்குபவர். மால் - மயக்கமுடை யோர்.

411. கந்தரம் - மேகம்.

சுந்தரநா வலன்கவலை இலனானன் அனையவன்பிற
 றோன்ற லாகி
வந்தருள்நீ அவன்புதல்வன் றனைக்காத்தல்
 வழக்குன்சீர் வாழ்க மாதோ. (19)

412. மாமேவு புகழ்த்திருவா வடுதுறைச்சுப்
 பிரமணிய வரன்பிற் றோன்ற
லாமேவி அனையவன்முற் றோன்றலின்பே
 ரடைந்திலங்கும் அண்ண லேஇப்
பூமேவும் அறிஞர்மதித் திடவரிய
 எளிதியற்றும் புண்ணி யாவின்
தேமேவு கொடைக்கரவம் பலவாண
 தேசிகயான் செப்பக் கேண்மோ. (20)

413. நேற்றுதய மிவணினிது சார்ந்தனன்நீ
 இடைமருத நிமலற் கன்பின்
ஆற்றுதிரு விழாச்சிறப்பும் இருகாலுந்
 திருவீதி அடையுஞ் சீரும்
சாற்றுபல இயலிசையும் குலவியசீர்த்
 தேவாரத் தழைப்பு மெல்லாம்
போற்றுநின திரும்பொறையும் பெருந்தகையே
 ஒருங்கெடுத்துப் புகல்வார் யாரே. (21)

414. தேவார நயங்களைநீ நாவார
 எடுத்துரைக்கும் சிறப்பும் சார்ந்த
மேவாரும் பணிகேட்டு வியப்பவுரைத்
 திடுநயமும் மெலிந்தோர்க் காக்கும்
காவாரும் கொடைச்சீரும் அகமலர்ந்து
 முகமலரும் கவினும் மற்றும்
ஓவாமல் எனதுளத்தில் இருந்துகனி
 வுறுத்துமிஃ துண்மை யாமால். (22)

---

412. இதுமுதல் 5 பாடல்கள் ஒரு கடிதத்தில் எழுதியவை. முற்றோன்றல் – 15-ஆம் பட்டத்தில் இருந்த அம்பலவாண தேசிகர்.

414. மேவார் – பகைவர்.

415. மாகநா யகனுதி வானவர்கள்
வழுத்தஇடை மருதில் வாழும்
ஏகநா யகனருளால் அவன்பணியும்
பிறபணியும் இயற்று வித்தே
பாகமார் பசுந்தமிழும் ஆரியமா
தியுமிலங்கப் பயிற்றிப் பல்லர்ண்
டாகமே வுகஎன்ப தன்றிஙினக்
கென்போல்வார் ஆற்றல் யாதே. (23)

(வெண்பா)

416. மாசிகந்த கோமுத்தி வாழும் பலவாண
தேசிகப்பேர்ச் சைவ சிகாமணியை—நேசர்
சிவிகையுடை யானென்று செப்புவரால் நானும்
சிவிகையுடை யானென்பன் தேர்ந்து. (24)

417. அடியார்க்கும் அந்தணர்க்கும் ஆதுலர்க்கும் ஏற்றுக்
கொடியார்க்கும் மேவிக் குலவுற்—றொடியாதால்
மாசிகந்த கோமுத்தி வாழும் பலவாண
தேசிக வேந்தன் றிரு. (25)

418. தேவாரத் தேனின் தெளிவை அளிக்கணங்கள்
ஓவாமல் உண்டுவக்க ஊட்டுமால்—பாவாணர்
விள்ளலருங் கோமுத்தி மேவும் பலவாண
வள்ளலது செவ்வாய் மலர். (26)

419. சார்ந்தவர்கள் மற்றையரைச் சார்ந்திரவா வண்ணமம்
ஆர்ந்தவரா கச்செய் தனவரதம்-தேர்ந்தளிக்கும் [பொன்
மண்புகழும் கோமுத்தி வாழும் பலவாண
வண்பெயர்கொள் சிந்தா மணி. (27)

---

416. 30-11-1908-ல் எழுதியது. சிவிகை – பல்லக்கு, சிவிச்சக்கர வர்த்தியின் கைபோன்ற திருக்கரம்.

417. ஆதுலர் - இரவலர். ஏற்றுக்கொடியார் - சிவபெருமான். திரு - செல்வம்.

418. அளிக்கணங்கள் - வண்டுக்கூட்டங்கள், அன்பையுடையவர் கூட்டங்கள்.

(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

420. கல்லாடத் தொடுகடிதம் நின்சமுகத் தினுக்கனுப்பிக்
கழகஞ் சென்று
சொல்லாடத் தொடங்குகையில் நின துதிரு
முகம்பெற்றேன் துறைசைச் செல்வ
வல்லாருள் வல்லவஅம் பலவாண தேசிகநீ
மகிழ்வி னோடு
பல்லாண்டு வாழ்கவென எல்லாம்வல் லவனடியைப்
பரவி னேனால். (28)

421. அக்கடிதந் தனிலமைந்த அதிமதுர வாக்கியங்கள்
அனைத்துங் கூடி
இக்கடியின் சுவையினிலுஞ் சுவைமிகுந்து
மகிழ்ச்சியெனக் கீந்த வாலோ
திக்கடியிற் செலுஞ்சீர்த்தி வளர்த்திடும்அம் பலவாண
தேசி கேச
தொக்கடியர் வியப்புறத்தே வாரநயம் புகட்டவல
சுகுணக் குன்றே. (29)

422. சங்கமரு வியதமிழ்த்தே வாரநய மடைந்தோர்க்குச்
சாற்றிப் பின்னும்
செங்கனக நிதிதரும்அம் பலவாண தேசிகப்பேர்ச்
சிங்க வேறே
சிங்கரவி இருபத்தைந் தாந்தேதித் திருமுகம்யான்
சேரப் பெற்றே
அங்கதனி லுளவினிய வாக்கியங்க ளறிந்துவகை
அடைந்தேன் மன்னோ. (30)

420, 421. இந்த இரண்டும் 9-8-1911—இல் எழுதிய கடிதப் பாடல்கள். கழகம் – சென்னை அரசியலார் கல்லூரி.

421. இக்கு அடியின் சுவை – அடிக்கரும்பின் சுவை.

422. பாடிய தேதி: 1-9-1911. சிங்க ரவி – ஆவணி மாதம்.

(வெண்பா)

423. சங்கத் தமிழ்நூல்கள் தம்மையளித் தும்பிறரால்
இங்கண் அளிப்பித்து மென்போல்வார்—தங்களைநீ
பாலித்த லாலம் பலவாண தேவஅவை
ஞாலத் துலவுறுமிந் நாள். (31)

424. ஈந்ததும்பா ராட்டும் எழுதினன்சேய் கோமுத்தி
வாய்ந்தபுக ழம்பல வாணவள்ளால்—ஏய்ந்தவரைச்
சாபத் துவராகன் சார்தலங்கட் கேகமுனம்
நீபத் துவராக னே. (32)

பூண்டி அரங்கநாத முதலியார்

(1844—1893)

[ஐயரவர்களுடைய அரிய நண்பர்களில் ஒருவர். இவருடைய வரலாற்றை ஐயரவர்கள் விரிவாக எழுதியிருக்கிறார்கள்.]

(கட்டளைக் கலித்துறை)

425. நந்தாத வான்பொரு ளைப்புல வோர்க்கு நயந்தளிக்கும்
சிந்தா மணியைப் பலரும் எளிதுறச் செய்திடுவாய்
மந்தாரத் தோடெழிற் சந்தானம் போலிருவான்பொருளை
வந்தார்க் களித்திடும் மால்ரங்க நாத மகிபதியே. (1)

---

423. எழுதிய தேதி: 8-11-1911.

424. நீ பத்துவராகன் ஈந்ததும் பாராட்டும் எழுதினன். சேய் : ஐயரவர்கள் குமாரராகிய கல்யாண சுந்தரையர். கோமுத்தி - திருவாவடுதுறை. வரைச்சாபத் துவர் ஆகன் – மலைவில்லையும் சிவப்பான திருமேனியையும் உடைய சிவபெருமான். சிவதல யாத்திரைச் செலவுக்காக அம்பலவாண தேசிகர் முப்பத்தைந்து ரூபாய் கொடுத்ததைக் குறித்தது.

425. சிந்தாமணிப் பதிப்புக்குப் பொருளுதவி செய்யவேண்டுமென்று கூறியது. இது நேரிலே கூறிய பாடல். பாடிய ஆண்டு: 1887. மந்தாரம், சந்தானம் – கற்பக மர வகை. இரு வான்பொருள் – கல்விப்பொருள், செல்வப்பொருள்.

(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

426. குலத்தினுல் புலவர் மெச்சும்
குணத்தினுல் பலநூல் ஆயும்
புலத்தினுல் திசைய ளக்கும்
புகழினுல் புரைஇல் வாய்மை
வலத்தினுல் அடுத்தோர்த் தாங்கும்
வன்மையால் வண்மை மிக்க
நலத்தினுல் பொலிஅரங்க
நாதமா முகில்ஈ தோர்க. (2)

(வேறு)

427. திருத்தகுமா முனிவனருள் தெள்ளியசிந் தாமணியைத்
திருவி லாதேன்
வருத்தமிக ஆய்ந்தச்சில் பதிப்பித்து முடித்தபெரு
மகிழ்வை ஓதும்
கருத்துடையே ஞகிஅந்த நூலையுங்கைக் கொடுநின்னைக்
காண வந்தும்
பெருத்தஅபாக் கியம்என்னைத் தடுத்தமையால்
நினைக்காணப் பெற்றி லேனுல். (3)

428. ஆயினும்நின் அன்புடைமை எள்ளளவும் அகலாதென்
றகத்திற் கொண்டே
தாயினுமன் பமைந்திலகும் இராமசா மிக்குரிசில்
தன்பாற் பின்னர்
மேயினன்நின் பால்விளம்ப எண்ணியவெ லாமவன்பால்
விளம்பி வந்தேன்
நீயிரிரு வீர்களுமோர் மனமுடையீர் என்பதனை
நினைந்து மன்னே. (4)

---

426. இதுமுதல் நான்கு பாடல்களும் 1887, டிசம்பர் மாதம் எழுதிய கடிதப் பாடல்கள். புலம் - அறிவு.

427. திருத்தகுமாமுனிவன் - திருத்தக்க தேவர். திரு - செல்வம்.

428. இராமசாமிக்குரிசில் — சேலம் இராமசாமி முதலியார்.

429. இதுபொழுதில் எனக்கின்றி யமையாத தின்னதென
இயல்பால் ஓர்ந்த
மதுவிரவும் தொடைப்புயத்து வள்ளலே
வெளிப்படையா வழங்க என்னெஞ்
சதுதுணிவுற் றிலதால்நின் திருமுகமாற் றம்கேட்கும்
ஆசை யேற்குக்
கதுமெனவே மகிழ்வுமிக நினதுதிரு முகமாற்றம்
காணச் செய்யே. (5)

430. பூமேவு திருமகளும் புகலாங்கி லேயமொழிப்
பூவை யுஞ்சீர்ப்
பாமேவு தமிழ்மகளும் புகழ்மகளும் கொடைமகளும்
பயன்பெற் றோங்கத்
தாமேவி நடமாடும் அரங்கமதாய்த் தான்விளங்கல்
சாற்றி யாங்கு
மாமேவும் எழில்அரங்க நாதப்பேர் கொளும்அண்ணல்
மகிழ்ந்து காண்க. (6)

431. நித்தியநின் மலநிருவி காரநிரஞ் சனசிவத்தின்
நேயம் என்றும்
மெத்தியசிந் தனையினொடும் சத்தியவாக் குங்கொண்ட
விறலோய் நின்றன்
கத்தியமும் பத்தியங்கள் ஏழும்நிதம் கண்டுமிகக்
களிக்கின் றேன்அப்
பத்தியங்கள் நினைப்பாராத் துயரமெனும் ஒருநோயைப்
பறித்த மன்னே. (7)

---

429. திருமுகமாற்றம் - வாய்வார்த்தை, கடிதத்திலுள்ள செய்திகள்.

430. இது முதல் எட்டுப்பாடல்கள் அரங்கநாத முதலியார் ஒரு கடிதமும் ஐம்பது ரூபாய்க்குரிய 'செக்' கும் அனுப்பியபோது பாடியவை. (டிசம்பர், 1887.) அரங்கம் - கூத்தவை.

431. மெத்திய - மிக்க. கத்தியம் - உரைநடை. பத்தியம் - பாட்டு; வைத்தியர் கூறும் பத்தியம் என்பது தொனிக்குறிப்பு. பத்தியம் நோயைப் பறித்ததென்பது நயம்.

432. தேன்என்கோ பால்என்கோ தேனும்பா லுங்கலந்த
தெளிவே என்கோ
வானென்கோ வுலகமரும் அமுதென்கோ கரும்பென்கோ
வயங்கு கண்டு
தான்என்கோ துயர்க்கடலைக் கடந்துசெல எழுபுணையாச்
சாற்று கோபூ
மான்என்கோ புகழரங்க நாதமுகில் நின்கவியின்
மாண்பை மன்னே. (8)

(கலிநிலைத்துறை)

433. பாடும் திறனிலன் ஆயினும் எனநவில் பாஒன்றே
பாடும் திறனுளை எனவே நன்கு பகர்ந்தோங்கும்
வாடும் பயிர்மலி மழைபெற் றுங்கு மனத்துன்பால்
வாடும் தமியனுள் மகிழத் தயைசெய்து மகிழ்கோவே.

(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

434. பொருளிலாப் பாட்டென்று புகன்றனை நீ நவின்றசுவை
பொழியும் பாவைப்
பொருளிலாப் பாடல்களென் பாடல்பொருள் உளபாடல்
புகழ்நின் பாடல்
பொருளோடு விரவிஅஞ்சல் வழிவந்த செயலொன்றே
பொருந்து சான்றும்
பொருளிலா எனையுமொரு பொருளாக்கொள்
நயசுகுணப் புகழ்க்கோ மானே. (10)

432. என்கோ – என்பேனோ. வான் என் கோ உலகு அமரும் அமுது – தேவலோகம் என்னப்படும் தலைமையுடைய உலகத்தில் தங்கும் அமுதம்; கோ – தலைமை. கண்டு – கற்கண்டு. புணை – தெப்பம். பூமான் என் கோ – அரசன் என்னப்படும் தலைவன்.

433. இதில் குறித்தது அரங்கநாத முதலியார் ஐயரவர்களுக்கு எழுதிய கடிதத்திலுள்ள பாடல்களில் ஒன்று. அது வருமாறு: "பாடும் திறனில னாயினும் மறுமொழி பாவலனீ, நாடும் திறனிவை நவிலற் கொருவகை துணிவுற்றேன், கூடுந் திறனறி புலமைக் கவிஞரொ டுறவாய்க்கூற், றூடுந் திறனுறு செந்தமி ழமுதச் சுவையோர்ந்தே."

434. அரங்கநாத முதலியார் எழுதிய கடிதத்தில், 'நான் இயற்றிய பொருள் இலாப்பாட்டுக்கு' என்று வரும் மொழிகளை எண்ணிப் பாடியது இது. பொருள் – கருத்து, பணம். அஞ்சல் – தபால்.

435. மொழியிணைத்துக் கவிபாட முயன்றிலேன் எனநவின்ற
மொழிதான் மெய்யே
மொழியிணைத்துக் கவிபாட முயலல்எமர்
செயல்அதுபோல் முயலா தான்ற
மொழியிணைத்துக் கவிபாடி மகிழ்வித்தல் நினதியற்கை
முறைமை யாமால்
மொழியிணைத்துக் கவிபாடும் அறிஞர்கள்பா மாலையணி
மொய்ம்பி னானே. (11)

(வெண்பா)

436. பட்டபாட் டுக்குப் பகர்ந்தபடி அஞ்சல்வழி
விட்டபாட் டிற்குமா மேளன்ற—மட்டில்சுவை
வெண்பா கரும்பா எனஇனித்து மேவியதால்
நண்பாஎன் சொற்றிடுவேன் நான். (12)

(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

437. அகமகிழ்ந்து விடுத்தஎழு பாடல்மகிழ் வெழுபாடல்
ஆன வன்றிச்
சகமகிழும் பிறர்கவியைத் தாழ்த்திமிசை எழுபாடல்
தாமாய் மேவும்

---

435. அரங்கநாத முதலியார் கடிதப் பாடல்களில் ஒன்றாகிய, "மகமாற்றந் தனைருவப்ப மாற்றலர்தாம் மிகவடங்க வானோர் ஏத்த, நகமால்தம் இல்லையும்கை வில்லையும்செய் நம்பரடி மறவா நண்ப, அகமாற்றம் அடைந்திலனீ துண்மையினி ஐயமொழி அன்பி னாற்பொன், முகமாற்றம் கேட்டனையான் **மொழியிணைத்துக் கவிபாட முயன்றி** லேனால்" என்பதை எண்ணி எழுதியது இது.

வார்த்தைகளை வருத்தப்பட்டுச் சேர்த்துக் கவிபாடாமல் இயல்பாக வேண்டிய வார்த்தைகள் வேண்டியவாறு அமையக் கவிபாடும் ஆற்றலுள்ளாய் என்பது கருத்து. எமர் - எம்மவர். ஆன்ற மொழி - தாமே வந்து அமைந்த மொழிகள். மொய்ம்பு - தோள்.

436. "மருந்தன சிந்தா மணியுரையின் மாண்பை, விருந்தெனக் கற்றோர் வியக்கப் - புரிந்தோய்நீ, பட்டபாட் டுக்குப் பகர்ந்தபடி அஞ்சல் வழி, விட்டபாட் டுக்குமா மே" என்ற அரங்கநாத முதலியார் பாடலை எண்ணிப் பாடியது. மட்டு - அளவு. கரும்பா என- இது கரும்போ என்று சொல்லும்படி.

மிகமகிழ்ந்தவ் வெழுபாடல் தமைஎண்ணு
பெண்ணுபுயான் விளம்ப லாலே
தகமகிழ்ந்தென் பாடல்கள்எண் பாடல்களா குபுநின்னைச்
சார்ந்த மன்னே. (13)

(தரவு கொச்சகக்கலிப்பா)

438. நண்பார் தரும்அரங்க நாதசுகு ணாகரஇத்
திண்பார் புகழ்கல்விச் செல்வமுடைச் சிங்கமே
பண்பார் தருமுன்னைப் பார்த்தே பெருமகிழ்வை
உண்பார் வருந்த ஒளித்தெங் ககன்றனையே. (14)

439. தென்னாடு செய்த செழுந்தவமே தென்றொண்டை
நன்னாடு பெற்ற நலமார் மணிவிளக்கே
முன்னாடு சென்னை முளைத்த முழுமதியே
எந்நாடு சென்றாய்நீ தென்னேயோ என்னேயோ. (15)

440. பொன்னைப் பெறலாம் புகழ்பெறலாம் பூவலயந்
தன்னைப் பெறலாம் தகமுயன்றால் யாவையுமே
பின்னைப் பெறலாம் பிறழா மனவலிசேர்
உன்னைப் பெறுமாறும் உண்டோ உரையாயே. (16)

441. பனியார் சிலசொற் பகர்ந்தே உளங்குழைப்போய்
கனியார் இனிமை கலந்தே சுவைகள்பல
நனியார் தமிழின் நயந்தெரிய வல்லார்தாம்
இனியார் உனைப்போல் இனியார் இனியாரே. (17)

---

437. எண்ணுபு - எண்ணி. எண் பாடல்கள் - எண்ணும் பாடல்கள், எட்டுப் பாடல்கள்.

438. இதுமுதல் 9 பாடல்கள் அரங்கநாத முதலியார் மறைந்தபோது பாடிய இரங்கற்கவிகள். அவர் மறைந்த நாள் : 10—12—1893.

439. முன் நாடு.

440. பூவலயம் – உலகம்.

441. பனி – குளிர்ச்சி. இனியார் இனி யார் – இனியவர்கள் இனி மேல் யார் உள்ளனர் ?

442. என்னே நலமார் இராமசா மிக்குரிசில்
முன்னே அகன்றான் மொழியுமவ னைத்தொடர்ந்து
பின்னே நடந்தாய் பிரிவாற்றாத் தன்மையினே
நன்னேய மாரரங்க நாத தயாகரனே. (18)

443. நாவலோர் வாழ்த்தரங்க நாத நயசுகுணா
பாவலோர் பெற்றபெரும் பாக்கியமே செந்தமிழின்
ஆவலோ டேனை அருங்குணங்கள் யாவையுமே
மாவலோய் எவ்விடத்து வைத்தகன்றாய் சொல்லாயே.
(19)

(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

444. உனைப்போல எவற்றையுமே ஒழுங்காகச் செய்துமுடித்
துற்றோர் யாரே
உனைப்போலத் தமிழர்தலை சாயாமல் நிறுத்தவல்லோர்
உலகில் யாரே
உனைப்போல வலியார்க்கும் மெலியார்க்கும் ஒப்பநடந்
துவந்தோர் யாரே
உனைப்போலப் பலகலையும் எளிதறிந்து கம்பீரம்
உடையோர் யாரே. (20)

(எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

445. தரங்க வேலை யனைய தாய சபையி டைப்பு குந்துநின்
றுரங்க லந்த ஆங்கி லேயர் ஒருமொ ழிப்ர சங்கம்அங்
கரங்க நாத வள்ளல் போல அவர வர்வி யந்துதம்
சிரங்க ரந்து ஏக்கு மாறு செப்ப வல்லர் யாவரே. (21)

---

442. இராமசாமிக் குரிசில் - சேலம் இராமசாமி முதலியார்.

443. மாவலோய் - மிக வல்லவனே,

445. தரங்கவேலை - அலையையுடைய கடல். உரம் - வன்மை.

(தரவு கொச்சகக்கலிப்பா)

446. எல்லா நலமும் இனிதமைந்தோன் பூண்டிநகர்
நல்லான் புகழ்அரங்க நாத முகில்இறந்த
பொல்லாத ஓசைஇடி போலே தமிழ்க்குயிலை
வல்லாமை செய்து வருத்தத் திருத்தியதே. (22)

ஆம்ப்ட்ஹில் துரை

(ஆசிரியப்பா)

447. பூதலம் முழுதும் மேதகப் புரக்கும்
மிக்க சிறப்பமை சக்கர வர்த்தியார்
தம்ப்ரதி நிதியாய்ச் சற்குண பதியாய்ச்
சென்னைமா நகரில் நன்னர்வீற் றிருந்தே
காட்சிக் கெண்மையும் கடுஞ்சொல் இன்மையும்
ஆட்சியு ளாங்காங் கடைந்தே அவரவர்
குறைவினைத் தீர்த்தலும் குணவழிச் சேர்த்தலும்
கற்றோர்ப் புரத்தலும் கவினுற மேவி
ஆண்டில் இளமையும் அறிவின் முதுமையும்
பூண்டிலங் கண்ணலே புவியினைப் போலச்
சாந்த மிகுந்த ஆந்த்ஹில் வேந்த
எஞ்செவி களைப்போல் இன்றிரு விழிகளும்
களித்திட எங்களை அளித்திட எண்ணித்
திருவமை ஆந்த்ஹில் தேவியா ரோடும்
இந்நகர்ப் புகுந்த நன்னலம் உடையாய்
வருக வருகஇம் மாநில மதனில்
புகுமிடம் எல்லாம் புதுவளம் சுரக்க
புயல்வர உகக்கும் மயில்களைப் போலநும்
நல்வர வதனால் நாம்மிக மகிழ்ந்தேம்
நீர்வளம் முதலாச் சார்வளம் பலவும்

---

446. வல்லாமை – ஒரு செயலும் செய்ய மாட்டாமை.

447. சென்னைக் கவர்னராக இருந்த மே. த. ஆம்ப்ட்ஹில் துரையும் அவர் மனைவியும் கும்பகோணம் கல்லூரிக்கு வந்தபோது பாடியது; 1-3-1902.

5. எண்மை - எளிமை.

18. புயல் - மேகம்.

உடங்கியைந் தொளிர்இக் குடந்தையம் பதியில்
கேம்பிரிட் ஜென்னக் கீர்த்திமிக் குற்றுச்
சீலமார் போர்ட்டர்கோ பாலராவ் என்போர்
காலம் தொடங்கிஇக் காலம் வரையும்
பல்வித் தகமார் கல்விப் பெருமை
மிடைந்தவிக் கழகத் தடைந்தமை யாவிதை
ஆதரித் திடுகவென் றேதுதல் மிகையென்
றெண்ணினேம் இயம்பவின் றெண்ணிய திதுவே
எங்குறை பிறவும் எளிதறிந் தகற்றுதல்
நின்கடன் ஆதலின் நிகழ்த்துதல் தவிர்ந்தேம்
மற்றிது நிற்க அற்றவர் கட்கெலாம்
எய்ப்பில் வைப்பாய் ஒப்பிலா தொளிர்நுமக்
கரோக தேகமும் விரோதம் இன்மையும்
வாழ்நா ளதனொடு தாழ்விலாத் திருவும்
ஈத்தளித் தென்றும் காத்தருள் கென்ன
மீத்திகழ் பரமனை வாழ்த்துகம் பலவே.

ஆர்நால்ட் ஒயிட்

(பன்னிருசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

448. மன்னும் கல்வி அறிவினுயர்
மாண்பு பேசி நடுவுநிலை
வாய்ந்து மரியா தையின்வடிவம்
மான விளங்கி அருட்குணம்மிக்
குன்னும் சீவ காருண்ய
சங்கம் முதலா உள்ளபல
உயர்ந்த சங்கங் களில்மருவி
ஓங்கி நீதி யறிதெனில்

---

21. உடங்கு – ஒருங்கு.

448. இதுமுதல் இரண்டு பாடல்கள், திருவல்லிக்கேணிச் சுருக்கெழுத்துச் சங்கத்தின் (The Shorthand Association, Triplicane) மூன்றாவது ஆண்டு விழாவின்போது தலைமைதாங்கிய சென்னை உயர்நீதி மன்றத்தலைமை நீதிபதி ஸர் ஆர்நால்ட் ஒயிட் (Sir Arnold White) டை வரவேற்றுப் பாடியவை.

துன்னும் பலவாண் டாகவளம்
சுரக்கும் சென்னை ஹைகோர்ட்டில்
துலங்கு நீதி பதிகளுக்குள்
சொல்லும் முதல்வ னாகியமைந்
தின்னும் பலசீர் மிகவடைந்தே
இலகும் ஸர்ஆர் நால்ட்ஒயிட்டென்
றியம்பு சுகுண சிகாமணிஎம்
இதயம் களிக்க வருகவே. (1)

449. வந்த வழக்கை இருதிறத்தார்
வகுப்ப முற்றக் கேட்டனையார்
மனங்கொண் டிடத்தீர்ப் பளித்திடுஞ்சீர்
வாய்ந்த சாந்த குணமுடையோய்
இந்த இராச தானிதனக்
கெண்ணில் நன்மை எண்ணியியற்
றேந்தல் நீஇவ் வுலகினிடை
இன்னும் பலஆண் டுடல்வன்மை
முந்த எய்தி அறிவின்வலி
முழுதும் அடைந்து செயும்நன்மை
முற்றும் புரிய அருள்கவென
முதுசீர் அல்லிக் கேணியிடத்
தெந்த நாளும் வளர்சுருக்க
எழுத்துச் சங்கத் தார்நாங்கள்
ஈசன் அடியை நேசமுடன்
எண்ணி வணங்கிப் பரவுதுமே. (2)

இராசராசேசுவர சேதுபதி

(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

450. திங்களணி சடைப்பெருமான் இடப்பாகம் பிரியாத
தேவீ நான்கு
கங்களுடை யவன்முதலோர் யாரையும்யா
வையும்புரக்கும் கருணைச் செல்வீ

---

450. இதுமுதல் உள்ள பாடல்கள் இராமநாதபுரம் மன்னர் திரு இராசராச முத்துராமலிங்க சேதுபதியவர்களைப் பாடியவை. இது முதல் ஐந்து பாடல்கள் 1912-ஆம் ஆண்டு நவராத்திரி விழாவில் பாடியவை. கங்கள் - தலைகள்.

எங்கள்தமிழ்க் கிறைராச ராசமகி பாவவள்ளல்
எந்த ஞான்றும்
மங்களம்யா வையும்மேவி மேன்மேலும் மகிழஅருள்
வழங்கு வாயே. (1)

451. தோம்படைத்த அவுணர்குலம் சவட்டிஅம ரரைப்புரந்த
சுகுணச் செல்வி
தேம்படைத்த தமிழ்ப்புலவர் வடமொழிவா
ணர்களிசைநூற் செல்வர் முன்னோர்
யாம்படைத்த நிதியென்று நவில்முத்து ராமலிங்க
இறைவன் றன்னை
ஓம்படைசெய் தருள்கவொரு விதத்துமொரு
குறையேனும் உறுமல் மன்னே. (2)

(கட்டளைக் கலித்துறை)

452. புண்ணிய சேது பதிவண்மைப் பாற்கர பூபதிமுன்
பண்ணிய புண்ணியம் என்னவந் தோன்தமிழ்ப் பாவலருக்
கண்ணிய தேவ தருராச ராச அரசர்பிரான்
எண்ணிய யாவும்பெற் றின்புற்று வாழ்க இருநிலத்தே.

453. ஆதார மாயிருந் தெல்லாம் புரந்தருள் அம்பிகைகா
போதார் தொடையன் புகழ்ச்சேது காவலன் புண்ணியத்தன்
மீதார் கொடையன் விளங்கிய பாற்கர வேந்துதவும்
சதாம் எனும்முத்து ராமலிங் கேந்த்ரனை என்றைக்குமே.

(வெண்பா)

454. எங்கோ ரமும்நீ இராசரா சேச்வரியே
தன்னேர் குணத்தான் தமிழ்ச்செல்வன்—பொன்னார்
முகவைப் பதிப்பதிக்கு முன்னின் றருள்தாய்
மகவைப் புரத்தல மரபு. (5)

---

451. தோம் – குற்றம். சவட்டி - அழித்து. தேம் - இனிமை. ஓம்படை செய்து - பாதுகாத்து.

452. இவர் பாஸ்கர சேதுபதியின் புதல்வர்.

453. அம்பிகையே, முத்துராமலிங்கேந்திரனை என்றைக்குமே கா என்க.

454. முகவைப் பதிப் பதி – இராமநாத புரத்துக்குத் தலைவன்.

(தரவு கொச்சகக்கலிப்பா)

455. ஒப்பொன்றும் இலதாகி
உயர்செல்வத் தவர்க்குளவாம்
தப்பொன்றும் இலனாகித்
தனைஅடுத்த வறிஞர்களுக்
கெய்ப்பொன்றும் இலதாச்செய்
இராசரா சப்பெயர்கொள்
துப்பொன்றும் அரசுபுவி
துறந்ததுயர் சொலற்பாற்றே. (6)

456. காட்சியினாற் பவம்தொலைக்குங்
கவின்சேது நாட்டின்அர
சாட்சியன்சீர்ப் பாற்கரவேள்
அருந்தவத்தால் உதித்தபெரு
மாட்சியுறு புவிராச
ராசமகி பாலஇசைப்
பூட்சியைநன் றெனமதித்தோ
பூதவுடல் நீத்தனையே. (7)

457. பொதுநோக்கம் தவிர்தியெனப்
புகழ்க்கபிலன் சொலக்கேட்டே
அதுநோக்கும் மலையனிவன்
ஆமென்றே இருந்தவெமைச்
செதுநோக்க ரிடைநிறுவிச்
சேர்ந்தனைபொன் னுலகென்றோ
முதுநோக்கம் உறுராச
ராசேச மொழிகுவையே. (8)

455. இதுமுதல் 11 பாடல்கள் இராமநாதபுரம் இராஜராஜேசுவர சேதுபதியவர்கள் மறைவுபற்றிய இரங்கற் பாக்கள். துப்பு – வலிமை.

456. இசைப்பூட்சி - புகழுடம்பு.

457. "ஒருதிசை ஒருவனை உள்ளி நாற்றிசைப், பலரும் வருவர் பரிசில் மாக்கள், வரிசை அறிதலோ அரிதே பெரிதும், ஈதல் எளிதே மாவண் தோன்றல், அதுநற் கறிந்தனை யாயின், பொதுநோக் கொழிமதி புலவர் மாட்டே" (**புறநா. 121**) என்னும் பாடலை எண்ணிக் கூறியது.

செதுநோக்கர் – குலைக்கும் பார்வையுடையவர்.

458. காகமெலாங் குயிலாகக்
காண்கலியில் நீவிண்ணம்
போகல்புரிந் தனை அடுத்தோர்
புன்கணுறல் அறிந்திலையே
பாகமொரு பெண்ணுடைய
பரம்பொருளை நினைந்துருகும்
ஏகமுறு மனமுடைய
இராசரா சேந்திரனே. (9)

459. பண்ணுறுசெந் தமிழ்ச்சுவையைப்
பகர்ந்துமகிழ் வித்திடுநீ
துன்னுறுவிண் ணகஞ்செலினச்
சுவையினையான் கேட்பதெவண்
மன்னுறுமச் சுவையினையான்
வகுத்துரைக்கும் இடம்யாதோ
என்னுறுகண் தீர்த்தளித்த
இராசரா சேந்திரனே. (10)

460. என்னதுயர் உளத்தினிடை
இருந்திடினும் நினைக்கண்டால்
அன்னதுவிண் டகலமிக
அகமகிழ்வம் இனியெங்கள்
இன்னலினை அறிபவரார்
இராசரா சேந்திரனே
பன்னரிய இசைக்கனியே
பார்வேந்தர் நாயகமே. (11)

461. விருப்பமகன் றவர்களுமே
விரும்புறநீ வீற்றிருந்திட்
டுருப்பமறத் தமிழ்விருந்தை
ஊட்டிடுதல் மறப்புறுமோ

---

458. விண்ணம் - வானுலகு.
459. உறுகண் - துன்பம்.
460. இசைக்கனி: சேதுபதிமன்னர் இசையிலும் வல்லவர்.
461. உருப்பம் – வெம்மை.

திருப்புகழா தியவற்றைத்
திப்பியநல் இசையுடன்சொற்
றிருப்புளமும் குழைவிக்கும்
இராசரா சேந்திரனே. (12)

462. தங்குவளக் கைலையிடம்
சார்ந்தனையோ செங்கரத்தில்
சங்குடைய செங்கணவன்
தனதுலகு சார்ந்தனையோ
கொங்குமிகு கடம்பணியும்
குகனுலகு சார்ந்தனையோ
எங்குநடந் தனைநவில்தி
இராசரா சேந்திரனே. (13)

463. பால்வேண்டும் பழம்வேண்டும்
பணம்வேண்டும் பலவுடுப்பு
மேல்வேண்டும் கோல்வேண்டும்
விரைசகடம் மிகவேண்டும்
ஆல்வேண்டும் எனலன்றி
அரசேநின் போல்தமிழ்த்தொன்
னூல்வேண்டும் எனஅன்பின்
நுவல்பவரைக் கண்டிலமே. (14)

464. கரையில்புகழ் மிகுசேது
காவலவன் ஒருசிறிதும்
புரையில்குணம் உறுராச
ராசபுர வலன்றனையித்
தரையிலிருந் தகன்றிடச்செய்
தறுகண்மை யுடைக்கலியின்
வரையில்பெருங் கொடுமையினி
மாறவருள் இறையவனே. (15)

463. விரைசகடம் - கார். ஆல் - ஹால் (Hall.)

464. வரை இல் – எல்லையில்லாத.

465. அளிமேவும் அரசேசீ
ஆற்றுதவத் தால்உதித்த
களிமேவு குணாகர
நாதனெனும் குலக்கொழுந்திற்
கொளிமேவும் சினதரசை
உதவியருர் ஒழித்திடுசின்
கனிமேவு விறலதனைக்
கடலுலகு புகழ்ந்திடுமே. (18)

தோட்டக்காடு இராமகிருஷ்ண பிள்ளை

(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

466. வரைநாட்டு விளங்கிளங்கோ அடிகள்புகழ் கோவலர்தம்
மரபில் வந்தோன்
நிரைநாட்டு விரைத்தோட்டக் காட்டண்ணல்
இராமகிருஷ்ண நேயன் வாவும்
திரைநாட்டு மரக்கலமீ திவர்ந்திங்கி லாந்தடைந்து
செல்வர் பல்லோர்
உரைநாட்டும் கலைஞர்பலர் உடனளவ ளாவியுளத்
துவகை மேவி. (1)

467. மன்னுவளம் மிகுபாரீஸ் அடைந்துஜூலியன்வின்ஸன்
வரவேற் றன்பிற்
பன்னுமொரு பாக்கொண்டாண் டுளதானம்
பலவற்றைப் பார்த்துச் சென்னை
என்னுநகர் அடைந்துதன திடமருவித் திடமருவி
இனத்தா ரோடு
துன்னுறுசீர் அறிந்துமகிழ்ந் தேன்இறைவன்
திருவருளைத் துதிக்கின் றேனால். (2)

---

465. அஞர் - துன்பம்.

466. தமிழும் ஆங்கிலமும் வல்ல இவர் மேல்நாட்டுக்குச் சென்று வந்த போது ஒரு பாராட்டுக் கூட்டம் நிகழ்ந்தது. அதில் பாடி வாசித்தவை, இதுமுதல் நான்கு பாடல்கள்.

467. ஜூலியன் வின்ஸன் - பாரீஸ் மாநகரில் தமிழாசிரியராக இருந்தவர். தானம் - இடம்.

(கலிவிருத்தம்)

468 இன்ன வன்றிறம் யாவையும் ஏனையர்
சொன்ன வாதலிற் சொற்றிலன் யானுமே
நன்னர் மேயவாழ் நாள்நனி கொண்டிவன்
மன்ன ஈசனை வந்திப்ப னல்லரோ. (3)

(ஆசிரியப்பா)

469 படிபுகழ் இளங்கோ அடிகளா தியராம்
பாவலர் புகழும் கோவலர் மரபில்
பீடுறு தோட்டக் காடெனும் குடியில்
பேருறு வரதவேள் சீருறு மைந்தன்
திருமால் மருமத் தொருமான் மருவிய
சென்னையம் பதிவாழ் நன்னயக் குரிசில்
ஜூலியன் வின்ஸன் போலியர்க் கன்பன்
இங்கிலாந் தாதி இடங்களில் சென்றுதன்
கல்வித் திறனும் கவித்திற னும்பிறர்க்
கறிவித் தேமகிழ் செறிவித் தீண்டு
வந்தது கேட்டு வந்ததெம் உள்ளம்யா
தானும் நாடெனும் தேனுறழ் பாப்பொருள்
உண்மை எனவே உணர்த்தினன் அவனே. (4)

சேலம் இராமசாமி முதலியார்

(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

470. தேனுறு நறுமலர்ப்பூங் கற்பகமே இருநிதியே
தேனு வேநல்
வானுறும் சுவையமுதே குணக்குன்றே எனப்புலவர்
வருக்க வேயும்

469. ஒரு மான் – திருமகள். கேட்டு உவந்தது எம் உள்ளம். "யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன், சாந்துணையும் கல்லாத வாறு" என்ற குறளைக் குறித்தபடி.

470. சேலம் இராமசாமி முதலியார் ஐயரவர்களைச் சிந்தாமணியை ஆராய்ந்து பதிப்பிக்கும்படி தூண்டியவர்; **'என் சரித்திரம்'** பார்க்க. இந்த கடிதம் ஒன்றின் தொடக்கத்தில் எழுதிய பாடல். தேனுவே – காமதேனுவே.

தானுனுந் தனக்கிணையாய்ப் பொருவின்றி மிகவிளங்கும்
தகைமை யாளன்
ஆனாத புகழ்சான்ற இராமசா மிக்குரிசில்
அறிக ஈதே. (1)

(தரவு கொச்சகக்கலிப்பா)

471. என்புடையார் அன்புடைய இராமசா மிக்குரிசில்
உன்புடையார் நயசுகுணம் ஒவ்வொன்றை உன்னியுன்னி
அன்புடையார் பல்லோரும் ஆற்றும்வழி காணாராய்த்
துன்புடையா ராகிமனம் சோர்ந்திடவெங் ககன்றனையே.

472. இன்றேனும் பாலுமெனும் இன்சொலுடை யாய்வைரக்
குன்றேனும் ஒவ்வாக் குணனுடையாய் குற்றத்துள்
ஒன்றேனும் உனையணுக ஒண்ணாதோ சார்ந்திருப்பின்
என்றேனும் நிற்பிரிதல் எம்மை வருத்திடுமோ. (3)

473. ஊர்க்குழைப்பான் போனானென் றலைவாரும் போனனிப்
பார்க்குழைப்பான் என்று பதைப்பாரும் தமிழெனும்நீ
நீர்க்குழைப்பான் என்றுருகி நிற்பாரு மாய்க்கலங்க
ஆர்க்குழைப்பான் சென்றாய் அறிவுடைய அண்ணலே.

இராமலிங்கத் தம்பிரான்

(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

474. தெரியாது பெரும்பிழைசெய் திடுபவர்க்கும்
பெருங்கருணை செய்தே துன்பங்
குரியாத படிஉயர்த்தும் பெரியானின் னுளிலெனக்
குறித்து முன்னம்

---

471. இதுமுதல் மூன்று பாடல்கள் முதலியாரவர்கள் பிரிவுக்கு இரங்கிப் பாடியவை. என்புடை ஆர் - என்னிடம் நிரம்பிய.

472. இன் தேனும். நிற்பிரிதல் - நின்னைப் பிரிதல்.

474. திருப்பனந்தாளில் காசிமடத்தில் தலைவராகச் சில ஆண்டுகள் இருந்த இராமலிங்கத் தம்பிரான் 1879—ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் திருவாவடுதுறை ஆதீனத்தலைவராக எழுந்தருளியிருந்த மேலகரம் ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகரை வருவித்துக் கொலுவிருக்கச் செய்து வழிபட்டார். அப்போது பாடியவை இதுமுதலுள்ள பதினொரு பாடல்கள். இப்பாட்டு முதல் மூன்றும் சுப்பிரமணிய தேசிகர் பெருமையைக் கூறுவன.

துன்பு அங்குரியாதபடி – துன்பம் தோன்றாதவண்ணம். கரியாக

இரியாத துயரகற்ற எண்ணுவீர் விரைந்திவனை
எய்தீர் என்று
கரியாக உறைந்தவிடம் உறைந்தவிடம் தெரியாத
கந்தரத்தான். (1)

475. உண்ணொடு கனவிடத்தும் அடுத்தவர்க்குக் கொடுத்தறியா
உலுத்தர் பாற்போய்
விண்ணொடு புரப்பவனும் நினக்கிணையோ எனக்கவிகள்
விளம்பி இந்த
மண்ணொடு முழுவதும்யான் அண்ணாந்து இனைமலையா
வண்ணம் ஆற்றி
எண்ணொடு பொருளனைத்தும் எண்ணாமல் அருள்கமல
இணைக்கரத்தான். (2)

476. தேனோக்கும் மழலைமொழி மீனோக்கி ஒருவியுறை
திறத்தால் மாரன்
தானோக்கும் அமரொடுமுக் கிரனுதிப்பும் விழிபுதைப்பும்
தணந்த என்ன
மீநோக்கும் விழிகரந்து வியன்றுறைசை குடிபுகுந்த
விமலன் எங்கும்
யானோக்கி அலைதலற அருள்குருசுப் பிரமணிய
எம்மான் தன்னை. (3)

உறைந்த விடம் - சாட்சியாகத் தங்கும் நஞ்சம். **உறைந்த இடம்** தெரியாத. **கந்தரம்** - கழுத்து.

475. சுப்பிரமணிய தேசிகர் கொடைச்சிறப்பு. **விண்ணொடு புரப்பவன்** - இந்திரன்.

476. **மீன் நோக்கி** - மீனாட்சி. அப்பெருமாட்டியை நீங்கி உறைவதனால் காமதகனமும், குமரன் அவதாரமும், கண்ணை மூடுதலும் நீங்கிவிட்டன என்று, மேல்நோக்கும் நெற்றிக்கண்ணை மறைத்துத் திருவாவடுதுறையிற் குடிபுகுந்த தூயவன்; இறைவன் உருக்கரந்து சுப்பிரமணிய தேசிகராக வந்தான் என்றபடி.

477. ஒருவாது பெருந்துயில்கொள் திருமாலை மிசைப்பரிக்கும்
ஒற்றை ஆலம்
தருவாதை உறநாலு முனிவரருக் கருளாலந்
தருவின் தாளும்
திருவாத வூரர்புகழ் பொருவாத மலர்க்குருந்தின்
செய்ய தாளும்
மருவாத பெருஞ்செல்வத் திருவாரும் ஒருபனந்தாள்
வரைப்பின் மாதோ. (4)

478. வானாறு முதல்நதிகள் உளஞ்சமழ்ப்பப் புகுந்தாடின்
மற்றன் னார்தம்
மால்நாறு மலம்கழுவி அப்பெயர்கொள் மண்ணிநதி
வலப்பால் மன்னும்
தேனாறு பொழிற்பனசைத் திருநகரம் தனிபுரக்கும்
செம்மல் முந்நீர்
மேனாறு பெறுஞ் செல்வ இராமலிங்க முனிவரப்பேர்
மேன்மை யாளன். (5)

479. மாண்பனசைத் திருநகரில் எழுந்தருளச் செய்துநவ
மணியி னைய
பூண்பனவும் உடுப்பனவும் புசிப்பனவும் மிகப்புதிது
புதிதாய் யாரும்

---

477. பரிக்கும் - தாங்கும். ஒற்றை ஆலிலை துன்பத்தையடைய. கல்லாலைக் கண்டு நமக்கு இந்தப் பேறு கிடைக்கவில்லையே என்று வாதை உற்றது. ஆலந்தருவின் தாள் - ஆலமரத்தடி. திருவாதவூரர் - மாணிக்கவாசகர். பொருவாத - ஒப்பில்லாத. குருந்தின் செய்ய தாள் - குருந்த மரத்தின் செம்மையையுடைய அடி. இவற்றிற்கு இல்லாத செல்வம் திருப்பனந்தாளுக்குக் கிடைத்தது.

478. வானாறு - கங்கை. சமழ்ப்ப - நாண. மண்ணி என்பது கழுவுவது என்னும் பொருளுடையது. சுப்பிரமணிய நதி என்பது மண்ணிநதியென வந்தது; அந்தப் பெயருக்குக் கற்பனையாக ஒரு காரணம் சொன்னபடி. மால் - மயக்கம். பனசை - திருப்பனந்தாள்.

காண்பனவும் கேட்பனவும் கொண்டருளிக் கொலுவிருப்பக்
கவின ஆற்றி
ஏண்பனக இறையெனினும் இறையெனினும் இசைப்பரிய
இசைபெற் றானே. (6)

480. எல்லாரும் புகழருட்சுப் பிரமணிய தேசிகன்முன்
இருந்த வர்க்குச்
சொல்லாது மௌனமுறீஇச் சொல்லியுடன் மறைதவிறல்
துணர்மென் சாகைக்
கல்லாலின் இருந்தாளும் ஒரு குருந்தின் பெருந்தாளும்
கவலப் பூவில்
செல்லாரும் மனங்களிக்கும் பனந்தாளே இருந்தாளச்
சிறந்த தன்றே. (7)

481. அகலமுறு பொன்மலரும் அனந்தமணி களுமிருப்ப
அவைசாத் தாது
பகலலர்பங் கயங்கண்மணி யொன்றணிந்த
கௌத்துவங்கொள் பவன்நாண் மேவப்
புகலருட்சுப் பிரமணிய குருமணிக்கி ராமலிங்கப்
புனிதர் கோமான்
சகலருங்கண் டிடச்சுவண மலர்கண்மணித்
தொடையனந்தம் சாத்தி னானே. (8)

482. மும்மணிக்கோ வையுமினிய நான்மணிக்கோ வையும்புலவர்
மொழிந்து சாத்தும்
எம்மணிக்கோ வையும்பழைய என்னநவ மணிக்கோவை
இழைத்த மேன்மைச்

---

479. பன்னக இறையெனினும் - பாம்பரசனாகிய ஆதிசேடனானாலும். இறையெனினும் இசைப்பரிய - சிறிதளவேனும் கூறுவதற்கரிய.

480. முன் - முற்காலத்தில். இருந்தவர்க்கு - பெரிய தவத்தினர்க்கு. தாள் - அடி. சிறிதுநேரம் இருந்து மறையும் பிற மரங்களின் அடிகளைவிடப் பனந்தாள் இருந்து ஆளுவதற்குச் சிறந்தது ஆயிற்று.

481. பங்கயமும் கண்மணி ஒன்றும் அணிந்தவனும் கௌத்துவ மணி அணிந்தவனுமாகிய திருமால். சுவணம் மலர் கண்மணித் தொடை - பொன் கட்டிய ருத்திராட்ச மாலை.

482. நவமணிக் கோவை - ஒன்பது மணிகளாலான மாலை; புதிய

செம்மணிக்கோ வையையணிந்து துறைசையிற்சுப்
பிரமணிய தேசி கப்பேர்
இம்மணிக்கோ வைப்பணிந்த இராமலிங்க முனிவரன்சீர்
இயம்பப் போமோ. (9)

483. தெருள்மணக்கும் உளத்துறைசுப் பிரமணிய தேசிகனைத்
தெரிசித் தன்பால்
பொருள்மணக்கும் சொற்பணியும் பொற்பணியும்
நற்பணியும் புரிந்தன் ஞன்றண்
அருள்மணக்கும் படிபெற்ருன் இராமலிங்க முனிவரன்ஈ
தமைதி அன்றோ
மருள்மணக்கும் பவமொழிக்கும் குமரகுரு பரமுனிவன்
மரபி னோர்க்கே. (10)

484. தண்டாத புகழ்ப்பனசை இராமலிங்க முனிவர்பிரான்
சமைத்த எல்லாம்
கொண்டாடு வார்மிகவுங் கண்டாரிற் பலபலவும்
கூறி நிற்பார்
கண்டார்கள் எவர்பிறர்க்கு விண்டார்கள் எவரினிமை
கனிந்த எல்லாம்
உண்டார்கள் எவர்மிகவும் தெரிந்ததுபோல்
உரைப்பதுல கியல்பு மன்ஞே. (11)

485. நீர்படைத்த வளநாட்டின் நகரரசாம் பனசைநகர்
நிலவ மேய
கார்படைத்த மலர்க்கையன் இலர்க்கையன் இராமலிங்கக்
கனவான் போலப்
பார்படைத்த தன்றிமிகப் பேர்படைத்துக் கல்விநலம்
படைத்தியார் மாட்டும்
நார்படைத்துச் சீர்படைத்து விதரணமே
யார்படைத்தார் நவிலுங் காலே. (12)

மணிகளாலான மாலை என்று ஒரு பொருள் தொனித்தது. இம்மணிக் கோவை - இந்த அழகிய தலைவரை.

483. தெருள் - தெளிவு. அருளைப் பெற்ருன். அமைதி - பொருத்தம். பவம் - பிறப்பு.

485. இலர்க்கு ஐயன் - வறியவர்களுக்கு நலம் செய்யும் தலைவன்.

இருதயாலய மருதப்ப தேவர்

486. மண்களிக்கும் வீரையிடைக் கண்ணன்நவ நீதமிரு
மலர்க்கை ஏந்திக்
கண்களிக்கும் படிநிற்கும் காட்சிஇத யாலயமா
கனவான் ஊட்டும்
விண்களிக்கும் சுவைமிகுசிற் றுண்டிகளா தியநிதமும்
விரும்பி உண்டுண்
டெண்களிக்கும் சுவையதனை மறந்தொழிந்த
பெருமிதத்தை இயம்பும் மன்றே. (1)

487. தன்னிடைமுன் துயின்றிடுமா தவன்வடிவு பிறிதொன்று
தரித்தே தன்பால்
மன்னிடுமற் றையஅனைத் தும் மருவிஇத யாலயப்பேர்
மருவி யாரும்
பன்னிடுமா றுறல்தெரிந்த பாற்கடலும் அவன்போலப்
படிவ மாறித்
துன்னிடுமற் றையதாங்கி அவற்றுங்கி வீரையெனத்
துலங்கிற் றுலோ. (2)

(கட்டளைக் கலித்துறை)

488. அந்தார்ப் புலவர் கருதிய யாவும் அளித்திலங்கும்
சிந்தா மணியிற் கருத்தறிந் தீந்திடச் செய்தமையால்
மந்தாரம் மானுங் கருத்தித யாலய மன்னவவன்
கந்தார் கடகளிற் றுயறிந் தேன்பெயர்க் காரணமே. (3)

---

486. ஊற்றுமலை ஜமீன்தாராக இருந்தவர் இருதயாலய மருதப்ப தேவர். வீரை-வீரகேரளம் புதூர். இங்கே நவநீதகிருஷ்ண சுவாமி கோயில் இருக்கிறது. கையில் வெண்ணெயை ஏந்தி நிற்பது, இருதயாலய மருதப்ப தேவர் நிவேதித்த சிற்றுண்டிவகைகளை உண்டு வெண்ணெய்ச் சுவையை மறந்துவிட்ட நிலையைக் காட்டுகிறதென்றபடி.

487. திருமால் இருதயாலய மருதப்ப தேவராகத் தோன்ற, அதனை யறிந்த பாற்கடலும் வீரகேரளம் புதூராகத் தோன்றியதென்றபடி. அவற்றுங்கி - அவனைத் தாங்கி. வீரை - வீரகேரளம்புதூர்; கடல் என்றும் ஒரு பொருள் உண்டு.

488. புலவர் - தேவர். சிந்தாமணியின் - சிந்தாமணியைப் போல; அது நினைத்ததைத் தருவது. மந்தாரம் - கற்பகம். சிந்தையிலே இருந்து கருத்தை அறிபவன் என்ற பொருள் தோன்ற இதயாலயன் என்ற பெயர் அமைந்ததென்றபடி.

சர்க்கரை இராமசாமிப் புலவர்

(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

489. தித்திக்கும் அடைகொள்பெயர் இராமசா மிப்புலவர்
செல்வா அன்பின்
இத்திக்கு வரவிடுத்த கடிதம்வரப் பெற்றறிந்தேன்
யாவும் என்றும்
எத்திக்கும் புகழ்புலமைச் சிவகாம சுந்தரப்பேர்
ஏந்தல் யாரும்
நத்திக்கு மொழியாளன் தவப்பேறு நனியுவகை
நல்கிற் றுலோ.

கனகசபை முதலியார்

(வெண்பா)

490. தஞ்சைப் பதிவாழ் தயாபதிநன் னீதிபதி
நெஞ்சைப் பதிப்பால் நிறுவுபதி—மஞ்சைநிகர்
கையான்இன் சொல்லான் கனக சபைப்பெயர்கொள்
மெய்யான்நல் வாழ்வுறுக வே. (1)

491. சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்
சொல்லிய வண்ணம் செயலென்று—வல்ல
திருக்குறளை மாற்றித் திகழும் நினைப்போல்
இருப்பவர்கள் எங்கும் இலை. (2)

---

489. இது சர்க்கரை இராமசாமிப்புலவர் எழுதிய கடிதத்துக்கு விடை எழுதியபோது முதலில் வரைந்தது; தேதி: 24-12-1924.

தித்திக்கும் அடை என்றது சர்க்கரை என்ற அடையை. சிவகாம சுந்தரப்பேர் ஏந்தல் - சிவகாமசுந்தர தீட்சிதர். நத்து இக்கு மொழியாளன்; இக்கு - கரும்பு.

490. தஞ்சாவூர்ச் சப்ஜட்ஜாயிருந்தவர் இந்தக் கனவான். இவர் ஊற்றுமலை இருதயாலய மருதப்பத் தேவரிடமிருந்து சிந்தாமணிப் பதிப்புக்காக நூறு ரூபாய் வாங்கித் தந்ததோடு தாமும் முப்பது ரூபாய் உதவினவர். பதிப்பால் - இறைவனிடம்.

(கட்டளைக் கலித்துறை)

492. அக்கர வாபர ணன்மகிழ்ந் தாடும் அரங்கமெனற்
கொக்க இனித்த கனக சபைப்பெயர் உற்றவள்ளால்
மிக்க இயற்றமிழ்ச் சிந்தா மணிக்கு விடுத்தவெள்ளிச்
சக்கரம் முப்பதும் பெற்றேன் நிகழ்வபின் சாற்றுவனே.

(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

493. சாற்றுமலை நதிபுனைந்த செஞ்சடிலப் பரங்கருணைச்
சலதி பாலன்
பாற்றுமலை வகலுளத்துக் கனகசபைப் பெயர்கொளுமெம்
அண்ண லேதென்
ஊற்றுமலை வாழிதயா லயமருதப் பக்குருசிற்
குரைக்க என்றே
நேற்றுமலை வறநவில மறந்தமையால் இன்றிதனை
நிகழ்த்தி னேனுல். (4)

கிப்சன் கார்மேகல்

(வெண்பா)

494. காட்சிக் கெளியன் கடுஞ்சொல்லன் அல்லனேல்
மீக்கூறு மன்னன் நிலமென்னும்—மாட்சியுரை
கண்டேம்நும் பாற்கிப்சன் கார்மேகல் சாலமகிழ்
கொண்டேம் புகழ்வம் குறித்து. (1)

495. மதிபோல் எவர்க்கும் மகிழ்வளிக்கும் நுந்தம்
மதிபோல் எவர்பெற்றார் மண்ணில்—துதியமைந்து
காழ்த்தகுண மார்கிப்சன் கார்மேகல் காக்கநும்மை
வாழ்த்திடுமால் ஈசனையெம் வாய். (2)

---

492. அக்கு - என்பு. வெள்ளிச் சக்கரம் - ரூபாய்.

493. அலைநதி. கருணைச்சலதி - கருணைக்கடல். மலைவு அகல் உள்ளத்து. அலைவு - அலைதல். மலைவு அற நவில.

494. ஐயரவர்கள் சென்னை அரசியலார் கல்லூரியில் பணி ஆற்றிய போது ஒருநாள் சென்னைக் கவர்னர் கிப்சன் கார்மேகல் கல்லூரிக்கு வந்தார். ஐயரவர்கள் அறைக்கும் வந்து ஏடு எழுத்தாணி முதலியவற்றைப் பார்த்தார். அப்போது பாடியவை இதுவும் அடுத்ததுமாகிய பாடல்கள்.

495. நும்மைக் காக்க.

குடந்தை நண்பர் சங்கத்தினர்

(எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

496. மடந்தை மேனியன் இடந்த பூமியன்
மதத்த ராதியர் மதித்ததாய்க்
கடந்த ருந்தவன் மட ந்த விர்ந்தொளி
கவின்ற மேலவர் நுவன்றருள்
திடந்த யங்கிய லடைந்த தாயுறு
செழுந்த மிழ்ச்சொலை விழைந்தநம்
குடந்தை நண்பர திடந்த யங்கு
குணத்தை எங்ஙனம் உரைப்பனே.

குமாரசாமித் தம்பிரான்

(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

497. கன்றால்முன் விளவெறிந்த கண்ணனுயிர் உண்ணவரும்
கடுவ யின்று
மன்றுடல் உகந்ததிருக் கோமுத்தி வாணர்பணி
வழுவா தாற்றும்
குன்றுத புகழ்க்குமர சாமிமுனி வரன்மாடம்
குயிற்ற அன்னான்
நின்றுலவ் வேலைநடந் திடுமவன்றன் நடக்கிலது
நிற்குந் தானே. (1)

---

496. மடந்தைமேனியன் - இறைவன். இடந்த பூமியன் - பூமியைப் பெயர்த்த திருமால். மதத்தர் - இருவரையும் சார்ந்த சைவரும் வைணவரும். கடம் தரும் தவன் - அகத்தியன்.

497. திருவாவடுதுறையில் சின்னக் காறுபாறாக இருந்தவர் குமாரசாமித் தம்பிரான். ஐயரவர்களுடன் நெருங்கிப்பழகியவர். திருவாவடுதுறையில் தெற்குக் குளப்புரையின் மேல்பால் ஒரு பங்களாவைக் கட்டச் செய்து அவர் மேற்பார்வை பார்த்துவந்தார். ஒருநாள் பகல் 12 மணிக்கு ஐயரவர்களும் தம்பிரானும் காவிரிக்கு நீராடப் போனபோது, "நான் இங்கே வந்தமையால் அங்கே வேலை நின்றுவிடும்" என்று தம்பிரான் கூறினபோது பாடியது இது. கடு - நஞ்சு. கோமுத்தி - திருவாவடுதுறை. குயிற்ற - கட்டுவிக்க.

(வெண்பா)

498. வாழ்சுப் பிரமணிய வள்ளல்கரு ணைக்கடலில்
ஆழ்குமர சாமிமுனி ஆண்டகையே—தாழ்வில்
கரபாத் திரமுனிவன் காவளர்த்தற் குன்போல்
வரபாத் திரமார்தான் மற்று. (2)

(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

499. திருவென்றும் நின்றொளிரும் துறைசையிற்சுப்பிரமணிய
தேவற் கன்பிற்
பொருவென்றும் இன்றியொளி ருங்குமர சாமிமுனி
புங்க வன்றான்
மருவென்றும் வெளிக்கிலையென் பார்நாணத் தில்லைவெளி
மன்றில் மேனி
அருவென்றும் உருவென்றும் சொலநடிப்பார்க் கின்றுமரு
அளித்தான் மன்னோ. (3)

(தரவு கொச்சகக்கலிப்பா)

500. பூமணக்கும் பொழில்மணக்கும் பொன்னி வளநாட்டிற்
காமணக்குந் திருப்பனசைக் கடிநகரந் தனிபுரப்போன்
பாமணக்கும் புலவர்கள்செந் நாமணக்கும் பலவிசையான்
சேமணக்குந் தேமணக்குஞ் சிந்தையுளான் நிந்தையிலான்.

---

498. திருவாவடுதுறையில் மருதமரச் சாலையின் கீழ்புறத்தே உள்ள கரபாத்திரசுவாமிகள் நந்தவனம் சிதைந்த பொழுது தம்பிரான் தென்னை மரம் வைத்துப் பயிராக்கியதைப் பாடியது.

499. சிதம்பரத்தில் எழுந்தருளிய இறைவன் ஆகாசமே திருமேனியாக உடையவன். ஆகாசத்திற்கு ஒலி உரியதே யொழிய மரு (மணம்) இல்லை யென்று ஆன்றோர் கூறுவர். அவர்கள் நாணமுறக் குமாரசாமித் தம்பிரான் ஆகாச வடிவினராகிய சிவபெருமானுக்கு மருவை அளித்தார் என்பது கருத்து. பொரு - ஒப்பு. மரு - மணம். வெளிக்கு - ஆகாயத்துக்கு. மரு - மருவென்னும் இலை.

500. இதுமுதல் ஆறு பாடல்கள் திருப்பனந்தாளில் தலைவராக இருந்த இராமலிங்கத் தம்பிரான் அவர்கள் தமக்குச் சின்னப்பட்டத்தில் இவரை அமர்த்திய போது (1880–ஆம் ஆண்டு) பாடியவை.

கா - சோலை. கடி - காவல். சே மணக்கும் - செம்மையையுடைய. இது இராமலிங்கத் தம்பிரான் புகழைச் சொல்லியது.

501. திருமகளிர் தாணுவைச்சேர் செய்கையா தெனக்கண்டோர்
பெருவியப்பு மருவமிகப் பிறங்கெழில்ம டாலயத்தான்
மருவலர்கள் மருவலர்கைக் கொடுவணங்கும் மலர்த்தாளான்
துருவுமிர வலர்க்கம்பொன் சுரந்தளிக்கும் மலர்க்கையான்.

502. பொன்னாலும் மணியாலும் புதிதுபுதி தாப்பிரமன்
தன்னாலு சிரந்துளக்கத் தகுமிடங்கள் பலவமைத்தோன்
மன்னாலும் புகழ்போர்த்த இராமலிங்க மாதவன்சீர்
என்னாலும் எவராலும் எடுத்துரைப்ப அரிதாமால். (6)

503. அன்னவன்பன் னெடுங்காலம்
அருந்தமிழ்நூல் பற்பலர்க்குச்
சொன்னவனும் வரநதியிற்
றூயவனும் அறம்வளர்க்கும்
மன்னவனும் உயிர்க்கிரங்கும்
மனத்தினனும் மற்றெவர்க்கும்
முன்னவனு மாயவொரு
பின்னவனைப் பெற்றுமுன்னி. (7)

504. ஆய்ந்துதுரு விடுகாலத் தவ்வளவு குணகணமும்
வாய்ந்துபொறை வாய்ந்துநலம் வாய்ந்தமலன் அடிப்பத்தி
ஏய்ந்துதனை யேய்ந்துதவம் எனுங்கடலி னொருவாது
தோய்ந்துமிளி ருங்குமர சாமியெனுந் துறவரசை. (8)

505. கண்டிந்த அறம்வளர்க்குங் கனவான்மற் றிவனேயென்
றண்டிந்தப் பரம்வகிப்பாய் ஐயவென இளவரசாக்
கொண்டிந்த உலகிலுளோர் கொண்டாட வீற்றிருந்தான்
பண்டிந்தப் பெரும்பேறு படைத்தவர்மற் றெவரம்மா.

---

501. இதுவும் இராமலிங்கத் தம்பிரான் புகழைக் கூறுவது. திருப்பனந்தாளில் அஷ்டலட்சுமிக் கட்டு என்ற இடத்தில் எட்டு லட்சுமிகள் எட்டுத் தூண்களில் உள்ளனர். தாணு - தூண்; சிவன் என்பது தொனிப் பொருள். மருவலர்கள் - பகைவர்களும். மரு அலர் கைக்கொடு - மணமுடைய மலர்களைக் கையிலே கொண்டு.

503. வர நதியின் - கங்கையைப் போல. பின்னவனை - சின்னப் பட்டத்துக்குரியவனை.

504. ஏய்ந்து - பொருந்தி. தனை ஏய்ந்து - தன்னை யொத்து.

505. பரம் - பாரம்.

குமாரசாமி ரெட்டியார்

(ஆசிரியப் பா)

506. பூமலி துணர்ச்சினைக் காமலி வளஞ்சால்
நெல்லூரி னின்றும் நெல்லையில் வந்துமுற்
காலத் திருந்த காவலர் மதிக்க
நடந்தே பல்பகை கடந்தே அவரால்
கொற்றபா ளையப்பே ருற்றவூ ராதிய
தரப்பெற் றேயினுந் தாரெனும் பெயரும்
பெற்றவர் மரபி லுற்றிடு தோன்றல்
நிறைமங் கலமார் துறைமங் கலத்துச்
சிவப்பிர காசச் செழுந்தமிழ்ப் பெரியோன்
உரைத்திடு வெங்கை யுலாவினில் அன்புடன்
பாராட் டியகுலப் பால்வரு மதியே
சென்னைமா நகரின் மன்னர்கல் லூரியிற்
கற்பிப் பவர்தங் கண்போல் விளங்கிக்
கற்றே முதலி லுற்றே பெருமை
விரசுறு முதன்மைப் பரிசுகள் பெற்றோய்
நீதிமன் றத்தில் நிகழ்வழக் கறிஞரிற
பல்வளத் துளுமுயர் சொல்வளம் மருவித்
தூய்மை மேவிய வாய்மையைத் தெரித்தே
மிகுபுக ழெய்திய வீறுடை யாள
ஊர்களும் அவற்றுவாழ் வோர்களும் சாலத்
திருத்தம் மருவிச் செப்பமும் வாய்ந்தே
நகரும் நாக ரிகரு மாகி
விளங்குறச் செய்ய வேண்டு மென்ற

---

506. திருப்பனந்தாள் காசிமடத்திலிருந்து ஆண்டு தோறும் தமிழ் வித்துவான் தேர்வில் முதலில் தேறுபவருக்கு அளித்துவரும் ஆயிரம் ரூபாய் பரிசளிப்பு விழாவில் 1931 ஆம் அக்டோபர் மீ 31-ஆம் தேதியில் தலைமை தாங்கிய சென்னை அரசியல் கல்வியமைச்சர் திரு குமாரசாமி ரெட்டியாரவர்களுக்கு அளித்த நல்வரவு.

அடி, 1. துணர் – கொத்து. சினை – கிளை.

10. "கண்ட குலத்திற் கருதின் இரட்டியாம், பண்ட குலத்தின் பயனுளோன்" என்பது சிவப்பிரகாசர் வாக்கு.

பீடு மிகுத்தகோட் பாடுடைக் குரிசில்
நெல்வேலி நாட்டு நிருவாக சங்கத்
தலைமையா தியவை தாங்கியோவ் வொன்றையும்
நன்றாச் செய்த குன்றாச் செல்வ
முன்னதாம் பெருமைசால் சென்னைமா நகரச்
சட்ட சபையிற் சார்ந்தினி திருந்துப
காரம்நன் கியற்றிய கடப்பாட் டாள
திருவள் ளுவர்தாந் திருவுள முவந்தே
எழுமைத் துணையென் றியம்புறு கல்வித்
துறைமுத லாயவை குறைவிலா தாற்றும்
மந்திரி யாகிய சுந்தரக் குரிசில்
பன்னரும் வளஞ்சால் சென்னைமா காணத்து
உயக்கமில் சாரணர் இயக்க மதற்குப
அக்கிராச னாதி பதியா அமைந்தே
விக்கிர மச்செயல் மிக்கவீ றுடையோய்
எப்பா லினர்க்கும் இரங்கியே எய்ப்பில்
வைப்பா மிவன்பெயர் வைப்பாற்றுப் பாலம்
அதற்குவைத் திடுதனன் றாமெனத் தக்கவர்
எண்ணிநின் பெயர்வைத் தினிதவர் குழுமி
அறந்தழைத் திடவதைத் திறந்திட அமைந்தோய்
திடமொழி யாத வடமொழி யுடனே
அயல்மொழிப் பொருள்தழீஇ நயனுற் றெவ்வொரு
தேச பாஷையும் செழித்திட வேண்டும்
என்றே எண்ணி நன்றே புரிவோய்
முற்கா லத்தும் பிற்கா லத்தும்
உளநா வலர்புனை வளமார் தமிழ்நூற்
பொருணயந் தேரும் பருணிதர் நிதியே
தோமில்சீர்க் குமார சாமிப் பெயர்புனை
வள்ளால் வருக மணியே வருக
வேட்டுயாம் மொழிவதைக் கேட்டினி தளிக்க
திருவைகுந் தத்திற் றிருவவ தரித்துத்
துறவர சாகி உறுபுகழ் மருவி
அவியாச் செந்தமிழ்க் கவிகே சரியாய்

---

50. பருணிதர் - அறிஞர். 51. தோம் - குற்றம்.

ஆசிலாப் புகழ்சேர் காசியிற் குமார
சாமி மடாலயந் தாபித் தருளிய
பொருவில்சீர்க் குமர குருபர முனிவன்
மரபு விளங்குற வந்தோன் பணந்தாட்
காசி மடத்துக் கவின்பெறு தலைவன்
ஆகியே மிகுமதி யூகியாய் ஆதுலர்க்கு
அறுவகைச் சுவையுங் குறைவற அமைந்த
அன்ன தானமும் அருங்கலை வலோர்க்குச்
சொன்ன தானமும் துரிசறச் செய்தினும்
அறத்தின் வகைகளைத் திறப்பட ஆற்றும்
மேதையார் சாமி நாத முனிவரன்
அருங்கலை விநோதன் ஆற்றல்மிக் குடையோன்
கிளர்ச்சிகொள் தமிழின் வளர்ச்சியைக் கருதித்
தரமுறு மூல தனத்தொடு மமைத்த
விரசுறு மாயிர இரசத வட்டப்
பரிசிலைப் புலவராம் பட்ட தாரிகளுள்
முதல்வனுக் களித்தவன் விதலை தீர்த்திவண்
உள்ள அன்பர்களின் உள்ளமின் புறச்செய
வேண்டு மென்றே விரும்புதும் பலவே.

கோபால கிருஷ்ண பாரதியார்

(கட்டளைக் கலிப்பா)

507. கோல மார்ந்தபொன் மன்றுள் நடித்தருள்
குஞ்சி தப்பதம் நெஞ்சிற் றியானித்தே
சீல மார்ந்த குணக்குன்ற மேபல
சீர்த்தி மேவிய கீர்த்தன மாகிய
சாலு நல்லனு பானத்தி லேசிவ
சரண அன்பு மருந்தை அளித்தகோ
பால கிருஷ்ணமா பாரதி யேநின்றன்
பத்தி யாற்றலெம் சித்தம் உருக்குமே.

---

62. ஆதுலர் - ஏழைகள். 71. இரசதவட்டம் - ரூபாய்.

507. இது கோபால கிருஷ்ண பாரதியார் சரித்திரத்தைக் கலைமகளில் எழுதிய போது அதன் இறுதியில் எழுதியது. (25-6-1936.)

கோபால ராவ்

(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

508. எண்டிசையோர் எடுத்தியம்பு கோபால ராயவள்ளல்
இசையை மேன்மை
அண்டினிய மொழிகளினுல் அறிஞருவப் புறநவிலும்
ஆங்கி லேய
பண்டிதர்கள் பலர்முனம்அன் னவன்சீரை யானுரைத்தல்
பரிசன் றேனும்
விண்டியம்பென் னுசைமிகத் தூண்டுதலால் ஒருசிறிது
விளம்பு வேனுல். (1)

509. மன்னியநற் பொருட்கல்வி கற்றலரி ததினரிது
மாற ஐயம்
அன்னியர்பால் வினவாமை அதினரிது மாணுக்கர்க்
கையந் தீர்த்தல்
பன்னியவா றேநடத்தல் அதினரிய திவையியல்பாப்
படைத்தோன் அன்பு
துன்னியவன் னேயைநிகர்த்த கோபால ராயப்போர்த்
தூய்மை யோனே. (2)

510. மாருத வாய்மைதனில் மனச்சான்றுக் கொத்தியலும்
மாண்பு தன்னில்
தேருத மாணவகர்க் கினிதுவிளங் குறத்தெருட்டும்
திண்மை தன்னில்

---

508. கும்பகோணம் அரசியலார் கல்லூரியில் தலைவராக இருந்த திரு கோபால ராவ் சென்னைக்கு மாற்றலாகிச் சென்றபொழுது அவருக்கு வழியனுப்பு விழா 1882-ஆம் ஆண்டு, செப்டம்பரில் நடைபெற்றது. அப்போது பாடியவை, இதுமுதல் பத்துப் பாடல்கள்.

பரிசு - முறை.

509. கோபாலராவ் தாமே கற்றுப் பரீட்சையில் தேர்ச்சி பெற்றவர். அதனுல் ஐயம் மாற அன்னியர்பால் வினவாமையை உடையவரென்ருர்.

510. தேருத - தெளியாத. தெருட்டும் - தெளியச் செய்யும்.

சீருந இயல்புடைய கோபால ராயவண்ணற்
சிவணு வோர்யார்
பேருய அவன்பெருமை மிகச்சிறியன் நாவொன்றிற்
பேசற் பாற்றே. (3)

511. உண்மதிக்கும் இருளகற்றும் ஒருதிறத்தை இயல்பாக
உடைய தேனும்
வண்மதிமெய்ப் புகழ்க்குடந்தைக் கோபால ராயமுகில்
மதிக்கொவ் வாதால்
வெண்மதிதேய்ந் திடுந்தூலம் கலங்கியலைந் திடுமந்திவ்
விதத்தால் சாற்றும்
தண்மதியென் தொடர்க்குவமை தள்ளுமதி எனக்கொளவே
தக்க தாமால். (4)

512. எல்லாரும் பரிதிநிகர் கோபால ராயநம
திறைவ னுண்டாண்
டெல்லாரும் புரிந்தவருந் தவமனையான் உதித்தபினர்
இந்நாட் டுள்ளே
எல்லாரும் நயவாங்கி லேயமொழி தனில்வலராம்
இறைமை யுற்றார்
எல்லாரும் நன்னடைய ராயினர்நல் லதிகாரம்
எய்தி னாரே. (5)

513. எந்நாளுந் திருந்தமுள திந்நாடென் றெடுத்திசைப்பர்
யானவ் வாறு
பன்னுமல் அறிவுடைய பலர்சொலற்கும் அரும்புகழ்க்கோ
பால ராய

சிவணுவோர் - ஒப்பவர்.

511. கோபாலராவின் மதிக்கும் சந்திரனுக்கும் உள்ள வேற்றுமையைக் கூறியது. தூலம் - உடம்பு. தண்மதி என்பதைத் தள் மதி என்று பிரித்து, உவமை ஒவ்வாமல் தள்ளும் மதி என்று கொள்ளத்தக்கதாயிற்று என்றபடி.

512. எல் ஆரும் பரிதி - ஒளி நிரம்பிய கதிரவன். கோபாலராயனாகிய நமது இறைவன்; இறைவன் - தலைவன்.

513. எந்நாளும் - எந்தக் காலமும்.

மன்னூர்வ மொடுமாண வகர்யலர்க்கும் அறிவுறுத்தி
வழிப்ப டுத்த
இந்நாளே திருத்தமுள திந்நாளே திருத்தமுள
தெனச்சொல் வேனுல். (6)

514. குவ்விடத்தார் புரியறனோர் கோபால ராயவள்ளல்
குடந்தை யுற்ற
திவ்விடத்தார் புரியறமென் மருமென்க சென்னைநகர்ச்
சேக லுற்ற
தவ்விடத்தார் புரியறமென் மருமென்க யான்நவிலேன்
அவ்வா றேற்றூர்
தெவ்விடச்செய் துரைத்தனத்தார் மொழிபுரிந்த வறமெனவே
செப்பு வேனுல். (7)

515. முன்னாடுந் திறமைதனில் மிகவல்ல துரைத்தனத்து
முதல்வர் தொண்டை
நன்னாடு சான்றோரை உடைத்தென்றல் தனைப்புதுக்க
நாடிக் கொல்லோ
எந்நாடும் புகழினிய கோபால ராயவண்ணல்
இணைமிக் கோங்கும்
மின்னாடு மணிமாடச் சென்னைநகர் வரவிரும்பு
விதந்தான் மன்னோ. (8)

516. குசைமணக்கும் நுனியதனிற் கூர்த்தமதித
துரைத்தனத்தார் குலவக் கேட்டு
நசைமணக்கும் மனத்தினராய்ச் சிரந்துளக்க
அவர்கள்மொழி நவில வல்லோன்
திசைமணக்கும் வடமொழிதென் மொழிபயின்றோர்
சீர்தூக்கும் மேன்மை யாளன்
இசைமணக்கும் கோபால ராயவண்ணல்
பெருமையிற்றென் றிசைக்கற் பாற்றோ. (9)

514. குவ்விடத்தார் - நிலவுலகில் உள்ளவர். ஏற்றூர் - எதிர்த்தவர்கள். தெவ் விட - பகைத் தன்மையை விடும்படி. துரைத்தனத்தார் மொழி- ஆங்கிலம்.

515. இணை மிக்கு - ஒப்பினிலும் மிகுந்து.

516. குசை - தருப்பை. குசாக்கிர புத்தி என்பது வழக்கு. குலவ - உரையாட. அவர்கள் மொழி - ஆங்கிலம்.

517. எடுத்துரைப்பன் தெரிந்தவற்றுள் எனப்புகன்ற
நீயங்ஙன் இசையா தீண்டு
விடுத்தவிதம் என்னையெனில் மருள்கொடுத்தும்
பொருள்கொடுத்தும் மெலியா வண்ணம்
அடுத்தவரைப் புரந்தருளும் இவன்பிரிவா
னெனத்துன்ப அளக்க ராழ்ந்து
மடுத்தமனம் அவன்வசமுற் றிருத்தலினால்
நினைந்துரைக்க வருந்து வேனால். (10)

வைகவுண்ட் ஜார்ஜ் கோஷன்

(ஆசிரியப் பா)

518. பூமலி கல்வி பொறையறி வாதிகள்
தாமலி ஐந்தாம் ஜார்ஜ்மன் னவர்பிரான்
பிரதிநிதி யாய பெருங்குண நிதியே
சான்றலார்ட் கோஷன் தனயனும் மணியே
தீதிலா ஆக்ஸ்போர் டாதியிற் கல்வி
முறையே பயின்ற நிறைசீர் உடையோய்
தக்கதா ளாண்மை மிக்கவே ளாண்மைச்
சங்கத் திலுங்தே சாபிமா னத்திலும்
ஊக்க மிகச்செய் தாக்கம தளிப்போய்
பெற்றுறு வளமார் பெஜவா டாவிற்
பற்றுறும் ஆந்திரப் பல்கலைக் கழகத்
திறப்பு விழாவிற் செப்புதாய் மொழிகளின்
அபிவிருத் தியையும் அவற்றின் பயனையும்
ஆதர வுடன்பகர் மூதறி வுடையோய்
ஆராய்ந் தெவற்றையும் அறிந்தே செயும்நிலை
விராய அறுபது பிராயம் அமைந்தோய்
ஜயமலி வைகௌண்ட் ஜார்ஜ்கோ ஷப்பெயர்
மேவிய பெருமை மிக்கோய் வருக

---

517. ஈண்டு விடுத்த விதம் – இங்கே நிறுத்திய வகை. அளக்கர் – கடல்.

518. சென்னைக் கவர்னராக விளங்கிய திரு கோஷன் அவர்கள் 15-10-1926—இல் சிதம்பரம் மீனாட்சி தமிழ்க்கல்லூரிக்கு வந்தபோது வழங்கிய வாழ்த்து.

வளமலி சென்னை மாகா ணத்தின்
தலைவா வருகமே தகையோய் வருக
அன்புடன் இங்குயாம் அறைதல் கேண்மதி
அறிவுக் கறிவாம் அமலனுக் கிடமாய்
இம்மைப் பயனும் மறுமைப் பயனும்
முத்தி யின்பமும் முறையே அளித்திடும்
தில்லைமாத் தலத்தின் எல்லையின் உள்ளால்
தேனாட்சி செய்புகழ் மீனாட்சி பெயரை
ஆதியிற் கொண்டவாம் ஆங்கிலக் கழகம்
வடமொழிக் கழகம் வண்டமிழ்க் கழகம்
வடமொழி தென்மொழி வல்லவ ராய
பண்டிதர்க் கோங்கிய பயனை அளித்தலில்
புதிய தாகிய போத னாமுறைக்
கழகமா திகளை அழகுற அவணவண்
தன்பொரு ளாலே தாபித்து நடத்தும்
ஆண்டகை வள்ளல் அண்ணா மலைவேள்
வேண்டுகோட் கிணங்கி விசயன் படைபெறு
விசயத் தலமாம் வேட்களம் அதனில்
இந்நாள் அன்னவன் இயற்றிய பௌதிகப்
பனுவல் முதலிய பாட வகைகள்
மாண்புடன் நடக்குமா மண்டபந் தன்னை
விருப்புடன் திறக்க விசயம் செய்தமை
இத்தகை யாய உத்தமப் பணியே
தேசத் தொண்டெனத் தெரிவித் தற்கும்
இவ்வறம் புரிவோர் எவரினுஞ் சிறந்தோர்
எனவே செல்வர்க் கியம்புவ தற்கும்
எவ்வகை உதவியும் இராசாங் கத்தார்
செய்தா தரிக்கச் சிறந்ததேம் இஃதென
விருப்பமோ டெவர்க்கும் விளங்கச் செயற்கும்
என்றே இன்றுயாம் எண்ணுகின் றேமால்
மேற்கூ றியபல வித்யா சாலைகள்
தழைத்தே ஓங்குமித் தானமே இணையிலாச்
செந்தமிழ் யூனிவர் ஸிடிதனக் கேற்ற

21. கேண்மதி - கேட்பாயாக. 46. தேம் - இடம்.

நல்லிடம் என்பதை நன்கறி குவையெனக்
கூறு திருந்தனம் தேறு யல்லை
அண்ணலே நீண்ட ஆயுளா திகளைப்
பெற்றே இனுபுயர் வுற்றேங் குறவருள்
என்றே ஈசனை ஏத்துகம் பலவே.

சின்னசாமிப் பிள்ளை

(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

519. உருவில்லான் அருவில்லான் உயரருளா வுறுமில்லான்
ஓங்கு மேருப்
பெருவில்லான் கைக்கொளெனப் பிறங்கில்லான் அடிமலரே
பேணும் அன்பன்
திருவில்லார் தமையுமிகத் திருவுள்ளா ராச்செய்யும்
சிறப்பி னென்றும்
பொருவில்லான் எனும்பெரிய புகழ்ச்சின்னச் சாமிமகிழ்
பூத்து வாழ்க.

சுந்தரலிங்கத் தம்பிரான்

(வெண்பா)

520. சுந்தர லிங்க சுகுணமுனி யேநின்போல்
சுந்தரநற் பாடலெவர் சொல்லுவார்—சுந்தரஞ்சேர்
நீர்வாய் வடுவின் நிமிடப் பொழுதினிலே
தீர்வாயென் மேற்கொள் சினம்.

---

519. பாலைக்காட்டில் வாழ்ந்த திரு சின்னசாமிப் பிள்ளை ஐயரவர்களின் நண்பர்களில் ஒருவர்.

அருளா உறும் இல்லான் - தன் அருளே மனைவியாக உற்றவன். பிறங்கு இல்லான் - விளங்கும் இருப்பிடத்தை உடையவன். பொரு இல்லான் - ஒப்பில்லாதவன்.

520. திருவாவடுதுறை மடத்தில் சின்ன ஒடுக்கமாக இருந்த சுந்தரலிங்கத் தம்பிரான் பாடங் கேட்டுக் கொண்டிருந்தபோது பிணக்குற்ற காலையில் பாடியது. (1878.)

பெண்ணாத்தூர் சுப்பிரமணிய ஐயர் உயர்நிலைப்பள்ளி

(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

521. முன்னுமுயிர்த் துணையாகி அழிவின்றி இருமையையும்
முறையே நல்கி
இன்னுமநே கம்பெருமை வாய்ந்திலங்கு கல்வியினை
இடையூ றின்றி
மன்னுபற்பல் சிறுவர்களும் வரன்முறையே எந்நாளும்
மருவி மேன்மை
துன்னுறுமா றியற்றுபெருந் தருமத்தின் பெருமையெம்மாற்
சொல்லற் பாற்றே. (1)

522 நன்னிதிச்சுப் பிரமணிய விப்பிரன்பேர்க்
கழகமவன் நயந்த வாறே
பன்னிதிசேர் திருத்தொண்டை நாட்டுமயி
லையின்முக்கட் பரமன் கோயிற்
சந்நிதிசேர் திருத்தவட கரைவாணி
விலாசமதில் தாபித் தந்த
மன்னிதிநேர் தருமபரி பாலனஞ்செய்
குழாத்தின்சீர் வகுப்பார் யாரே. (2)

523. நலப்படைத்த வளப்பெண்ணாத் தூர்வருசுப்
பிரமணிய நல்லோன் பேர்கொள்
பலம்படைத்த கழகமிதைப் பாலனஞ்செய்
சங்கமிதிற் பயிலும் பாலர்
குலம்படைத்த அகிலேசர் அருள்மருவி
இதைத்திறந்த கோமான் நீதி
வலம்படைத்த தயாநிதிசுப் பிரமணிய
மணிபுகழ்போல் வாழ்க மாதோ. (3)

---

521. பள்ளிக்கூடம் தொடங்கிய நாளில் பாடி உரை விரித்தவை, இது முதல் நான்கு பாடல்கள். இந்த விழாவில் ஸர் எஸ். சுப்பிரமணிய ஐயரவர்கள் தலைமை தாங்கினார்கள்.

522. திருத்தம் - தீர்த்தம். பி. எஸ். ஹைஸ்கூல் தொடக்கத்தில் வடக்கு மாடவீதியில் வாணீ விலாசம் என்ற கட்டிடத்தில் இருந்தது.

523. அகிலேசர் - விசுவநாதர்.

(கட்டளைக் கலித்துறை)

524. பாவார் கவுணியர் என்னைப்பெண்
ஆக்கிய பண்புமிக்க
காவார் மயிலையில் இந்நாள்
அமைத்த கழகமென்றும்
தாவாது நாளும் தழைத்தோங்கச்
செய்தருள் சாமியென்று
தேவாதி தேவன் அடித்தா
மரையினைச் சிந்திப்பனே. (4)

சுப்பிரமணிய தேசிகர்

(வெண்பா)

525. அங்க மதிபணந்தீ யார்கலை மீநோக்கங்
கங்கை யுமையடைந்த காரணத்தால்—பொங்கிவளர்
சீர்த்துறைசை வாழ்சுப் பிரமணிய தேசிகரே
நேர்சிவனுக் கென்பார்க ணோர்ந்து. (1)

526. கோசிகமும் பொன்னும் கொடுத்துத் தனபதியாய்ப்
பேசிகத்திற் செய்சுப் பிரமணிய—தேசிகனை
உற்றேன் அவன்முன் உறுவோ ருடனிருக்கப்
பெற்றேன் இனியென்ன பேறு. (2)

---

525. மேலகரம் சுப்பிரமணிய தேசிகர் திருவாவடுதுறை ஆதீனத்தில் 16-ஆம் பட்டத்தில் ஞானசிரியராக எழுந்தருளியிருந்தவர்; ஐயரவர்களுக்குப் பாடம் சொல்லிப் பல வகையில் உதவியவர்.

இது சுப்பிரமணிய தேசிகருக்கும் சிவபிரானுக்கும் சிலேடை.

அங்கம் - உறுப்பு, என்பு. மதி - புத்தி, சந்திரன். பணம் - பொருள், பாம்பின் படம். தீ ஆர் கலை - நெருப்பு நிறம் பெற்ற காவியுடை, நெருப்பு ஆத்தி சந்திரனென்பன; மீ நோக்கம் - மேலான பார்வை, மேல் நோக்கிய நெற்றிக் கண். கங்கை - தலை கை, கங்கையாறு. உமை - உம்மை, உமா தேவி.

526. கோசிகம் - பட்டாடை. தனபதி - குபேரன். பேசு இகத்தில்.

527. எல்லாப் பொருளும் எனக்களிப்பாய் என்றுகலை
வல்லார் பலரும் வகுப்பரது—கல்லேனுல்
ஒல்லானென் றெண்ணுமல் உள்ளானென் றெண்ணுமல்
இல்லான் எனச்செய் எனை. (3)

(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

528. வல்லான்றென் துறைசையிற்சுப் பிரமணிய
தேசிகனை மாநி லத்தோர்
எல்லாமற் றிவனெந்த உயிர்க்குமெந்த
நாளுமிக இதமே செய்யும்
நல்லானென் றெடுத்துரைப்பர் அடுத்தவர்க்கு
மயலகற்றும் நல்லார் யார்க்கும்
பொல்லானென் றெடுத்துரைப்பன் என்மொழியைத்
தடுத்துரைப்பார் புவனத் தியாரே. (4)

529. அற்றூர்க்குத் தாயனைய துறைசையிற்சுப்
பிரமணிய அமலன் றன்பாற்
கற்றூர்க்குக் குறையுளதோ மற்றவன்தன்
திருமுகத்தைக் கண்ணிற் காணப்
பெற்றூர்க்குத் துயருளதோ உரைப்பமிக
இனிக்குமவன் பெயரை வாயால்
சொற்றூர்க்குத் துயருளதோ இரும்புவியில்
நாவலர்காள் சொல்லு வீரே. (5)

530. வந்தடுத்த இரவலரை வடதிசைக்கோ மானெனச்செய்
வண்மை யுள்ளோன்
நந்தடுத்த புனற்பொன்னித் தென்றுறைசை அமலகுரு
நாதன் ஏதம்

---

527. வீடு கொடுக்கவேண்டுமென்று பாடியது. இல்லான் - இல்லத்தை உடையவன்; இல்லாதவனென்பது தொனிப் பொருள்.

528. மயல் அகற்றும் நல்லார் - மயலை விரிவாக்கும் மகளிர்.

529. கும்பகோணம் கல்லூரியில் தமிழாசிரியப் பணியை மேற்கொண்டபோது பாடியது.

530. வடதிசைக் கோமான் - குபேரன். நந்து - சங்கு.

தந்தடுத்த இச்சைகெட அகற்றருட்சுப் பிரமணிய
சாமி யின்பால்
முந்தடுத்த என்பிறப்பே புனிதமுள திதற்கையம்
மொழிவார் யாரே. (6)

531. பூமேவு கயிலாய பரம்பரையில் கோமுத்தி
புரத்து மேய
தூமேவு சயிலாதி திருமரபு மேன்மேலும்
துலங்கத் தோன்றி
நாமேவு பலகலையுஞ் சைவமும்நல் லோர்குழுவும்
நலம்பெற் றோங்க
மாமேவு பெருந்தகைச்சுப் பிரமணிய தேசிகன்சீர்
வாழ்க மன்னோ. (7)

532. தேடியமால் அயற்கரிய செழுஞ்சுடரே துறைசைத்தியா
கேசா நீஇன்
றுடியதற் கேதுபல ரும்பலவா அறைவரங்ஙன்
அறையேன் எங்கும்
நீடியசீர் உற்றிடுசுப் பிரமணிய மாமணியை
நேரிற் கண்ட
பீடியலும் பெருமகிழ்ச்சி என்றெடுத்துப் பலகாலும்
பேசு வேனே. (8)

(கட்டளைக் கலித்துறை)

533. நின்னு தரவை நினையுந்
தொறுந்தொறும் நெஞ்சகம்வே
றுன்னுமை யாலும் பொறிவசஞ்
சேறல் ஒழிந்தனன்யான்

---

531. கோமுத்தி புரம் - திருவாவடுதுறை. சயிலாதி திருமரபு - நந்தி தேவர் பரம்பரை.

532. திருவாவடுதுறையில் சொர்ணத்தியாகர் எழுந்தருளி நடனம் செய்தபோது பாடியது.

என்னு ருயிரனே யாய்வள
மாரும் எழிற்றுறைசை
மன்னு எழிற்சுப் பிரமணி
யப்பெயர் மாமணியே. (9)

(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

534. கருணையெனும் கடல்பெருகும் மடையாய நினதுவிழிக்
கடையும் சீதத்
தருணமதி அனையமுக மண்டலமும் தெளியமுத
தாரை போல
வருமினிய மொழிவாக்கும் வருவோர்க்கு வரையாது
வழங்கு கையும்
திருவருட்சுப் பிரமணிய குருமணியே காண்பதென்று
சிறியேன் மன்னோ. (10)

535. நல்வேளை தனிற்சென்னை நகர்க்கேப் புறப்படென
நவின்றே என்னை
ஒல்வேளை தனில்விடுத்தாய் அவ்வேளை நினைப்பிரிய
உஞற்றும் தீய
அல்வேளை என்பதனை அறியாது பிரிந்துதுயர்
அடைந்தே னந்தோ
வில்வேளை வென்றபெரு விறலுடைச்சுப் பிரமணிய
விமல வாழ்வே. (11)

(வெண்பா)

536. சருவசித்தாண் டிற்றனுமா தத்திருபத் தைந்தில்
வருசனியொன் பான்றிதி வாரத்—திருநாளாம்
பேரணவு சீர்ச்சுப் பிரமணிய வள்ளல்பரி
பூரண மான பொழுது. (12)

---

534. தேசிகர் பரிபூர்ணமானபோது பாடியவை, இது முதல் உள்ள பாடல்கள். (7–1–1888).

தருணமதி - இளஞ் சந்திரன்.

535. அல்வேளை - பொல்லாத நேரம். வில்வேளை - வில்லையுடைய மன்மதனை.

537. சுந்தர மூர்த்தியென் றும் தூயமெய்கண் டானென் றும்
முந்தறிஞர் சொல்லும் முறைக்கேற்ப—எந்தையைப்
பேதிலா தான்சுப் பிரமணிய தேசிகன்றான்
சோதிநாட் சேர்ந்தானன் றே. (13)

538. ஞானசம் பந்தனென்பேன் நன்கமைவா கீசனென்பேன்
சான முறுஞ்சுந் தரனென்பேன்—மானமணி
வாசக னென்பேன் வளர்சுப் பிரமணிய
தேசிகனை நாயேன் தினம். (14)

539. பேரா அருட்சுப் பிரமணிய தேவனையாம்
பாராத வண்ணஞ்செய் பான்மையினால்—தீரா
அநியாயஞ் செய்முடவ னாட்சித் தினத்தைச்
சனிநா ளெனச்சொலலாந் தான். (15)

(கண்ணிகள்)

540. மாசிகந்தோர் சூழ வளர்சுப் பிரமணிய
தேசிகனுந் தேவைத் தெரிசிப்ப தெந்நாளோ. (16)

541. எள்ளலற எப்பொருளும் ஈத்துவக்கும் கோமுத்தி
வள்ளல்முகம் கண்டு மகிழுநாள் எந்நாளோ. (17)

542. ஏணாக்கும் நூற்பொருள்கள் எல்லாம் எடுத்தினிது
மாணாக்கர்க் கோதுதிரு வாய்மலரைக் காண்பதென்றோ.

543. தெய்வத் தமிழின் செழுஞ்சுவையைப் பாராட்டும்
சைவக் கொழுந்தின் சபைகாண்ப தெந்நாளோ. (19)

544. இரவலர்கள் எல்லோர்க்கும் எய்ப்பில்வைப்பாய் மேய
புரவலனைக் கண்டுமகிழ் பூத்திடுவ தெந்நாளோ. (20)

545. நிரைநிரையா ஆதுலரை நேர்நிறுத்திச் செம்பொன்
விரைவின் அளிக்கும் விறல்காண்ப தெந்நாளோ. (21)

---

537. சுந்தரரும் மெய்கண்டாரும் மறைந்த நாள் சுவாதி. எந்தையை - சிவபெருமானை.

538. வாகீசன் - திருநாவுக்கரசர். சானம் - தியானம்.

539. முடவன் - சனி.

542. ஏண் - பெருமை.

545. நிரை - வரிசை. ஆதுலர் - இரவலர்.

546. வறுமைப் பிணிக்கு மருந்தாக மேவி
உறுநிதியைக் கண்டுவகை உற்றிருப்ப தெந்நாளோ.

547. இன்றிரப்போர் வந்தா ரிலரென் றியம்புகுணக்
குன்றின்மொழி கேட்டுவகை கூருநாள் எந்நாளோ.

548. தன்வருத்தம் பாராது சந்ததமு மேபிறர்பால்
மன்வருத்தம் போக்கியருள் வள்ளல்தனைக் காண்பதென்றோ.

549. ஈத்துவக்குந் தன்விரதம் எப்போதுங் குன்றாது
காத்துவக்குங் கோமுத்திக் கற்பகத்தைக் காண்பதென்றோ.

வெ. ப. சுப்பிரமணிய முதலியார்

(வெண்பா)

550. செந்தமிழ்வெள் ளக்கால் திளைத்தாட வெள்ளக்கால்
வந்தசுப்ர மண்ய மதிவல்லோன்—தந்தசெய்யுள்
தைத்தியர்க்கு நேராந் தறுகண்மை தாங்கியுழல்
வைத்தியர்க்கு நல்ல மதி.

சண்பகக் குற்றாலக் கவிராயர்

(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

551. குலத்தாலும் குணத்தாலும் குறியாலும்
நெறியாலும் கோதி லாத
நலத்தாலும் கொடையாலும் நடையாலும்
குறித்தபொருள் நாட்ட வல்ல
வலத்தாலும் திருவாலும் உருவாலும்
மெய்ப்பொருளை மதிக்க வல்ல
புலத்தாலும் தனக்கிணையில் சண்பகக்குற்
றாலமெனும் புலவன் வாழ்க.

550. வெள்ளக்கால் சுப்பிரமணிய முதலியார் போலி வைத்தியர்களைப் பற்றிப் பாடிய பாட்டைக் கண்டு எழுதியது.

செந்தமிழ் வெள்ளம் ஓடும் கால்வாயில். தைத்தியர் - அசுரர்.

551. சன்பகக் குற்றாலக் கவிராயர் மேலகரத்தைச் சேர்ந்தவர். திருவாவடுதுறையில் 16-ஆம் பட்டத்து ஞானசிரியராக எழுந்தருளியிருந்த ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகரின் பூர்வாசிரம இளவல். ஐயரவர்களுடன் சேர்ந்து பாடம் கேட்டவர்.

சாது சேஷையர்

552. பிறர்துயரை அகற்றுதலிற் பின்னிடாப்
பெருந்தகையே பெருக ஆற்றும்
அறனுடையாய் எவரிடத்தும் அன்புடையாய்
அமைவுடையாய் அடுத்தோர்க் காக்கும்
திறலுடையாய் மிகச்சிறந்த தெளிவுடையாய்
தெளிந்தோரைத் தினமும் பேணும்
விறலுடையாய் புகழ்ச்சாது சேஷைய
எமைநீத்த விதந்தான் என்னே. (1)

(தரவு கொச்சகக்கலிப்பா)

553. சாது குலோத்தமனே சாதுஜன பாலகனே
தீதுபுரி வோர்தமையும் சீருக் குணநிதியே
பேதுறுவேம் என்னுய் பிரிந்தே அகன்றனையால்
யாதுபுரி வேம்துயரை யாரால் அகற்றுவமே. (2)

554. இணையேதும் இல்லா இறையே எளியோர்
துணையே அகதிகள்தம் துன்பக் கடற்கோர்
புணையே பகைவர் புரிதுன்ப வாரிக்
கணையே பிரிந்தெங் ககன்ருய் இடம்பாயால். (3)

555. நின்புடையே கற்ருேர்கள் நின்றுணைவர் நின்றுருக
நின்புதல்வர் சால நெகிழ்ந்து நெகிழ்ந்துருக
நின்பெருமை தேர்ந்தோர்கள் நெஞ்சுருக நீங்கினையால்
அன்புடைமை ஈதோ அளியுடைய அண்ணலே. (4)

---

552. இது முதல் எட்டுப் பாடல்கள், கும்பகோணம் கல்லூரியில் பேராசிரியராக இருந்த சாது சேஷையர் மறைவைக் குறித்த இரங்கற் பாக்கள். (15-10-1897.)

553. பேதுறுவேம் - மயங்குவோம்.

554. புணையே - தெப்பமே.

556\. நந்தாத பன்னூல் நயந்தார் பரிவகற்றும்
சிந்தா மணியே தெளிந்தோர் சிகாமணியே
சந்தாபம் தீர்த்தளிக்கும் தண்மொழியாய் நீமீண்டு
வந்தால் அலாதெம் மனத்துயரம் ஆறுதால். (5)

557\. பொறையும் நயமொழியும் பொய்யாமை யோடு
நிறையும் பிறர்க்குதவும் நீர்மையும் நேயமும்
முறையுமே எவ்விடத்துக் காண்பேம் மொழியுனைநீத்
திறையுந் தரியேம்யாம் என்றெதங் கேகினையே. (6)

558\. கருப்பா சயவினையைக் கல்வி எறியத்
திருப்பா திரிப்புலியூர்ச் செல்வன் தளியில்
உருப்பார வேலை உஞற்றுவித்தே அங்கண்
இருப்பா தரித்ததுதான் ஈதோ இயம்பாயால். (7)

559\. எல்லா ரிடத்தும் இயல்பாக அன்புடைய
நல்லான் அடுத்தோரை நாடோறும் மேம்படுத்த
வல்லான் துயர வலையை அறுத்திடும்இன்
சொல்லான் பிரிந்ததுயர் சொல்லான் அடங்குவதோ. (8)

காசிவாசி சொக்கலிங்கத் தம்பிரான்

(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

560\. பாமேவு தமிழ்மொழியோ டாரியமும் நன்காய்ந்து
பண்பு வாய்ந்து
மாமேவு விறற்குமர குருபரமா முனிமரபு
வயங்கச் செய்தே

556\. சந்தாபம் - மனக்கவலை.

558\. இவருடைய ஊர் திருப்பாதிரிப்புலியூர். கருப்பாசய வினை - பிறவி. தளி - கோயில். உருப் பார வேலை - வடிவம் பெரிதாக உள்ள தொண்டு.

560\. இது முதல் நான்கும் திருப்பனந்தாளில் உள்ள காசி மடத்தின் தலைவராக இருந்த காசிவாசி சொக்கலிங்கத் தம்பிரானவர்களுக்கு எழுதிய கடிதப் பாடல்கள்.

தேமேவு புகழக்காசி வாசியெனும் பெயர்க்கேற்ற
சீலம் மேவிக்
காமேவு பனசைவளர் சொக்கலிங்கக் குணக்கடலே
காண்க ஈதே. (1)

561. அன்பினொடு வரவிடுத்த கடிதம்வரப் பெற்றியல்பா
அடைந் திருக்கும்
இன்பினொடும் உயரின்பம் எய்தினமால் இருவேமும்
ஈசன் பத்தி
வன்பினொடு மேயவுனக் கெத்திருவுங் கைகூடும்
மாற்றார் எல்லாம்
துன்பினொடும் அகல்வரெனற் கையமுள தோவிணையில்
சுகுணக் குன்றே. (2)

562. கோபால கிருஷ்ணசெல் லப்பாவின் இசையையியம்
கூடக் கேட்டேன்
தாபாதி தணிந்துமிக வியப்புற்றேன் ஊக்கமொடு
சாரும் இன்னான்
சாபாதி களிற்புவிவந் துலவுறுகந் தருவனெனத்
தானி னைந்தேன்
நீபாதி கனைப்புனைவேள் இவன்றனைக்காத் தருள்கவென
நினைந்திட் டேனால். (3)

(கட்டளைக் கலித்துறை)

563. பரசணி செங்கை அகிலேசர்
சேவடிப் பத்தியென்றும்
விரசணி சொக்கலிங் கப்பேர்
விழுத்தவ மெய்யன்புடன்

---

561. இருவேமென்றது தம்மையும் தம் குமாரரையும். மாற்றார் - பகைவர்.

562. சாபாதிகளில் - சாபம் முதலிய காரணங்களால். நீப ஆதிகளை - கடம்பு முதலிய மாலைகளை. வேள் - முருகன்.

563. அகிலேசர் - காசி விசுவநாதர். இரசத சக்ரம் இருசதம் - இரு

இரசத சக்ரம் இருசதம்
ஈந்த தெழுதினனுல்
முரசதிர் முன்றில் உடையாய்என்
புத்திரன் மோதமொடே. (4)

சோமசுந்தர பாரதியார் பள்ளிக்கூடம்

(எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

564. மந்தரமா ளிகைஇளசை மன்னவர்செய் நன்றி
மறவாமை விளங்கஉசி லங்குளத்திற் சோம
சுந்தரபா ரதியென்னும் தோன்றல்தமிழ் மொழிநூற்
சுவையுணர்ந்து நவையறநல் லவைமகிழ உரைப்போன்
இந்தநெடும் புவிபுகழ எட்டப்பன் வித்யா
லயம்என்னும் பெயரமைத்தே இயற்றுகலா சாலை
சந்ததமுந் தழைத்தோங்க நெல்லைஅள வரத
தானநா யகர்தாட்செந் தாமரையைப் பணிவாம்.

சோமசுந்தரம் பிள்ளை

(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

565. கொடியணி மாடம் ஓங்கிக்
குலவுசீர் ஆனைக் காவில்
படியினில் உள்ளார் செய்த
பாக்கியம் அனையான் செங்கைத்

நூறு ரூபாய். மோதம் - களிப்பு.

564. மதுரை நாவலர் ச. சோமசுந்தரபாரதியார் உசிலங் குளத்தில் கட்டுவித்த எட்டப்பன் வித்தியாலயத்தைப் பாராட்டி எழுதியது. (9-5-1933.)

மந்தர மாளிகை - மந்தரமலைபோன்ற மாளிகையை உடைய. இளசை - எட்டையபுரம்.

565. திருவானைக்காவில் பொடிக்கடை வைத்திருந்த சோமசுந்தரம் பிள்ளை மீது தியாகராச செட்டியாரும் ஐயரவர்களும் சேர்ந்து பாடியது.

தொடியினர் மதனன் சோம
சுந்தரன் கடையிற் செய்த
பொடியினைப் போடா மூக்குப்
புண்ணியஞ் செய்யா மூக்கே.

சி. தியாகராச செட்டியார்

[மகாவித்துவான் ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களின் மாணவர். கும்பகோணம் கல்லூரியில் தமிழாசிரியராக இருந்தவர். தாம் ஓய்வுபெறும் போது அந்த வேலையை ஐயரவர்கள் பெறும்படி செய்தவர். இவருடைய வரலாற்றைத் தனியே, 'வித்துவான் தியாகராச செட்டியார்' என்ற பெயரோடு ஐயரவர்கள் எழுதியிருக்கிறார்கள்.]

(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

566. வாய்ந்தபுகழ் படைத்திலங்கும் மீனாட்சி சுந்தரநா
வலவன் பாலே
ஏய்ந்ததமிழ் ஆய்ந்தமுறைக் கியைவுறநீ இதுகாறும்
இனிதின் மேய
ஆய்ந்தவள நகர்க்குடந்தைக் காலேஜில் நின்னிடம்எற்
களித்தல் நன்றே
வேய்ந்ததமிழ் முதற்புலமைத் தியாகரா சப்பெயர்கொள்
மேன்மை யோனே. (1)

567. வருந்தியருந் தமிழ்நமக்கு யார்புகல்வார் என்றேங்கும்
மனத்தி னோர்கள்
திருந்தியசெந் தமிழ்ச்செல்வன் தியாகரா சப்புலவர்
திலகன் றன்பாற்
பொருந்திஅவன் விளங்கவெடுத் துரைத்திடுநல்
லுரைகளைத்தம் புந்திவைப்பின்
மருந்தியலைந் தியலுணர்வார் கவிபுகல்வார் பிரசங்கம்
வகுப்பார் மன்னோ. (2)

---

566. ஐயரவர்கள் புலமையைச் சோதிக்கக் கும்பகோணம் கல்லூரிப் பேராசிரியர்கள் கொடுத்த கருத்தை வைத்துப் பாடியது; என் சரித்திரம், 82-ஆம் அத்தியாயம் பார்க்க; பாடிய காலம் பிப்ரவரி, 1880.

567. செட்டியார் வேலையிலிருந்து ஓய்வு பெற்ற பிறகு அவருக்கு நடைபெற்ற பிரிவுபசார விருந்தில் பாடியது.

568. செம்மாந்து நிகரில்லை யெனச்செருக்கும் புன்புலமைச்
செருக்கி னோராம்
கைம்மாவின் மதமடக்குங் கவிச்சிங்கந் தனைத்தயையின்
கனிபோல் வானைத்
தெம்மாறு புகழ்த்தியாக ராசகுண கரன்றனையான்
சேரப் பெற்றேன்
அம்மாவென் பிறப்பேநற் பிறப்பாகும் எனக்குநிக
ராவர் யாரே. (3)

569. ஆனஞ்சும் மகிழ்ந்தாடும் அமலனடிக் கமலம்நினை
அகத்தி னன்கோல்
தேன்அஞ்சு மதுரகவி மொழிநிபுணன் யான்புல்லர்ச்
சேர்ந்தன் னுரை
வான்அஞ்சு கொடைத்தடக்கை வள்ளலெனத்
துதித்திளையா வண்ணம் செய்த
கோன்அஞ்சு குணத்தியாக ராசவள்ளல் மிகமகிழ்வு
கொண்டு காண்க. (4)

570. நயங்குலவு புலவர்சிகா மணியாகித் திருத்தில்லை
நடரா சன்தாட்
பயங்குலவு பத்திமையில் வாகீச மணியாகிப்
பயனே ஓராக்
கயங்குலவு புன்புலமை இருட்கொருவிண் மணியாகிக்
கவினுற் றோங்கும்
வயங்குலவு புகழ்த்தியாக ராசநா வலவன்இது
மகிழ்ந்து காண்க. (5)

---

568. கடிதப் பாடல்.

569. கடிதப்பாடல். ஆனஞ்சு - பஞ்சகவ்வியம். அம் சுகுணத் தியாக ராச வள்ளல்.

570. 1882-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் எழுதிய கடிதம். வாகீச மணி - அப்பர் சுவாமிகள். விண்மணி - சூரியன்,

571. நிறந்தயங்கு நீவிடுத்த கடிதம்இன் று வரப்பெற்று
நின்ற நாட்குச்
சிறந்தஉப காரச்சம் பளம்பெற்ற செய்தியையான்
தெரிந்தே நெஞ்சின்
விறந்தமகிழ் வெய்துபுநின் அன்புடையோர் பலர்க்குமிது
விளம்பல் செய்தேன்
உறந்தபுகழ்க் கோபால மகிபாலன் தனக்குமிஃ
துரைத்திட் டேனல். (6)

572. அக்காலத் துன்கடிதம் தனக்குமொன் று வந்ததென்
அறைந்தான் அன்னன்
திக்காலும் புகழ்த்துறைசை வளர்குருசுப் பிரமணிய
தேவன் என்னை
எக்காலும் புரந்தருள்வோன் தரிசனத்திற் கியான்சென்ற
ஏல்வை அன்னன்
மிக்காலும் புகழ்நினது சவுக்கியமும் நின்வரவும்
வினயி னனல். (7)

573. தன்னினிமை தனைச்சிறிதுந் தேராத
என்னனையர் தாமும் தன்பால்
மன்னினிமை தனைக்கண்டு மகிழ்ந்திடுமா
முதலிறுதி மாட்டே கோற்றேன்
துன்னினிமைக் கண்டுபெறு தலைப்பாவைக்
கொண்டுவகை துன்னி னேனல்
பன்னினிமைப் புகழ்மிகுந்த தியாகரா
சப்பெயர்கொள் பாவ லோனே. (8)

---

571. விறந்த, உறந்த - மிக்க. கோபால மகிபாலன் - கோபாலராவ்.

572. ஏல்வை - சமயம்.

573. 14 - 3 - 1882 அன்று செட்டியார் எழுதிய கடிதப்பாட்டாகிய, "கோற்றேனும் திங்கனியும் கூறும் இதனினிமைக், காற்றேமென் றஞ்சி அகலவே - சாற்றுகவி, நாவலன்சீர் சேர்சாமி நாதமறை யோன்புலவர், காவலனு வக்கவிது கண்டு" என்ற பாட்டைக் கண்டு எழுதியது இப் பாடல்.

முதலில் கோற்றேன் என்றும் இறுதியில் கண்டு என்றும் உள்ள வார்த்தைகளைப் பெற்ற வெண்பா. தலைப்பா - வெண்பா.

574. வலமலியும் குடந்தையிற்பொற் றுமறைவா
வியின்மாட்டு மாண்புள் ளோர்கள்
பலர்மலியும் அவையிடைவண் கோபால
ராயவள்ளற் பாடி யான்சொல்
அலமலியுந் தமிழ்ப்பாட லொருபதும்பார்த்
துத்திருத்தி அனுப்பு வாயால்
சொலமலியும் புகழ்த்தியாக ராசவரோ
தயச்செல்வ தூய்மை யோனே. (9)

575. குலம்பூத்த குழக்கன்றை இழந்தலமந்
தலறுமிந்தக் கோவின் யானும்
அலம்பூத்த துயருறுவ தலதியற்ற
லென்னேயென் றமைச்சர்க் கோதி
நலம்பூத்த தனதுகுலக் கொழுந்தின்மிசைச்
சயந்தனத்தை நடத்தி நல்லோர்
புலம்பூத்த முறைநிறுவும் மனுவேந்தன்
புரந்தருளும் பொன்னி நாட்டில். (10)

576. இனமார்ந்த பசுநிரையை வசமாக்க
வேய்ங்குழலை இசைத்தே பால்முன்
முனமார்ந்த வனமாலை அணிமாயன்
தினம்நாணின் முழுகி ஏங்கக்

---

574. கும்பகோணம் கல்லூரியிலிருந்து சென்னைக் கல்லூரிக்குத் தலைவர் கோபாலராவ் மாற்றலாகிப் போகும்போது (1862 - செப்டம்பர்) அவருக்கு ஒரு வாழ்த்து வழங்கினார்கள். அதற்காக ஐயரவர்கள் தாம் எழுதிய பாடல்களைத் தியாகராச செட்டியாருக்கு அனுப்பித் திருத்தியனுப்பும்படி எழுதினார்கள்; (508—517, பார்க்க.) அந்தக் கடிதத்தின் தலைப்பில் எழுதிய பாடல் இது.

575. இதுமுதல் 14 பாடல்கள் செட்டியார் பதிப்பித்த பூவாளூர்ப் புராணத்துக்கு அளித்த சிறப்புப்பாயிரம். (1885, பிப்ரவரி.)

சயந்தனம் - தேர். மனுவேந்தன் - மனுச்சோழன். பொன்னி நாட்டில் - சோழ நாட்டில்.

கனமார்ந்த ஐம்பதமும் வேய்ங்குழலின்
அமைத்திசைத்துக் கசியும் அன்பர்
மனமார்ந்த பசுபதியை வசமாக்கி
னோர்வருமங் கலத்தின் கீழ்சார். (11)

577. வீற்றிருக்கும் மேன்மையது தவததுறையா
தியதலங்கள் மேவப் பாங்கர்
ஏற்றிருக்கும் தகையதெழு பதுமுனிவர்
சிவப்பேறெய் தியது திங்கட்
கீற்றிருக்கும் சடையினன்கூங் குமதனசுந்
தரிபாகன் கிளரும் அன்பர்
போற்றிருக்கும் அஞ்செவியன் வீற்றிருக்கும்
பெருமையது பூவா ளூரால். (12)

578. மணமலிபைந் துணர்பொதுளும் பொழில்சுலவப்
பூவாளூர் மான்மி யத்தைக்
கணமலிபல் அணிநிரம்பும் நிதிஒன்று
பெற்றனமால் கவின என்றே
உணமலிவான் அமுதனைய கவிவலவர்
இறுமாப்ப உரைக்குந் தோறும்
குணமலியின் சுவைகுதிகொள் செந்தமிழில்
மொழிபெயர்த்துக் கொடுத்திட் டானால். (13)

579. அனையபெருந் திறற்புலவர் பெருமான்யார்
எனில்தன்பால் அடைந்தோர்க் கெல்லாம்
இனையல்புரி பசுத்தன்மை அகற்றுபபே
ரின்பநலம் இயைக்கும் ஆற்றைத்

---

576. வனமாலை - துளவம். ஐம்பதம் - பஞ்சாட்சரம். வசமாக்கி னோர் - ஆளுடைய நாயனார். மங்கலம் - திருமங்கலம்.

577. தவத்துறை - லாலுகுடி. போற்று - துதிகள்.

578. துணர் - பூங்கொத்து. சுலவு அப் பூவாளூர்.

579. இனையல்புரி - வருத்தத்தைச் செய்கின்ற. அகற்றுபு - நீக்கி.

தனையனைய இமயமட மயில்தனக்குப்
பசுத்தன்மை தணப்பித் தின்பம்
துனையஇயை தரப்புரிந்து விளங்குதிரு
வாவடுதண் துறைஆ தூரில். (14)

580. பரிசுபெற உட்புகுவோர் பரிசுபெற்று
வெளிவருவோர்ப் பார்த்து நீவிர்
அரசர்எந்த நாட்டினுக்கென் றிடச்சிலர்இன்
றிங்கரசர் ஆனேம் ஈங்கு
விரசுமுன மேஅரசர் இவர்முன்னம்
யாமும்மிடி வேந்தர் என்றே
இரசமுற எதிர்விடுக்கும் விதம்பெரிய
கொடைச்செல்வம் இயைந்த தாகி. (15)

581. ஆங்கொருசார் சிலர்இருந்து மாணுக்கர்க்
கியற்றமிழை அன்பின் ஓத
ஆங்கொருசார் சிலர்இருந்து வடமொழிநூல்
திறவாதம் ஆற்றி மேவ
ஆங்கொருசார் சிலர்இருந்து சிவபுரா
ணக்கதைகள் அமிழ்திற் சொல்ல
ஆங்கொருசார் சிலர்இருந்து முப்பொருளின்
இயல்தேர அமைந்த தாகி. (16)

திருவாவடுதுறையில் பசுவாக இருந்த இறைவியின் அவ்வுருவை மாற்றி இறைவன் அணைந்தான்.

580. இதுமுதல் மூன்று பாடல்கள் திருவாவடுதுறை ஆதீனச்சிறப்பைக் கூறுவன.

வேந்தரும், முன்பு ஏழையராகி இப்போது பரிசுபெற்று வேந்தர் போன்ற கோலம் பெற்று வருபவரும் வேற்றுமையின்றி வர, அவர்களைப் பார்த்துக் கேட்டவர்க்குப் புதிய செல்வர் விடை சொல்கிறார். விரசுமுனமே - வருவதற்கு முன்பே. மிடி - வறுமை. இரசம் - சுவை. எதிர் விடுக்கும் - விடைகூறும்.

581. வடமொழிநூல் திறவாதம் - வடமொழி வாக்கியார்த்தம். முப்பொருள் - பதி பசு பாசம்.

582. தண்ணியஆ ரியமொழியும் தமிழ்மொழியும்
யாம்புரிமா தவப்பே றென்றே
கண்ணிஅகம் களிதுளும்பும் கவினுடைத்தாய்
அருட்சைவா கமத்தை ஆராய்ந்
தெண்ணியள வளவுபுதாம் இருத்தலன்றி
ஒருவீடும் இச்சி யாத
மண்ணியமா மணியனைய முனிவரர்கட்
கிடமாய மடால யத்தில். (17)

583. வதிந்தருள்பஞ் சாக்கரதே சிகன்கருணைக்
கடல்முழுகி வடசொல் லோடு
முதிர்ந்தசுவைத் தென்சொல்லும் ஆயகடல்
கடைந்தறிவின் முதிர்ந்த சாரம்
பொதிந்தமைதி ராவிடபா டியஅமிழ்தம்
அளித்தன்பு பொருந்தே னுள்ளும்
பதிந்திலகு சிவஞான யோகியெனும்
பாற்கடலிற் பருகு கொண்மூ. (18)

584. அன்னசிவ ஞானயோ கிகளும்மகிழ்ந்
ததிசயிப்ப அணிமுன் யாவும்
மன்னஅமை பலகவிகள் ஒருநொடியில்
எளிதுரைக்கும் வாகை மேயோன்
முன்னவமை முப்பொருளின் இயல்பையடுத்
தவர்க்கமுகா மொழிதல் வல்லோன்
பன்னவமை கச்சியப்ப முனிவர்பெரு
மான்என்னும் படிமை யோனே. (19)

---

582. அளவளவுபு - அளவளாவி. முனிவரர்கள் - தம்பிரான்கள்.

583. பஞ்சாக்கர தேசிகன் - நமசிவாய தேசிகர். திராவிட பாடிய அமிழ்தம் - சிவஞான போதத்தின் மகாபாஷ்யமாகிய அமுதம். கொண்மூ - மேகம்.

584. படிமையோன் - தவவிரத முடையவன். கொடுத்திட்டாரும் (578); அனைய பெருந்திறற் புலவர் பெருமான் யார் எனில் (579), கச்சியப்ப முனிவர்பெருமான் என்னும் படிமையோனே (584) என்று தொடர்புபடுத்திப் பொருள் கொள்க.

585. அந்தநகர் மான்மியத்தை அழகியஅச்
சினிலமைவித் தளிப்பாய் என்று
சுந்தரவத் தலத்தமலன் அடிக்கன்பு
பூண்டொழுகு தொண்டர் வேண்ட
நந்தமது புண்ணியந்தான் இருந்தபடி
இதுவெனவுள் நனியு வந்து
சிந்தலிலா தாய்ந்துகர லிகிதவழுக்
களைந்தச்சிற் சேர்த்தீந் தானல். (20)

586. நலம்படைத்த சிதம்பரவேள் இதம்பெறநபன்
னுள்இயற்றும் நற்றவத்தால்
குலம்படைத்த பேறெனவே வந்துதித்த
குணக்குன்றம் கோதி லாத
புலம்படைத்த பெருமையன்புண் ணியபுருடன்
இயற்றமிழம் புதியில் தோய்ந்தே
பலம்படைத்த பொருள்நயமாம் பலமணிகொண்
டுவந்துறையும் பான்மை மிக்கோன். (21)

587. புவியரசர் புகழ்பெருமை மீனுட்சி
சுந்தரப்பேர் பூண்ட நான்மைக்
கவியரசி னிடைக்கற்ற கடிமலர்க்கற்
பகம்எனது காம தேனு
சவியமையக் கல்லாப்புன் புலமைவனத்
தினைத்தானே தடிந்து மேவும்
நவியம்அடுத் தவர்களைத்தன் போலாக்கும்
தன்மைமரீஇ நகுமா மேரு. (22)

---

585. கரலிகித வழு - கையெழுத்துப் பிரதியிலுள்ள குற்றங்கள்.

586. புலம் - அறிவு. அம்புதி - கடல்.

587. சவி - ஒளி. நவியம் - கோடரி. நகும் - விளங்கும்.

588. நத்தன்அயன் ஆதியர்கள் பணிந்தேத்தும்
பூவாளூர் நடரா சற்கு
நித்தியமா திகளென்றும் தணவாது
நடப்பவினை நிலங்கள் மேன்மை
பொத்தியபுண் ணியவழிதான் ஈட்டுபொருள்
கொடுவாங்கிப் பொருத்தும் நல்லோன்
சத்தியநா வினன்இனிமைத் தியாகரா
சப்பெயர்கொள் தமிழ்வல் லோனே. (23)

(வெண்பா)

589. சருவசித்தில் தையேழில் சத்தமியோ டுற்ற
குருவாரந் தோணிநாள் கோடாத்—திருவத்
திடராசன் கல்வித் தியாகரா சன்சீர்
நடராசன் தாளடைந்த நாள். (24)

(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

590. வானாட்சி யுறுஞ்சீர்த்தி மலிந்தகவி வலவர்சிகா
மணியாய் ஓங்கும்
மீனாட்சி சுந்தரவா ரியன்வியக்கக் கவிபாடும்
விறலோய் என்றும்
தேனாட்சி உறுமொழியாம் தியாகரா சப்பெயர்கொள்
செல்வா துன்பம்
யானாட்சி உறத்தணந்த தென்னேயோ என்னேயோ
இயம்பி டாயே. (25)

---

588. நத்தன் - சங்கபாணியாகிய திருமால். அயன் - பிரமன். தணவாது - நீங்காமல்.

589. இதுமுதல் எட்டுப் பாடல்கள், செட்டியார் இறைவன் திருவடியை அடைந்ததை அறிந்து பாடிய இரங்கற் பாக்கள். இவர் மறைந்த தேதி, 19-1-1888.

தோணி நாள் - ரேவதி நட்சத்திரம். கோடாத் திருவத் திடராசன் - பட்சபாதமற்ற நடுநிலைமைச் செல்வத்தையும் மன்வுறுதியையுமுடைய அரசனைப் போன்றவன்.

590. ஆரியன் - ஆசிரியன். யான் துன்பம் ஆட்சி உற. தணந்தது - பிரிந்தது.

591. மடியென்றும் தவிர்திமதி யினைவளர்க்கும்
நூல்கள்பல மகிழ்ந்தே மெல்லப்
படியென்றும் சுவையொழுகப் பாடென்றும்
எனக்கன்பிற் பகர்வோர் யாரே
மிடியென்றும் எனையகலச் செயுந்தியாக
ராசனெனும் மேன்மை யோனே
துடியென்றும் உறுகரத்தான் அடியென்றும்
மறவாத தூய்மை யோனே. (26)

592. அந்நாளில் மீனாட்சி சுந்தரவா ரியன்அகன்றான்
ஐய கோமற்
பின்னாளில் துறைசையிற்சுப் பிரமணிய குருமணியும்
பிரிந்தான் அந்தோ
இந்நாள்நீ யும்பிரிந்தாய் யானிருந்தேன் என்னபயன்
எய்த வோவென்
மன்னுவோ சிரகிரியில் தியாகரா சப்பெயர்நா
வலவர் ஏறே. (27)

593. வற்றாத வளத்துறைசை வருகுருசுப் பிரமணிய
வள்ளல் தன்னை
உற்றார்வ மொடுதொடர்ந்து சென்றனைமற் றவர்பிரிந்த
உறுகண் நீக்கிப்
பற்றாத எனைப்புரப்பார் எவரெவர்க்கென் மனத்துன்பைப்
பகர்வேன் என்பால்
கற்றாவிற் கசியுளத்துத் தியாகரா சப்பெயர்கொள்
கவிவல் லோனே. (28)

---

591. மடி - சோம்பல். தவிர்தி - நீங்குவாயாக. மிடி - வறுமை. துடி - உடுக்கை. கரத்தான் - சிவபெருமான்.

592. மீனாட்சி சுந்தர ஆரியன் - மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை. சிரகிரி - திருச்சிராப்பள்ளி.

593. உறுகண் - துன்பம். கற்றாவின் - கன்றையுடைய பசுவைப் போல.

594. புகழ்பூத்த அறிவுடையோர் நாவாயில்
எஞ்ஞான்றும் பொருந்தி வாழ்வாய்
திகழ்பூத்த தியாகரா சப்பெயரோய்
சிவபத்திச் செல்வம் வாய்ந்தோய்
அகழ்பூத்த சிரபுரத்தாய் இஞ்ஞான்று
நாவாயில் அகன்ற வாற்றல்
இகழ்பூத்த பெரும்பிறவிக் கருங்கடலைக்
கடந்தாயென் றெண்ணி னேனால். (29)

595. தாம்படைத்த பொருளினைச்சே மித்துமகிழ்ந்
திடுவாரித் தரணி யோர்கள்
ஓம்படைத்த பொருளாய அருளாளன்
பூசைவிழா உஞற்ற லாதித்
தேம்படைத்த அறம்விளங்கச் செயல்படைத்த
பொருளுடைநிற் சிவணு வோர்யார்
தோம்படைத்த வழிமாற்றும் தியாகரா
சப்பெயர்கொள் சுகுணக் குன்றே. (30)

596. பார்த்தமுகம் யாவையுமே வேற்றுமுக
மாய்த்தோன்றும் பார்வைக் கிந்நாள்
பேர்த்ததுய ருடையேனு னைச்செய்து
மகிழ்ந்திடுநீ பிரிந்த வாற்றால்
சீர்த்ததிரி சிரபுரத்துத் தியாகரா
சப்பெயர்கொள் செல்வா என்றும்
கார்த்தகளத் தமலனடிக் கமலமலர்
பொருந்திதய கமலத் தோனே. (31)

---

594. நாவாயில் - நாவில், ரேவதி நட்சத்திரத்தில்; தோணியில் என்பது தொனிப் பொருள்.

595. ஓம் படைத்த பொருள் - பிரணவத்தின் பொருள். தேம் படைத்த - இடம் உள்ள. சிவணுவோர் - ஒப்போர். தோம் - குற்றம்.

596. நீ பிரிந்த ஆற்றால் இந்நாள் பார்வைக்குத் தோன்றும் என்க. கார்த்த களத்து அமலன் - கறுத்த திருக்கழுத்தையுடைய சிவபெருமான்.

திருவாரூர்ப் பள்ளித் தமிழ் மாணவர் சங்கம்

(கட்டளைக் கலித்துறை)

597. இமிழ்வாரி சூழ்புவி ஏத்தும்
கமலை யிடமருவி
அமிழ்தாம் இசைத்துணை வாய்ந்தாங்கி
லேய அறிவமைந்த
தமிழ்மா ணவர்சங்கம் நீடூழி
காலம் தழைகவென்றே
குமிழ்நாசி பாகத் தியாகேசர்
தாளையுட் கொள்ளுதுமே.

நாராயண சாமிக் குரிசில்

(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

598. வாய்ந்தபல அறிஞர்குழாம் சீர்மேற்கொண்
டெந்நாளும் மதிக்கும் கேண்மை
வேய்ந்ததிருக் குறள்நூலிற் பெருக்கத்துப்
பணியொன்றே வேண்டு மென்று
தோய்ந்தஇலக் கணமதனுக் கிலக்கியம்நின்
பாற்கண்டேம் துகள்தீர் பன்னூல்
ஆய்ந்தநா ரணசாமிக் குரிசிலெனும்
காரணப்பேர் அமைமே லோனே. (1)

599. பெருந்துறையில் இருந்தருள்சுப் பிரமணிய
குருபரனென் பெம்மான் மேலாம்
மருந்துறழ்நின் வரவிணைப்பல் திருமுகத்தால்
பற்பலகால் வருத்தும் ஐயம்

---

597. திருவாரூர்ப் போர்டு உயர்நிலைப்பள்ளித் தமிழ் மாணவர் சங்கத்தில் தலைமை தாங்கியபோது பாடியது.

இமிழ் - ஒலிக்கும். கமலை - திருவாரூர். குமிழ்நாசி - குமிழ் போன்ற நாசியையுடைய அம்பிகை.

598. இந்தச் செல்வர் இன்னாரென்று தெரியவில்லை.

599. என் - என்று கூறும். மருந்து உறழ் - அமுதத்தையொத்த.

பொருந்திணேன் தனையின்றுன் றெருமுகத்தால்
தெளிவிக்கப் போந்தெங் கட்கு
விருந்தினனு வருமகிழ்விற் கெட்பொருளை
உவமையென விரிப்பேன் மன்னே. (2)

கவிராச நெல்லையப்ப பிள்ளை

(வெண்பா)

600. சங்கத் தமிழைத் தளர்வின்றி யான்பெறவே
அங்கங் குடன்வந் தளித்திட்டோன்—பொங்குபுகழ்
இன்போடும் ஈசனடி எண்ணுநெல்லை யப்பனைப்போல்
அன்போ டுதவிசெய்வார் ஆர். (1)

(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

601. பிறப்பின்னு தென்றுணர்க அடைந்தாரைப்
பிரியினெனப் பேசும் யாவும்
சிறப்புறகா ணுதல்ஒழிக எனும்கவியும்
நுதல்பொருளைத் தெரிந்து தேர்ந்து
விறப்புறுதுன் படைகின்றும் நெல்லைநெல்லை
யப்பகவி வேந்தன் எம்மை
மறப்புடைய னுகியிக வாழ்வொழிந்து
பரகதியை மருவ லாலே. (2)

602. சீர்பூத்த துறைசையிலம் பலவாண
தேசிகன்முன் தேர்ந்து நல்கும்
பேர்பூத்த தமிழ்க்கடல்அம் பலவாண
அண்ணல்குலம் பிறங்க நெல்லை

---

600. இவர் ஐயரவர்களுக்கு ஏடுகள் பலவற்றைத் தேடிக் கொடுத்த உபகாரி.

601. அடைந்தாரைப் பிரியின் பிறப்பு இன்னுது என்றுணர்க. "காணுதல் ஒழிக" என்று வருவது பிரபுலிங்கலீலைப் பாட்டு. விறப்பு - மிகுதி.

602. துறைசையில் அம்பலவாண தேசிகன் - திருவாவடுதுறை ஆதீனத்தில் 17-ஆம் பட்டத்தில் ஞானசிரியராக எழுந்தருளியிருந்த ஸ்ரீல ஸ்ரீ அம்பலவாண தேசிகர். நல்கும் - அன்பு வழங்கும்.

ஊர்பூத்த மணியாகிச் சைவசிகா
மணியாகி உற்ற செல்வன்
ஏர்பூத்த நெல்லையப்ப வள்ளல்பிரிந்
திடுதுயரம் இயம்பற் பாற்றே. (3)

603. ஒருகாலன் தனையுதைத்த ஒருகாலன்
அனைத்துயிரும் உய்ய எண்ணிப்
பருகாலன் அடிப்பூசை பண்ணியிருந்
தமிழ்நூலின் பயனோர்ந் துள்ளம்
உருகாலன் புறுநெல்லை யப்பனைஇக்
கொடுங்காலம் ஒழித்த லாலே
வருகாலம் என்செயுமோ எனவெண்ணி
எனதுள்ளம் மயங்கு மாலோ. (4)

604. துன்றுசுவைத் தமிழ்நூல்கள் பலவுதவிப்
பிறரில்லந் தோறுஞ் சென்று
சென்றுமிக முயன்றுடையார்க் கின்மொழிகள்
பலபுகன்று தேடித் தந்தோய்
ஒன்றுமனக் குணநிதியே நெல்லையப்ப
வேளேநின் உதவி தன்னை
என்றுமற வேனின்றன் மரபுதழைந்
திடஅரன்றாள் ஏத்து வேனே. (5)

605. எனைப்பிரிந்த தன்றிநினைச் சூழவிருந்
துறுபுலவர் இனத்தை என்றும்
நினைப்பிரியா திலகீசு வரமூர்த்தித்
துணைவனைநீ நிதம்பூ சிக்கும்
சினைப்பிரியா வில்வமதைச் சிவபூசை
மடத்தைநயந் தெரியும் நெல்லை
தனைப்பிரிந்த தெவ்வண்ணம் நெல்லையப்ப
மகிபாலா சாற்று வாயே. (6)

---

603. காலன் - யமன். ஒரு காலன் - ஒரு காலையுடையவன். பருகு ஆலன் - ஆலத்தைப் பருகியவன். உருகு ஆல் அன்பு - உருகும் அன்பு, பரவும் அன்பு.

605. சினைப் பிரியா - கிளையினின்றும் பிரியாத.

பட்டாபி ராம பிள்ளை

(கட்டளைக் கலித்துறை)

606. கார்நோக்கி நிற்கும் மயில்போல
நீங்கிய காதலன் றன்
தேர்நோக்கி நிற்கும் மடந்தையர்
போலத் திகைப்ப றவிப்
பார்நோக்கி நிற்கும்நற் பட்டாபி
ராம பராக்கிரம
நேர்நோக்கி நின் றனம் யாங்களெல்
லாம்நின் நிகழ்வரவே. (1)

(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

607. சீர்பூத்த புலவரெலாம் போற்றமகிழ்ந்
துறைதலினாற் சிறந்த விண்ணாட்
டேர்பூத்த புலவரெலாம் போற்றமகிழ்ந்
துறையரசை ஏய்ந்தும் காரிற்
கார்பூத்த வவன்நாணக் காமாதி
பலகரிசும் களைந்தே இந்தப்
பார்பூத்த தவநிகர்நற் பட்டாபி
ராம்பரி பால கேண்மோ. (2)

---

606. ராவ்பகதூர் பட்டாபிராம பிள்ளை மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களுக்கு மிகவும் பழக்கமானவர். திருச்சிராப்பள்ளியில் டெபுடி கலெக்டராக இருந்தவர். அவர் 1877—ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் திருவாவடுதுறைக்கு வந்த போது பாடியது இது. நின் வரவை நோக்கி நின்றனம் என்க.

607. புலவர் - புலமையுடையோர், தேவர். அரசை - இந்திரனை. ஏய்ந்தும் - ஒப்பாக இருந்தும். காரில் - மேகத்தில் வருகிற. கார்பூத்த அவன் - கரியநிறம் பெற்ற இந்திரன். கரிசு - குற்றம்.

பாண்டித் துரைத் தேவர்

[மதுரைத் தமிழ்ச் சங்கத்தை நிறுவியவர், பாலவனத்தம் ஜமீன்தார்.

(வெண்பா)

608. தமிழ்செய் தவமாய்த் தயாநிதியாய்ச் சீர்த்தி
இமிழ்செய் முகவை இலங்கும்—அமிழ்தனைய
சொல்லுடையான் பாண்டித் துரைமகிபன் மேருநிகர்
இல்லுடையான் வாழ்க இனிது. (1)

609. ஆய்ந்தே தமிழ்நூல் அருந்துணையி லாதுமிக
ஓய்ந்தே உழலும் ஒருநெஞ்சே—வாய்ந்த
தரையை அடைந்திடுசிந் தாமணியாம் பாண்டித்
துரையைஅடைந் துன்வருத்தம் சொல். (2)

610. அருமை பெருமை அறிவாரில் லென்று
தெருமரலுற் றேங்குநெஞ்சே தேவர்—தருவனைய
பாண்டித் துரைவள்ளல் பாற்சென்றின் புற்றெல்லாம்
வேண்டிப்பெற் றுன்கலியை வெல். (3)

(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

611. அந்நாளில் அமிழ்தனைய தமிழ்புரந்த
வாசனையின் அளவால் பாண்டிச்
செந்நாட்டில் இந்நாள்வந் ததுபுரக்கும்
உக்கிரபாண் டியனைக் கற்றோர்
மன்னுன உயர்பாண்டித் துரையையெம்ம
னோர்க்கெய்ப்பில் வைப்பா னானை
ஒன்னுதார்க் கரியேற்றை அடைந்தனையான்
அன்படைந்தேற் றொப்பார் மன்னோ. (4)

---

608. இதுமுதல் நான்கு பாடல்கள் பாடிய தேதி: 1-12-1894. முகவை - இராமநாதபுரம்.

609. தமிழ்நூல் ஆய்ந்து ஓய்ந்து.

610. அறிவார் இல் என்று; இல் - இல்லை. தெருமரல் - சுழலுதல், தரு - கற்பகம். கலி - வறுமை.

611. ஒன்னுதார்க்கு - பகைவர்களுக்கு. அடைந்து அனையான். ஒப்பு ஆர் ?

612. வன்பாண்ட மலந்துமித்து மன்னுயிரைப்
புரந்தருளும் வண்ணம் மேவித்
தென்பாண்டி நாடாளும் சிவக்கொழுந்தைத்
தினந்தோறும் சிந்தித் தேத்தும்
அன்பாண்ட தவக்கொழுந்தை அருந்தமிழின்
இருந்தவத்தை அறத்தின் வைப்பை
என்பாண்டித் துரையையிரு கண்மணியை
இன்னுயிரை இனிது காண்க. (5)

(வெண்பா)

613. அனுதரவென் னும்பிரம அத்திரத்தால் மாய்ந்து
தனுதுருவம் தேய்ந்து தனித்தே—வினுவற்ற
வாய்ந்த சுவையார் மணிமே கலைக்குமருந்
தீந்தியலச் செய்தாய் இனிது. (6)

(கட்டளைக் கலித்துறை)

614. சீரார் விழுப்புகழ்ச் சீத்தலைச்
சாத்தன்முன் செப்பியருள்
நேரார் மணிமே கலைநுட்பம்
எங்ஙன் நிகழ்த்துவனல்
பாரார் மதித்திட அந்நூல்
வெளிவரப் பண்ணியநின்
பேராங் கதனெடும் பல்லாண்
டெனவின்று பேசுவனே. (7)

---

612. இதுமுதல் மூன்றும் 23-1-1897 அன்று எழுதிய கடிதப் பாடல்கள். வன்பு ஆண்டு; வன்பு - வன்மை.

613. பாண்டித்துரைத் தேவர் மணிமேகலை அச்சிடப் பொருளுதவி செய்ததைக் குறித்தது. வினு அற்ற - கேள்வியில்லாமற் கிடந்த. மருந்து - பரிகாரம்; இங்கே பொருள்.

(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

615. மாமேவு புலவர்பலர் அரசர்பலர்
தொகூஉப்புரந்து வளர்த்த தாய
தூமேவு செந்தமிழை ஒருதனியே
புரந்துவரு தோன்றல் ஆன்ற
பாமேவு கவிவாணர் பாக்கியம்மெய்
அன்புடையார் படைத்த செல்வம்
நாமேவு புகழ்ப்பாண்டித் துரைவள்ளல்
அவைக்களத்தை நணுக வீதே. (8)

616. மாமேவு பிறைச்சடையும் கறைக்களமும்
திருவுருவ வனப்பும் என்றும்
தூமேவு தனதுயர்வு புலப்படுத்த
விளங்குபரஞ் சோதி கஞ்சப்
பூமேவும் அயன்முதலோர்க் கரியனடி
யவர்க்கெளியன் புகன்ற வாய
தூமேவும் எழுநாலா கமங்கள்நவில்
பொருளெவர்க்கும் துலக்க ஓர்ந்தே. (9)

617. வீறியபே ரறிஞர்நம தருந்தமிழில்
விளம்பியருள் விழுப்பம் மிக்க
ஊறியவான் சுவையுடைப்பல் பனுவல்களும்
ஆராய்ந்தாய்ந் துறுதி வாய்ப்பக்
கூறியவா கமசார மாகமிளிர்
பவையாவும் குலவச் சேர்த்துப்
பேறியலும் அவற்றைமுறை பிறழாமல்
இனிமைமிகப் பிறங்க ஏய்த்தே. (10)

---

615. 8-7-1897 எழுதிய கடிதத்தின் முதலில் எழுதிய பாடல். தொகூஉ - கூடி.

616. இதுமுதல் எட்டுப் பாடல்கள், பாண்டித்துரைத் தேவர் பதிப்பித்த சைவமஞ்சரி என்னும் நூலின் சிறப்புப் பாயிரம். கறைக்களம் - நீலகண்டம். கஞ்சப்பூ - தாமரை மலர்.

617. ஏய்த்து - இணைத்து.

618. சற்றேனும் துயரின்றிச் சைவநூல்
பலவெளிது சார இன்று
பெற்றேமென் றுரைப்பாரும் பிழைத்தேமென்
றுரைப்பாரும் பிறங்கு பன்னூல்
கற்றேமென் றுரைப்பாரும் கரையிலாப்
பவக்கடலைக் கடந்தேம் பந்தம்
அற்றேமென் றுரைப்பாரும் அறிந்தேமென்
றுரைப்பாரும் ஆகப் பல்லோர். (11)

619. நலம்பிறங்கும் இயற்சைவ மஞ்சரியென்
றொருபெருநூல் நல்கி னுலை
புலம்பிறங்கும் அனையபெருந் தகையாவன்
என்பீரேற் புகல்வேன் இந்தத்
தலம்பிறங்கு தவமெனவும் தமிழ்ப்புவிசெய்
தவமெனவும் தயங்கு மேன்மைக்
குலம்பிறங்கு தவமெனவும் குணம்பிறங்கு
தவமெனவும் குலவு மேலோன். (12)

620. சிவஞான முறுபெருமைச் சிவஞான
தேவர்பவுத் திரனாய் வந்தோன்
தவஞான முடைப்பொன்னுச் சாமிநரேந்
திரன்புரிமா தவப்பே றுனோன்
அவஞானம் அறமாற்றுஞ் சிவஞான
போதமுத லாய நூல்கள்
பவஞானம் அறவோதிப் பயின்றுதுணிந்
தவ்வழியே பயிலும் நல்லோன். (13)

621. வள்ளலெனும் முகவையிற்பாற் கரசேது
பதிக்கினிமை வாய்ந்த அன்பன்
நள்ளலுறும் ஒருகாவித் துவசத்தான்
அகத்துறவின் நல்லோர் தம்மை

---

619. புலம் - அறிவு. தலம் - உலகம்.
621. முகவை - இராமநாதபுரம். காவித் துவசத்தான் - காவிக்

எள்ளலறப் புரந்திடுவோன் எழில்முல்லை
மாலிகையான் இலங்கு மாவின்
உள்ள லுறும் உயிர்புரப்போன் உயர்செம்பி
நாடுடையான் உறுநர்க் காப்போன். (14)

622. விளங்குவளப் புதுவையினன் புதுமைபல
மிகவிளைத்து வியப்பச் செய்வோன்
உளங்குலவும் இனியகவி பொழிமதுர
வாக்கிபொறை ஒருவா அண்ணல்
வளங்குலவும் அறிஞர்விரம் பவையஞ்சாப்
பிரசங்க வன்மை வாய்ந்தோன்
களங்குதவிர் புலவர்பல ரிடைமேவித்
தினங்காலம் கழித்து வாழ்வோன். (15)

623. தென்மதுரை நகரின்முன்போல் தமிழ்ச்சங்கத்
தாபனஞ்செய் திரன் யாரும்
தன்மதுரை நந்தமது சாமியென
அன்பொடுரை சாற்றச் செய்த
மன்மதன்பன் னூல்களையாய்ந் தினிதுபதிப்
பித்துவெளி வருமா செய்து
சென்மதனை அழித்துமகிழ் தருபாண்டித்
துரையெனும்பேர்ச் சீரி யோனே. (16)

624. பூமேவு செந்தமிழைப் புரத்தலினுற்
சிவபத்திப் பொலிவால் என்றும்
தாமேவு பரிசிலர்கள் கழறியதை
அறிதலினுல் தமிழ்வல் லோர்கள்

கொடியை உடையவன். மாவின் - திருமாலைப்போல. செம்பி நாடு - சேது நாடு.

622. புதுவை - பாலவனத்தம். களங்கு - குற்றம்.

623. தன்ம துரை - தரும துரை. செல் மதனை - கறையான்து வலிமையை.

தேமேவும் உக்கிரபாண் டியனென்னச்
சிவபாத சேக ரப்பேர்த்
தூயேவு வளவனெனச் சேரனென
மிளிர்பாண்டித் துரைசீர் வாழ்க. (17)

பார்த்தசாரதி ஐயங்கார்

(ஆசிரியப்பா)

625. அருளுருக் கொண்ட ஔவைமூ தாட்டி
சான்றோர் உடைத்தெனச் சாற்றிய பெருஞ்சீர்
பண்டைநா ளேபெறு தொண்டைநா டதனில்
செப்பரும் பெருமைகள் பற்பல வாய்ந்து
தன்னையே நிகரும் சென்னைமா நகரில்
திருமா தொடுகலை தருமா தென்றும்
புல்லித் திகழ்திரு வல்லிக் கேணியில்
தந்தைதாய்ப் பேணலும் தவன்வழி யொழுகலும்
துறந்தார்ப் போற்றலும் சிறந்தார் விருந்தினர்ப்
புரத்தலும் வறியவர்ப் புரத்தலும் சுற்றம்
காத்தலும் ஒழுக்கம் காத்தலும் முன்னோர்
சரித்திரம் தெரிதலும் சாற்றுபல் மாண்பும்
எம்மனோர் எளிதறிந் தியலுறும் வண்ணம்
இந்து பாலிகா பாடசா லைப்பெயர்
தந்துபண் புடையோர் தாமகம் மகிழ
விசய நகர வேந்திறல் முன்னம்
தாபனம் பெற்றுத் தகவிளங் கியதும்

---

624. செந்தமிழைப் புரத்தலினால் உக்கிரபாண்டியன், சிவபக்திப் பொலிவால் சிவபாத சேகரன், கழறியதை அறிதலால் சேரன் என மிளிர். சேரன் - சேரமான் பெருமாள்.

625. எம். ஓ. பார்த்தசாரதி ஐயங்கார் இந்து பாலிகா பாடசாலை அறக்குழுத் தலைவராக இருந்தவர்.

8. தவன் - கணவன்.

மின்பொரு ளுதவி இன்பம்மீ தூரத்
திருமலா சாரியார் பொருவறக் காத்ததும்
முதன்மையா நினைக்கொடு முன்வந் ததுவும்
ஆயவிக் கழகம்நின் அகற்சியாற் சிறிதும்
சலியா தன்னியர் தம்மால் என்றும்
மெலியா தெவற்றினும் மேன்மேல் ஓங்க
மேவரும் விம்மிதம் யாவரும் அடைந்திட
இரசத வட்டம் ஈரை யாயிரம்
பரசுற அளித்த பண்புடை வள்ளால்
எத்தா னத்தினும் வித்தியா தானம்
பொருவரி தென்றுசெய் புண்ணிய முதல்வா
அமிழ்தினிற் சிறந்த தமிழ்மொழி தனக்கிப்
பெருந்துணை யாகத் திருந்துபல் கலையார்
சீரிய பெருமைசால் ஆரிய மதனை
எங்களுக் களித்த மங்கள குணகர
திருமால் சமயம் செழிக்கவந் துதித்த
விப்பிர சிகாமணி எய்ப்புடை வைப்பே
சிந்தா மணியே செல்வப் பெருக்கே
பார்த்தசா ரதிப்பெயர் படைத்தகோ மானே
அறமிதற் குன்போல் அருநிதி எளிதிற்
சொல்லா தளித்த வல்லார் எவரே
திகழ்தரும் அரோக திடகாத் திரமும்
புகழ்தரு செல்வமும் பூரண ஆயுளும்
நினக்கருள் செயவும் நிகழ்த்துபின் னுளில்
இந்நகர் மருவி இலங்குறு பெரிய
நீதித் தலத்து நிருப னாகி
இதைப்பா லிக்கநிற் கினிதருள் செயவும்
கண்ணனை அமலனைக் கமல நாபனைத்
திருமறு மார்பனைத் தெவிட்டா அமுதை
அல்லிக் கேணிவாழ் அருட்பெருங் கடலைத்
தினம்ஒழி யாமலே சேர்ந்து
மனமொழி மெய்களின் வணங்குதும் மகிழ்ந்தே.

---

25. இரசதவட்டம் - ரூபாய். 31. ஆரியம் - வடமொழி.

பாஸ்கர சேதுபதி

[இவர் இராமநாதபுரம் அரசர்; ஐயரவர்கள்பால் பேரன்புடையவர்.]

(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

626. பயன்மிகுத்த தமிழ்வளர்க்கும் பாண்டியபூ
பதியேதற் பரனைப் போற்றும்
செயல்மிகுத்த திடமனத்துச் சிவபத்த
சிகாமணியே செல்வம் ஓங்கி
இயல்மிகுத்த முகவையிற்பாஸ் கரசேது
பதியரசே யானின் றோதும்
மயல்மிகுத்த மொழிவினவி மனமகிழ
எனக்கபயம் வழங்கு வாயால். (1)

627. சீர்பூத்த மணிமுடிநீ அணிதினத்தை
வரைந்திடுபத் திரிகை என்பால்
நேர்பூத்த நினதன்பி னொடுமுறப்பெற்
றகமகிழ்வு நிறைந்தேன் அந்நாள்
பேர்பூத்த அவண்அடையச் செயுங்காலம்
எனையனுகாப் பெற்றி யானும்
ஏர்பூத்த விடுமுறைநாள் இன்மையினும்
துயரமொடேண் டிருந்தேன் மன்னே. (2)

628. ஆனாலும் மன்பதைகள் முகவனசங்
கனாமலர்த்தி அமைதி சான்ற
தேனாலுங் கவிவலவர் இரவகற்றி
ஒளியெங்கும் சிவண வீசி

626-35. ஒரு கடிதப் பாடல்கள். முகவை - இராமநாதபுரம்

627. பாஸ்கர சேதுபதியவர்களுக்குப் பட்டாபிஷேகம் நடைபெற்ற போது ஐயரவர்களால் அதற்குப் போக முடியவில்லை. அதைக் குறிப்பிட்டுச் சொன்னது இது.

628. மன்பதைகள் - மக்கள். தேன் ஆலும் - தேன்பரவிய. இரவு - இரத்தல்; இராத்திரி என்பது தொனிப் பொருள். சிவண - பொருந்த. யான் நாலு.

மீனாலும் பொழில்முகவை வேந்தேநீ
வீற்றிருந்து விளங்கும் தன்மை
யானாலு திசையினரும் சொலக்கேட்டுக்
கண்டவன்போல் இருந்தேன் மாதோ. (3)

629. குலமுதல்வ னோபருதி ரகுநாத
சேதுபதிக் கோமா னாதிப்
பலமுதல்வ ரோநின்றன் முன்னோர்பாஸ்
கரசேது பதிவேந் தேஇத்
தலமுதலாம் முகவைபதி நிகரருணா
ணுகரன்நீ தாணு வாய
நலமுதல்நீ வழிபடுந்தே வெனினின்சீர்
எவராலும் நவிறற் பாற்றே. (4)

630. உரவலரும் எழுபரிசேர் ஓருருளை
இரதமொன் றூர்ந் துழிதந் தென்றும்
இரவலரை வருத்திமதி யொளிகுறைக்கும்
வெங்கதிர்நிற் கிணையாங் கொல்லோ
புரவலர்சி காமணியே புலவர்கள்சிந்
தாமணியே புகழின் வைப்பே
விரவலர்தம் கோளரியே பாஸ்கரசா
மிப்பெயர்கொள் விறற்செவ் வேளே. (5)

---

629. பருதி - சூரியன். முகவை பதி - நின் ஊர் இராமநாதபுரம். தாணு - சிவபெருமான்.

630. உரவு - வலிமை. ஓர் உருளை - ஒற்றைச் சக்கரம். உழிதந்து - திரிந்து. இரவலரை வருத்தி - இராவில் ஒளியை மறைத்துத் தாமரையை வருந்தச் செய்து; இரப்போரை வருந்தச் செய்து என்பது தொனிப் பொருள். மதி - சந்திரன்; அறிவு என்பது தொனிப் பொருள். வெங்கதிர் - வெவ்விய சூரியன். விரவலர் - பகைவர்.

631. பாராமல் இருந்தனனென் றெண்ணினையேல்
இவண்வந்து பார்ப்பான் என்றுன்
ஏராரும் உளத்தினிடை எண்ணுகயான்
நினக்கனுப்பும் இணையி லாத
சீராரும் ஒருபத்துப் பாட்டிரண்டும்
வந்தசெய்தி தெரிந்தி லேனுல்
கூராரும் படைக்கரபாஸ் கரசேது
பதிஇரவி குலச்சிங் கேறே. (6)

632. முன்னர்மகிழ்ந் தியானனுப்பும் கடிதங்கள்
அவண்போதா முறைமை யாறே
பின்னரவற் றினைப்பார்க்க அவகாசம்
சிறிதுமிலாப் பெற்றி யாறே
நன்னரெழு தியனுப்பா திருந்தனைமற்
றென்றேனும் நான்எண் ணுது
மன்னர்புகழ் அரசேநீ மறுவிரவா
மொழியையென மதித்திட் டேனே. (7)

633. அகவையின்நீ இளமையையா யினும்அறிவின்
முதியையென ஆன்றோர் சால
உகவையினோ டியம்புறக்கேட் டகமகிழ்ந்து
குறையனைத்தும் ஒழிந்திட் டேனுல்
முகவைநகர் வீற்றிருந்து செங்கோலுய்த்
துயிர்வருக்கம் முழுது மன்பால்
மகவையளித் திடுந்தாயிற் புரந்திடுபாஸ்
கரசாமி மன்ன ரேறே. (8)

---

631. பத்துப்பாட்டு இரண்டு - பத்துப்பாட்டு என்னும் நூலின் இரண்டு பிரதிகள்.

632. எழுதிய கடிதத்துக்கு விடை வராமையைக் குறித்தபடி. மறு மொழி அனுப்பவில்லை; மறு விரவா மொழியை உடையாய் நீ என்று தெரிந்துகொண்டேன்; மறு - குற்றம்.

633. அகவையின் - பிராயத்தில், உகவை - மகிழ்ச்சி.

634. நக்காலம் நுகர்ந்தும்பர் தமைக்காத்த
அமரனடி நளினத் தன்பு
முக்காலத் தினுமுடையாய் அரசாட்சி
கொளத்தொடங்கும் முதனு ளாய
அக்காலத் தனுப்பின்னினக் கவகாசம்
இராதெனவீ தனுப்பி லேனல்
எக்காலத் திலுமெனைப்போல் வாரிடத்தன்
புடையையென்ப தெனக்குண் டன்றே. (9)

635. என்பாட்டைப் பலபாட்டால் இசைப்பதனுக்
கெனக்கெண்ணம் இருந்தும் சால
இன்பாரும் நினதமையம் எப்படியோ
எனவஞ்சும் ஏது வாலே
முன்பான்ற பெரியரருள் ஒருபத்துப்
பாட்டுரையை முறையின் உய்த்தேன்
பின்பாடல் ஒருபஃதே அனுப்பினல்
நோக்கிமகிழ் பெறுவை யென்றே. (10)

636. அருளினல் பெருங்கடலை ஈகையால்
பசுமுகிலை அளவாக் கல்வித்
தெருளினல் பணியரசைப் புரவினல்
திருமாலைச் சிறுப ழிக்கும்
வெருளினல் அறக்கடவுள் தனைவென்று
நன்றுப்புரி மேம்பா டுற்ற
பொருளினல் விளங்குறுபாஸ் கரசேது
பதிமகிழ்வு பூத்து வாழ்க. (11)

---

634. நக்கு - மகிழ்ந்து. ஆலம் - நஞ்சை. அமரன் - சிவபெருமான். என்பது - என்னும் எண்ணம்.

635. என் பாட்டை - என் உழைப்பை. உய்த்தேன் - அனுப்பினேன். பாடல் ஒருபஃது என்றது, இந்தக் கடிதப் பாடல்கள் பத்தையும்.

636. இதுமுதல் 640 வரையில் உள்ளவை வேறு ஒரு கடிதப்பாடல்கள். பணியரசை - ஆதிசேடனை. புரவு - காக்கும் தொழில். வெருள் - அச்சம்.

637. பூமணக்கும் பொழில்முகவைப் புரிமணக்கும்
தவப்பேருய்ப் போந்து கற்ரோர்
தாம்மணக்கும் பெருமையுடைச் சபைமணக்கும்
பிரசங்கம் சாற்றல் மேவிப்
பாமணக்கும் சுவைத்தமிழிப் படிமணக்கும்
படிபரிபா லனஞ்செய் தான்ரோர்
நாமணக்கும் புகழ்மிகுத்த நலமுறுபாஸ்
கரசாமி நரேந்த்ர கேண்மோ. (12)

638. வேண்டுவார் வேண்டுவன அளித்திடுபே
ரருளாளன் விழையத் தோன்றி
வேண்டுவார் வேண்டுவன அளித்திடுபாஸ்
கரசாமி வேந்தர் வேந்தே
ஈண்டுவார் கடலுலகம் முழுதுமட்டித்
திடும்பெருமை ஏந்த லேயின்
றீண்டியான் சிலமொழிசற் றியம்பிடுதற்
கவகாசம் ஈவாய் மன்னே. (13)

639. மாமேவு பலகலைகள் வாய்ந்துமறு
வின்றிவளர் மதியோ டுற்றுத்
தேமேவு பல்லுயிரும் இனிதுபுரந்
தளிக்குமொளி சிவண லாலே
நாமேவு பருதியினை வென்றிடுபாற்
கரசாமி நரேந்தி ராவின்
பாமேவு தொடையுமலர்த் தொடையுமணி
புயச்சேது பதியே கேண்மோ. (14)

---

637. இப் படி - இந்தப் பூமியில்.

639-40. இவை மற்ருெரு கடிதப் பாடல்கள்.

கலைகள் - சாத்திரங்கள், சந்திர கலை. மறு - குற்றம், களங்கம். மதி - அறிவு, சந்திரன். சிவணலால் - பொருந்துவதால். பருதியினை - சூரியனை. சூரியன், சில கலைகள் வாய்ந்து மறுவோடு வளர்தலும் தேய்தலு முடைய மதியோடுறுவதால் அதனை இவன் வென்றவனுனன் என்றபடி. பாமேவு தொடை - பாமாலை.

640. வலம்பூத்த திருவால வாயுடையா
ரொடுந்தமிழின் வகைமை ஆய்ந்த
புலம்பூத்த நக்கீர ரைர்முதலோர்
நவின்றருளும் பொலிவு பெற்ற
பலம்பூத்த முருகாற்றுப் படையாதி
ஒருபத்துப் பாட்டை யுஞ்சீர்க்
குலம்பூத்த புகழ்நச்சி னார்க்கினியர்
உரையுடனே குலவ ஆய்ந்தே. (15)

(கட்டளைக் கலித்துறை)

641. கார்பெற்ற தோகையும் பன்னாள்
பிரிந்திட்ட காதலன் றன்
தேர்பெற்ற கற்புடை மங்கையும்
செய்ய செழுஞ்சுடரை
நேர்பெற்ற தாமரை யும்போல்
மகிழ்வு நிறைந்தனமால்
சீர்பெற்ற பாஸ்கர சாமி
மகீப சிகாமணியே. (16)

642. வணங்கா முடியினை என்றே
நிதமும் மகிழ்ந்தறிஞர்
கணங்கா தலித்துச் சொலுமால்
நினைஉட் கசிந்துபல்கால்
உணங்காது நித்தம் பணியாற்
பணிவுற் றொழுகுவைநீ
குணங்காத லித்திடு பாற்கர
சாமி குலோத்துங்கனே. (17)

---

640. இதற்குமேல் உள்ள பாடல்கள் கிடைக்கவில்லை.
புலம் - அறிவு.
642. அறிஞர் கணம் நீ வணங்கா முடியை உடையாய் என்று சொல்லும்; ஆனால் நீயோ நாள்தோறும் சிவபெருமானை வணங்குகிறாய். உணங்காது - வருந்தாமல். பணியான் — பாம்பை அணிந்த சிவபெருமானை.

(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

643. சீர்பெற்ற நினதிசைமுன் கேட்டுவிழி
களைப்பழித்த செவிகள் இந்நாள்
நார்பெற்ற நினைக்கண்டவ் விழிகள்மகிழ்
வடைந்தபின்நீ நவிலும் தூய
கீர்பெற்று மகிழ்பெற்றவ் விழிகளினற்
குணம்வியக்கும் கெழூஉ வாசத்
தார்பெற்ற விறற்புயப்பாற் கரசாமி
மகிபநலஞ் சான்ற கோவே. (18)

(கட்டளைக் கலித்துறை)

644. பண்ணிற் சிறந்த கவிவா
ணரைப்பரி பாலனஞ்செய்
தெண்ணிற் சிறந்த அறங்காத்
தெவர்க்கும் இதமளித்து
விண்ணிற் சிறந்தொரு பாற்கரன்
நாளும் விளங்குதல்போல்
மண்ணிற் சிறந்தொரு பாற்கர
பூபதி வாழியவே. (19)

(பதினான்குசீர் ஆசிரிய விருத்தம்)

645. சீர்பெற்ற பலகலைகள் தேர்ந்தவர்கள் குழுமியே
சிந்தையில் மகிழ்ந்து மேவும்
திருவார்ந் தவற்றினது தெய்வவுரு மேவிடல்
சிவணவிசை வீணை சாலப்
பேர்பெற்ற புத்தகம் எழுத்தாணி இவைநன்கு
பெய்தொடிக் கையில் மேவ
பெருமைகொள் மகாநவமி ஏழாந் தினத்தழகு
பெற்றபக லிடைமு கவையின்

---

643. முதலில் நின்புகழைக் கேட்ட செவிகள் உன்னைப் பாராத விழிகளைப் பழித்தன. இசை - புகழ். நார் - அன்பு. கீர் - மொழி.

644. 1892-ஆம் ஆண்டு நவராத்திரி விழாவுக்கு இராமநாதபுரம் போயிருந்தபோது பாடியவை. இது முதல் மூன்று கவிகள்.

ஏர்பெற்ற கல்விவளம் எளிதருள்செய் யக்காட்சி
இயைந்தருளும் அமல வாழ்வே
இராசரா சேச்வரி எம்போலி யர்க்கெய்ப்பி
னிடைவைப்பை அனைய சுகுணன்
தார்பெற்ற திண்புயன் சாதுஜன பாலகனு
தாரமந் தார மனையான்
தனைநிகரில் பாஸ்கரச் சாமிமகி பதியினும்
தழைத்தோங்க அருள்செய் வையே. (20)

(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

646. முற்காட்சி யால்நிகழ்ந்த இன்பமதற்
கொப்புயர்வு மொழியி னில்லை
பிற்காட்சி யால்நிகழ்ந்த இன்பமுமற்
றேயெனினும் பேசி ரண்டு
நற்காட்சி தம்முளொன்று மற்றொன்றை
ஒக்குமென நவில லாமால்
சொற்காட்சி உறுமுகவை வாழ்வுறுபாஸ்
கரசாமிச் சுகுண மாலே. (21)

647. மாசிகந்த பெரியருற்ற துறைசையிலம்
பலவாண வள்ள லாய
தேசிகனீ இவண்விசயம் செய்வைஇனன்
வாரமெனத் தெரிப்ப யான்போந்
தேசிகந்த விருப்பினொடும் நின்வரவை
எதிர்நோக்கி இருந்தேன் அம்மா
ஆசிகந்த புலவர்தமைப் புரந்திடுபாஸ்
கரசாமி அரச ரேறே. (22)

---

647. இது முதல் எட்டுப் பாடல்கள், சேதுபதி மன்னர் திருவிடைமருதூருக்கு வந்தபோது பாடியவை.

இனன் வாரம் - ஞாயிற்றுக் கிழமை.

648. அருளாளன் அருளாளன் கண்மணிகண்
மணிபூதி அமைந்த பூதி
வெருளாத சிவசமயஞ் சிவசமயம்
என்றியலும் மேன்மை பூண்ட
தெருளாளா முகவையிற்பாஸ் கரசாமிச்
சேதுபதிச் செல்வா இன்று
பொருளாரும் குணதிசைநின் றுறலினறிந்
தேனின்பேர்ப் பொருளி தென்றே. (23)

(கட்டளைக் கலித்துறை)

649. நின்றுட்டை ஆண்ட வரகுண
தேவரிந் நீள்பதியில்
அந்நாள் இருந்தர சாண்டனர்
என்பர்மற் றுகையினுல்
இந்நாள் இதனிடை நீயுறல்
சால இயைபுடைத்தே
எந்நாடும் போற்றுறு பாஸ்கர
சாமி இறையவனே. (24)

(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

650. வலம்பூத்த இடைமருதம் வாழ்ந்தருளும்
பெருங்கருணை வாரி தன்னை
நலம்பூத்த புகழ்மிகுபாஸ் கரசாமி
சேதுபதி நரேந்தி ரன்றன்

---

648. அருளாளன் அருளாளன் - அருளாகிய சக்தியை ஆள்பவனே கிருபையையுடைய கடவுள். கண்மணி கண்மணி - ருத்திராட்சமே கண்ணி லுள்ள மணியைப் போன்றது. பூதி அமைந்த பூதி - விபூதியே பொருத்த மான செல்வம். சிவ சமயம் சிவ சமயம் - சிவனை வழிபடும் சமயமே மங்கல மான சமயம். குணதிசை - கிழக்கு. கிழக்கிலிருந்து வருதலால் சூரியன் என்னும் பொருளையுடைய பாஸ்கரன் என்பதன் பொருளைத் தெரிந்து கொண்டேன்.

649. இந்நீள் பதி என்றது திருவிடை மருதூரை. இயைபு - பொருத் தம்.

புலம்பூத்த அன்பினொடு போற்றிவழி
படற்குநிகர் புகலின் முன்னம்
பலம்பூத்த வரகுணபூ பதியன்பின்
வழிபடலைப் பகர லாமால். (25)

651. அன்றியும்பாஸ் கரசாமி அண்ணலிடை
மருதமடைந் தன்பிற் போற்றல்
துன்றிவர குணன்பெரும்பே றுற்றதையெண்
ணுபுதருக்கித் துலங்கு திங்கள்
ஒன்றியவுள் மகிழ்ச்சியறிந் தொருபருதி
இவண்மருவி உயிர்கட் கெல்லாம்
இன்றியமை யாதநலம் அருண்முதலை
வழிபடலென் றியம்ப லாமால். (26)

652. பின்னுமங் கொருமதனை மதனழித்தோ
னதுகருணைப் பிழம்ப தாகி
மன்னுமெழில் திருமேனி முழுதையுமா
டியினன்றி மற்றை யோர்பால்
முன்னுநல முறக்காண்டல் தனக்கரிதா
தலைப்பருதி முன்னி முன்னி
மின்னுமுரு வேறுகொடப் பெயர்கொடுவந்
தானெனவும் விளம்ப லாமால். (27)

653. திருவால வாயதனில் உயர்ந்ததிடை
மருதெனவே தெளிந்தோர் சொல்லும்
பொருவாத உரையுண்மை யானுமறிந்
தேனெனினும் பொருவில் நின்றோ

---

651. பாஸ்கரன் என்பது சூரியனைக் குறிப்பது. அதனை எண்ணிப் பாடியது இது.

652. மதனை மதன் அழித்தோன் - காமனது வலிமையை அழித்த சிவபெருமான். இறைவனுடைய கண்ணாக உள்ள சூரியன் சிவபெருமானது திருவுருவத்தை அப்பெருமான் கண்ணாடியின்முன் நின்றபோது காண முடியுமேயன்றி வேறு வகையில் காண முடியாது ; ஆதலால் அந்த உருவத்தைத் தரிசிக்கத் தனியே ஒருருவெடுத்து வந்தது போல் இவ்வரசர் இருந்தார்.

டொருவாது நெடுநேரம் இருந்தளவி
மகிழ்ந்திடவீ துஞற்று மாற்ருல்
தருவாருங் கொடைக்கரப்பாஸ் கரசாமி
சிவபத்தி சான்ற கோவே. (28)

654. பயன்மருவு திருத்துறைசை மாநகரும்
அதைச்சூழ்ந்த பல்லூர் தாமும்
நயன்மருவு மத்தலத்தில் உறையரனும்
பெறுநாம நலத்தை நோக்கின்
இயன்மருவு நீவருதற் கியைபுடைய
எனத்துறைசை இருக்கும் எங்கள்
புயன்மருவு கொடையுறுமம் பலவாண
தேவனன்பிற் புகன்ருன் மன்னே. (29)

655. திருத்தில்லை தனைப்புண்ட ரீகபுரம்
எனவெவரும் செப்பல் மெய்யே
மருத்துன்றும் அலங்கலணி புயமுடைப்பாற்
கரசாமி மன்ன வாளம்
கருத்தொன்றும் நினைக்கண்டு நகரமிது
மிகவிளங்கும் கவினுற் சால
உருத்துன்றும் இதைப்புகழ்கோ இதைவயக்கும்
நினைப்புகழ்கோ உரைப்பாய் நீயே. (30)

(வெண்பா)

656. ஆண்டின் இளமை அறிவின் முதியையென
ஈண்டறிந்தேன் தென்முகவை ஏந்தலே—பூண்டதிறல்
வேற்கர தில்லை விளங்குமர ணைப்போற்றும்
பாற்கர சாமிமகி பா. (31)

---

655. பாஸ்கரன் வருதலால் புண்டரீகபுரம் சிறப்படைந்தது; புண்டரீகம் - தாமரை.

இதுவும் அடுத்த செய்யுளும் சேதுபதி மன்னர் சிதம்பரத்திற்கு வந்த சிறப்பைப் பாராட்டியவை.

(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

657. பொருவாத நயசுகுணம் மிகுத்திடுபாற்-
கரசாமி பூபன் என்றும்
ஒருவாத வளமிகுத்த பெருந்துறையின்
அருட்கடலை உவந்து போற்றல்
திருவாத வூரரெனும் அமைச்சரைமுன்
பிவராண்ட திறத்தை எண்ணி
உருவாரும் ஒருவழுதி தானுமடைந்
துவந்தேத்தல் ஒக்கும் மன்னோ. (32)

மகாவித்துவான் திரிசிரபுரம் மீனாட்சி சுந்தரம் பிள்ளை

[ஐயரவர்களின் ஆசிரியர்]

(ஆசிரியப்பா)

658. பூமலி துணர்ச்சினைக் காமலி கூலப்
பொன்னிமா நதிபாய் சென்னிநாட் டிடைவளம்
நிறையூர் ஆய உறையூர்க் குணபால்
கருவூதிர்ந் தயர்வுறும் ஒருமகள் அனூரறத்
தாயான செல்வம் தங்குமாத் தலமாய்த்
துரிசிரா திலங்கும் திரிசிரா மலையில்
உதித்தொளி மிகுத்தே கதித்துறு மணியும்,
மலர்தொறும் நறவுகொள் வண்டினம் ஏய்ப்பப்
பலரிடைக் கல்வி பயின்றோங் கண்ணலும்
யாவரும் என்றும் மேவரும் புலமை

---

657. சேதுபதி மன்னர் திருப்பெருந்துறைக்கு (ஆவுடையார் கோயில்) வந்தபோது பாடியது.

658. இது மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களின் பிரபந்தத்திரட்டின் முன் உள்ள உரிமையுரை. (1910)

1. துணர்ச்சினைக் கா - கொத்துக்களையுடைய கிளைகளையுடைய சோலைகள். கூலம் - கரை. 2. சென்னி நாடு - சோழ நாடு. 4. அயர்வுறும் - துன்புற்ற. அனூர் - துன்பம். 6. துரிசு - குற்றம். 8. ஏய்ப்ப - ஒப்ப.

வாய்ந்துநூல் பல்மிக ஆய்ந்துகிளர் ஏந்தலும்,
சுவைசெறி பனுவல்க ளவைபல வியப்ப
எளிதிற் பாடிய அளிகிளர் குரிசிலும்
புவித்தலம் வியப்பச் சிவத்தல புராணம்
பலசெய் தோங்குசீர் படைத்தசீ ரியனும்,
நலமா ணுக்கர் பலபேர்ப் புரந்தே
அன்னர் குழாத்திடை நன்னர் மேவி
நூல்பல பயிற்றிச் சால்புறு பெரியனும்
அருத்திகூர் எனையரு கிருத்திநூல் பலசொற்
றல்லல் அகற்றிய நல்லிசைப் புலவனும்
நன்றிபா ராட்டுநர் நடுநா யகமும்
நிலம்மலை நிறைகோல் மலர்நிக ராய
மாட்சிசால் புகழ்மீ னாட்சிசுந் தரப்பேர்
உடையனும் குவளைத் தொடையனும் சுவைசெறி
இதிலுள நூலெலாம் இயம்புமா கவிஞனும்
ஆயவன் றனைத்தன தலைக்களத் தலைவனுச்
செய்தவன் எவனோ கைதவம் இலாது
சொன்மழை சொரியுமச் சுகுணமா மலைபாற்
பொன்மழை பொழிந்தருள் பூத்தவன் எவனோ
செய்யுள்மற் றிவன்போல் செய்குநர் யார்இவன்
செய்யுள்போல் இனித்தில தெரியின்மற் றவைஎன்
றுணருமா றெவர்க்கும் உரைத்தவன் எவனோ
பன்மா ணவர்கட் கின்மாண் அணியூண்
உடுக்கையா திகளளித் துறுதரம் தெரிந்தே
இலக்கியம் பலவும் இலக்கணம் ஐந்தும்
ஞான நூல்களும் நவின்றவன் எவனோ
வடமொழி தென்மொழி வாய்ந்தபன் னூல்கள்
கற்றவர் சிரகர கம்பிதம் செயவாங்
குற்றநுண் பொருள்எடுத் துரைத்தவன் எவனோ
ஆதுலர்க் கெய்ப்பில்வைப் பாயவன் எவனோ

---

13. அளி - அன்பு. 19 அருத்தி - அன்பு. 22. நிறை கோல் - தராசு 24. குவளை மாலை வேளாளர்க்குரியது. 27. கைதவம் - வஞ்சனை. 33. இல்மாண் அணி. 38. சிரகர கம்பிதம் செய - தலையை ஆட்டிக் கை தட்ட. 40. ஆதுலர் - இரவலர். எய்ப்பில் வைப்பு - இளைத்தபோது உதவும் செல்வம்.

என்னுளம் அகலா திருப்பவன் எவனோ
எண்ணிய தளித்திடு புண்ணியன் எவனோ
திரிகூ டப்பெயர்ச் சிலம்பயல் தோன்றித்
துறைசையம் பதிசெய் நிறைதவப் பயனுச்
செப்புறு மெய்ப்புகழ்ச் சுப்பிர மணிய
தேசிகப் பெயரொடு திகழ்ந்தவன் எவனோ
அன்பருக் குலவா இன்பருள் நிமித்தம்
தீபகம் போன்றவன் எவனோ அவன்றன்
ஞாபகச் சின்னமா நன்கிதை
அன்புடன் உரிமை ஆக்குவன் இனிதே.

(சுப்பிரமணிய தேசிகர்)

(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

659. எங்கெழிலென் ஞாயிறெமக் கெனஅடுத்த
என்போல்வார் எண்ணி ஏம்ஆர்ந்
தங்கெழிலின் புறவளிக்கும் பெருங்கருணைக்
கடலையடி யவர்கள் போற்றப்
பொங்கெழிலா வடுதுறைவாழ் தருகுருசுப்
பிரமணியப் புகழ்க்கோ மானைத்
தங்கெழிலார் தரஅடுக்கப் பெற்றவரே
நற்றவரித் தரணி மீதே.

---

43. திரிகூடப் பெயர்ச் சிலம்பு - திருக்குற்றால மலை. அதன் அயல் என்றது மேலகரம் என்ற ஊரை. 44. துறைசை - திருவாவடுதுறை.

48. தீபகம் - பார்வை மிருகம். சிவபெருமானே மனிதர்களை வயப் படுத்தி இன்பம் அருளும் பொருட்டு மனித உருவில் எழுந்தருளுவதாகச் சொல் வது மரபு. சுப்பிரமணிய தேசிகர் பார்வை மிருகம் போல மனிதர்களை வசப்படுத்த வந்தவர் என்றபடி.

இந்த நூலைத் திருவாவடுதுறை ஆதீனத் தலைவராகிய ஸ்ரீ சுப்பிர மணிய தேசிகருக்கு அர்ப்பணம் செய்தார்கள்.

659. ஏம் ஆர்ந்து - பாதுகாப்பைப் பெற்று.

தியாகராச செட்டியார்

660. ஈன்றதிருத் தந்தையணி மலருடைமுற்
பெறுமுரிமை எய்தி லேம்யாம்
ஆன்றவவன் புத்திரர்க ளாயிருந்திங்
கென்னபயன் அடைந்தோம் என்று
மான்றமனத் தினராகிக் கரிமுகனும்
அறுமுகனும் வருந்த ஓர்சேய்
தோன்றமுனம் பெருந்தவஞ்செய் திணையின்றி
நனிவிளங்கு சோழ நாட்டில். (1)

661. பிறையூரும் சடைமவுலிக் கறையூரும்
கந்தரத்துப் பெருமான் செய்ய
மறையூரும் முறையூரும் அடியரையாண்
டருள்பஞ்ச வர்ண நாதன்
தறையூரும் தவப்பயனுத் திருக்காந்தி
மதியம்மை சமேத ஞக
உறையூரென் றறிஞர்புகழ் தரவிளங்கும்
உறையூராம் உயர்த லத்தில். (2)

662. வாய்ந்தமான் மியம்முழுதும் எல்லோரும்
உணர்ந்துசைவ மார்க்கம் தேர்ந்து
பாய்ந்தஇரு மைப்பயனும் நுகர்ந்துலவாப்
பேரின்பப் பயனும் எய்தத்

---

660. இது முதல் 13 கவிகள் 1881-ஆம் ஆண்டு ஜூன் மாதம் தியாகராச செட்டியார் பதிப்பித்த உறையூர்ப் புராணப் பதிப்பின் சிறப்புப் பாயிரப் பாடல்கள்.

திருத்தந்தை - சிவபெருமான். ஓர் சேய் - சண்டேசர். தவஞ் செய்து இணையின்றி,

661. கறை - கறுப்பு. கந்தரம் - கழுத்து. மறை ஊரும் முறை ஊரும் அடியாரை - வேதம் சொன்ன முறைப்படியே வாழ்ந்து பரவும் அன்பரை. பஞ்சவர்ண நாதன் - உறையூர்ச் சிவபெருமான். காந்திமதி - உறையூர்த் தலத்து அம்பிகை. சமேதஞக உறையும் ஊர்.

662. பாய்ந்த - பரவிய. உலவா - அழியாத.

தோய்ந்துநலத் தமிழின்மொழி பெயர்க்கவெனப்
பரமனடித் தொண்டு பூண்டோர்
ஏய்ந்தவன்பி னுடுவேண்டக் கடைப்பிடித்தி
யாம்பெறும்பே றிதுவே என்று. (3)

663. வன்னமைந்தில் அதிகவிருப் புடைமையினால்
சிறப்பெழுத்தா வன்னம் ஐந்து
மன்னவமை மொழியிலும்நல் விருப்புடையன்
பரமனென்று மனத்தின் ஓர்ந்து
பன்னவமை காப்பியம்என் றறிஞர்கொள
அதனுறுப்புப் பலவும் நன்கு
துன்னவமை எங்யமும் நன்னரமை
தரஇனிது சொற்றான் மன்னே. (4)

664. அத்தகைய பெருங்கீர்த்திக் கவிநாதன்
யாவன்எனின் அமலை யோடு
நித்தனுறை பலதலமான் மியம்இனிய
செந்தமிழின் நிகழ்த்தி னோன்அங்
கைத்தலவா மலகமெனத் தனையடைந்தோர்
பலர்க்கும்இன்ன காலம் என்று
தெத்தகைய பெருநூலும் எளிதுணர்த்திப்
பயனுறுத்தும் இணையி லாதோன். (5)

665. அருத்திமிக எனைஅருகில் இருத்தியருந்
தமிழ்நூல்கள் அறைந்து பின்னர்த்
திருத்துறைசை அமர்ந்தருள்சுப் பிரமணிய
அருட்கடலின் திருமுன் சாரப்

---

663. வன்னம் ஐந்தில் - ஐந்து நிறங்களில்; ஐந்து வேறு நிறங் கொண்டு காட்சியளித்தார். சிறப்பெழுத்தா வன்னம் ஐந்து மன்ன அமை மொழி - சிறப்பெழுத்துக்களாக ற, ன, ழ, எ, ஒ என்ற எழுத்துக்கள் ஐந்தும் நிலைபெற அமைந்த தமிழ் மொழி.

664. அமலை - அம்பிகை. ஆமலகம் - நெல்லி.

665. அருத்தி - ஆர்வம். சுப்பிரமணிய அருட் கடல் - சுப்பிரமணிய தேசிகர். இரு பயன் - கல்வி, செல்வம். மருத்த - மணம் பரவும்.

பொருத்திஅனை யான்கருணைக் கிலக்காக்கி
இருபயனும் பொருந்தச் செய்தோன்
மருத்தபொழிற் சிரகிரிவாழ் மீனாட்சி
சுந்தரநா வலவர் ஏறே. (6)

666. அனையன்நவில் சிவதல்மான் மியம்பலவற்
றுளும்முதலா அமைந்த தாய
தனையனைய இவ்வுறந்தை மான்மியத்தைத்
தமிழ்நாட்டில் சார்ந்தோர் யாரும்
புனைதரக்கற் றெந்நூலும் தம்நூலாம்
வணம்ஞானம் பொருந்தி உய்ய
வனைதருபல் லோர்புகழ வயங்கச்சில்
பதிப்பித்து வழங்கு கென்று. (7)

667. தோளாத மணியனையன் திருத்தொண்டை
நாட்டும்உளத் தொண்டை நாட்டு
வேளாளர் குலதிலகன் அவனடியார்
சரிதையலால் வேறென் றென்றும்
கேளாத செஞ்செவியன் திருவுறையூர்ப்
பதிஅழகு கெழும வாழ்வோன்
தாளாளன் எழிற்சொக்க லிங்கமுகில்
புரிபெரிய தவமாம் செம்மல். (8)

668. இந்நூலா சிரியனிடம் கற்றுணர்ந்தோன்
அவன்விரும்பி இயற்றும் நூலும்
மெய்ந்நூல்கள் பிறவும்எழு தாதஎழுத்
தியைவிக்க விருப்பம் உள்ளோன்
பொய்ந்நூல்கள் பிதற்றுவன பொருள்என்று
மருளாத புந்தி யாளன்
எந்நூலும் புகழ்ஈசன் அடியாரைப்
பெற்றதாய் எனப்பு ரப்போன். (9)

666. உறையூர்ப் புராணமே மகாவித்துவான் பிள்ளையவர்கள் இயற்றிய முதற்காப்பியம்.

667. தோளாத - தொளையிடாத. சொக்கலிங்க முகில் - கல்லூர்ச் சொக்கலிங்க முதலியார்.

668. எழுதாத எழுத்து - அச்சு. பொருள் என்று - உண்மை என்று,

669. வஞ்சமனப் படிற்றொழுக்கச் சுமடருளத்
திடைமருவா மாதே வன்தாட்
கஞ்சமலர் அணிஉளத்தன் குவளைமலர்
அணிபுயத்தன் கலைவ லோர்கள்
நெஞ்சம்உவந் திடவதனம் மலர்ந்தினிய
மொழியொடவர் நேயம் பூண
எஞ்சலிலா துதவுமெழில் மதுரைநா
யகக்குரிசில் இயம்பக் கேட்டு. (10)

670. யான்செய்த மாதவந்தான் இருந்தபடி
என்னேயென் றிறும்பூ தெய்தி
வான்செய்த வகையாய்ந்து பதிப்பித்து
வழங்கினன்அம் மாண்பின் மிக்கான்
தேன்செய்த மதுரமுடைத் தெள்ளியசெந்
தமிழென்னும் தெரிவை முன்னம்
தான்செய்த மாதவமோர் உருவமெடுத்
தெனத்திகழும் தகைமை யாளன். (11)

671. இனங்கொள்ளும் மாணுக்கர்க் கரியனவும்
எளியனவா இயம்பி அன்னார்
மனங்கொள்ளும் படியுணர்த்தி அவர்கொள்ளும்
மகிழ்ச்சியைத்தன் மகிழ்ச்சி என்போன்
கனங்கொள்ளும் பேரறிஞர் இனங்கொள்ளும்
இனியவுரை கழறிச் சீர்த்தி
தினங்கொள்ளும் அறிஞன்என்பால் திரங்கொள்ளும்
அன்புடைய செம்மை கொண்டோன். (12)

672. நலம்பூத்த சிவபெருமான் திருப்புகழை
எடுத்துரைக்கும் நாவி னன்நற்
புலம்பூத்த கவிவலவர் சிரந்துளக்க
மதுரகவி புகறல் வல்லோன்

---

669. சுமடர் - பேதையர். குவளைமலர் வேளாளர்க்குரியது.

670. இறும்பூது - வியப்பு. வான் - பெருமை.

671. கனம் - பெருமை. திரம் - நிலை.

குலம்பூத்த புலவர்புகல் இனியகவிக்
குளம்மகிழும் குணமா மேரு
வலம்பூத்த இயற்றமிழ்தேர் தியாகரா
சப்பெயர்நா வலவன் மாதோ. (13)

வேம்பத்தூர்ப் பிச்சுவையர்

[இவர் பல தனிப் பாடல்களையும் சிறுநூல்களையும் இயற்றியுள்ளார். சிலேடைப்புலி என்ற சிறப்புப் பெயர் உடையவர்.]

(வெண்பா)

673. நிம்பையில்வந் துங்கன்னல் நேர நவவிரத
மும்பயில்யாப் புக்கள் மொழிபலருள்—ளும்பலகால்
மெய்யன்போ டேகற்றோர் மெச்சப்பா டும்பிச்சு
ஐயன்போற் பாடுபவர் ஆர்.

பெரியசாமி முத்தைய உடையார்

[இவர் பெரும்பன்றியூர் என்னும் ஊரில் வாழ்ந்த செல்வர். தமிழ்ப் புலமையும் தமிழ்ப் புலவர்களை ஆதரிக்கும் இயல்பும் உள்ளவர். கிறிஸ்தவ சமயத்தைச் சார்ந்தவர். தஞ்சையில் புகழுடன் விளங்கிய திரு பன்னீர் செல்வத்தின் மாமனார்.]

674. அளவாச் சுவைத்தமிழை ஆதரிப்போன் பல்சீர்
உளவாம் பெரும்பன்றி யூர்வாழ்—வுளசுகுணன்
சார்ந்த புகழ்ப்பெரிய சாமியண்ணல் எந்நலமும்
சேர்ந்திருக்க என்பன் தினம். (1)

---

672. வலம் - வெற்றி.

673. பிச்சுவையர் வகையுளி வரப் பாடுபவராதலின் இந்தப் பாடலும் அப்படி அமைந்தது.

நிம்பை - வேம்பத்தூர். வேம்பத்தூரில் தோன்றினாலும் கரும்பைப் போலப் பாடுகிறவர் என்றபடி. கன்னல் நேர-கரும்பை ஒப்ப. நவ இரதம் - ஒன்பது சுவை. யாப்புக்கள் - கவிகள்.

(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

675. கரும்பன்றி அமுதமும்நேர் தமிழ்நயத்தை
அறிந்துவந்து காத்தோம் பற்கண்
பெரும்பன்றி யூர்ப்பெரிய சாமிமகி
பாலனைநேர் பெற்றி யோர்யார்
சுரும்பன்றி மலர்த்தேனின் சுவையறியும்
பொருளுளதோ துளைந்தன் னுன்சீர்
விரும்பன்றி யொருசிறிதும் கவலையடை
யேல்நெஞ்சே விளம்பி னேனே. (2)

676. தக்கமுக மலர்ச்சியுடன் உபசரிப்பார்
மிகப்புகழ்வார் சாமீ என்பார்
அக்கநிகர் தமிழ்க்குழைப்பார் உனைப்போல
இலையென்ன அறைவா ரன்றி
இக்கலியிற் பெரும்பன்றி யூர்ப்பெரிய
சாமிமுகில் என்ன நாளும்
மிக்கபொருள் அளித்தொன் றும் வேண்டாமல்
தமிழ்புரப்பார் விளம்பில் யாரே. (3)

(வெண்பா)

677. காவிரண்டு நேரிரண்டு கையுடையாய் நின்னருமைப்
பாவிரண்டும் பார்த்தேன் பகர்திருவாய்—மேவிரண்டும்
சார்ந்தமையா லேபெரிய சாமியெனும் பேர்தகுமென்
றோர்ந்தமகிழ் விற்புகல்வேன் ஆய்ந்து. (4)

---

675. இது முதல் உள்ள நான்கு பாடல்களும் உடையாரவர்கள் இரண்டு வெண்பாக்களோடு எழுதிய கடிதத்துக்கு விடையாக 9—1—1927-இல் எழுதியவை.

சுரும்பு - வண்டு. துளைந்து - அளவளாவி. விரும்பு அன்றி.

676. அக்கம் - கண்.

677. கா - கற்பகம். திருவாய் மேவு இரண்டு - செல்வமாக் உள்ள பொருளும் கல்வியும்.

678. வெண்பாப்பல் லோர்பாட மேவுறுநீ எற்கிரண்டு
வெண்பா அனுப்பியது வீறுடைத்தே—திண்யாலோர்
ஓரும் பெரும்பன்றி யூர்ப்பெரிய சாமிநின்கண்
ஆருமன்பிற் கொப்பில்லை யால். (5)

ஜே. வி. பென்னிங்டன்

(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

679. இனித்தகுயின் விக்டோரி யாவவர்கள்
ஆள்மதரா ஸினுக்குள் மேலாய்த்
தனித்ததிரு நெல்வேலி எனுமுயர்ஜில்
லாவினர சாயிந் நாட்டிற்
செனித்தகுடி அனைத்துமுனம் இயற்றுபெருந்
தவமெனவே திகழுஞ் ஜே. வீ.
பெனிங்டதுரை யவர்களுயர் அதிகாரம்
பெருவாழ்வு பெற்று வாழ்க. (1)

680. சத்திரமா தியவறமும் குடிவகையும்
பலவளனும் தழைப்பச் செங்கோல்
உய்த்திரவிந் நாட்டகல ஆள்பெனிங்ட
னவர்கள்இனும் உயர்வுற் றென்றும்
புத்திரமித் திரகளத்தி ராதியொடும்
அதிகாரம் பொருந்தச் செய்யென்
றெத்தினமும் நித்தியனும் ஒருகடவுள்
அடிமலரை எண்ணு வோமே. (2)

681. மெற்றாசிற் சிக்டேரி யாயிருந்தும்
சிராப்பளியின் மேன்மை யாகப்
பெற்றுயுங் கலெக்டரென ஆகியுமவ்
விருசீமை பேணல் போலச்

---

679. திருநெல்வேலிக் கலெக்டராக இருந்த ஜே. வி. பென்னிங்டனைப் பாராட்டியவை இதுமுதல் மூன்று பாடல்கள்.
குயின் - ராணி (Queen.)
680. இரவு இந்நாட்டு அகல - இரத்தல் தொழில் இந்த நாட்டினின்றும் போக.
681. மெற்றாசு - சென்னை (Madras). சிக்டேரி - அரசாங்கக் காரியதரிசி (Secretary.)

சொற்றுயுந் தென்சிமை உயிர்புரக்கும்
பொன்னிங்ட துரையே உன்னைக்
குற்றுலங் தனிற்கண்ட குதுகலத்தை
எவராலுங் கூறொ ணுதே, (3)

பொன்னுசாமி செட்டியார்

[திருவாவடுதுறை ஆதீனத்தில் ராயசமாக இருந்தவர்.]

(வெண்பா)

682. தண்மையுறு சீர்பொன்னுச் சாமியன்ப கோமுத்தி
வண்மையுறும் அம்பல வாணப்போ்—ஒண்மையன்மீ
தன்போ டிசைத்த அரும்பாட் டுவகையினை
இன்போ டளித்த தெனக்கு. (1)

683. அன்னுன் அடைந்தோர்க் களிப்பதன்பேர் உற்றதென்றே
அன்னுன் அடைந்ததன்பேர் ஆர்ந்ததென்றே—அன்னுன்மேல்
நோட்டாம் இசைப்பா நுவன்றனைநின் போலனையான்
மாட்டா தரவுளர்யா வர். (2)

(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

684. வேட்டடைந்தோர் தமக்கருள்சுப் பிரமணிய
தேசிகனும் மேலோன் மேல்முன்
நோட்டளித்த மீனுட்சி சுந்தரமா
கவிவலனும் நுணுகிப் பல்கால்

---

682. ஒண்மையன் மீது - புகழ்பெற்றவன்மேல். பொன்னுசாமி செட்டியார் ஸ்ரீ அம்பலவாண தேசிகர் மீது இங்கிலீஷ் நோட்டு மெட்டில் கீர்த்தனம் பாடியபோது பாராட்டியவை, இதுமுதல் மூன்று பாடல்கள்.

684. அடைந்தோர்க்களிப்பது, ரூபாய்நோட்டு. அவன் அடைந்தது, பலருக்குப் பொருள் கடன் கொடுத்துப் பெறும் பிராமிசரி நோட்டாகிய முறி. (Promisory Note).

கேட்டுவக்கத் துறைசையிலம் பலவாண
தேசிகன்மேற் சிறந்தா னந்தப்
பாட்டினைநன் னலப்பொன்னுச் சாமியளித்
தான்பெருமை பகர்வார் யாரே. (3)

பொன்னுப் பிள்ளை

(கட்டளைக் கலித்துறை)

685. மருத மரத்து நிழலூடு வெள்ளை மணலிருப்பும்
பொருத மரப்பொன்னுப் பிள்ளைவெங் காவல் புரிந்துநற்றும்
விருதமர் அற்புத ஊற்றுட னும்நிதம் மேவப்பெற்றால்
கருத மரக்கண் அரமாத ரோடிருக் கையினையே.

மார்த்தாண்ட வர்மா

[இவர் திருவனந்தபுரத்தில் யுவராஜாவாக இருந்தவர்.]

(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

686. மாமேவும் இளமைமுதல் ஒருதடையுஞ்
சிறிதெனினும் மதித்த லின்றிக்
காமேவு பெருங்கல்வி ஞானமதை
வளர்க்குமொரு கடப்பா டுற்றுத்
தூமேவு பலநாடும் அடைந்தவனுள்
ளனவறியுந் துணிவு மேவித்
தேமேவு மார்த்தாண்ட வர்மமகி
பாலர்தஞ்சீர் செப்பொ ணாதே. (1)

மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் சுப்பிரமணிய தேசிகர்மேல், "துங்கஞ்சார் தருதுறை சையில்வளர் சுப்பிரமணிய தயாநிதியே" என்று தொடங்கும் இங்கிலீஷ் நோட் மெட்டில் அமைந்த இசைப்பாடலைப் பாடியுள்ளார்.

685. திருவாவடுதுறைக் காவிரியில் ஊற்றுப்போட்டுக் காவல்காக்கும் பொன்னுப்பிள்ளையைப் பற்றி, குமாரசாமித் தம்பிரான் விருப்பப்படி பாடியது.

பொருதமரம் - சண்டைபிடிக்கும் ஆரவாரத்தை யுடைய. கருதம் - கருதமாட்டோம். அரக்கண் அரமாதர் - அரம்போன்ற கண்ணையுடைய தேவலோகப் பெண்கள்.

686. யுவராஜா கும்பகோணத்துக்கு வந்தபோது பாடியவை, இது முதல் நான்குகவிகள். தேம் மேவும் - இனிமை மேவும்.

687. சார்ந்தவர்கள் தமைத்தாச ரதியெனவே
உயர்த்துபெருந் தகைமை யோடு
கூர்ந்தவரை நொடியேனும் பெரியோரைப்
பிரியாத குணமும் பின்னாள்
ஆர்ந்தநலத் தொடுசாரும் அரசாட்சிக்
கடிப்படையாம் அமைவும் ஆன
நேர்ந்தவிவை சேர்த்தாண்ட மார்த்தாண்ட
வர்மர்தஞ்சீர் நிகழ்த்தப் போமோ. (2)

688. பன்னரிய குணநிதியிம் மார்த்தாண்ட
வர்மமகி பாலர் என்னை
முன்னரிய கல்விவளர்த் திடவழைத்து
மகிழ்வளித்த முறையும் இந்நாள்
உன்னரிய விருப்பினொடும் எனதகத்துப்
போந்தவன்பின் உயர்வு தானும்
என்னரிய துணைவர்களும் யானுமறப்
பனவல்ல என்றும் மன்னே. (3)

(கட்டளைக் கலித்துறை)

689. தாவாத விண்ணுறும் மார்த்தாண்டன்
போலத் தரைமிசையே
மாவார் வளவஞ்சி மார்த்தாண்ட
வர்ம வரோதயரைப்
பாவாணர் போற்றவெந் நாளும்
விளங்குறப் பண்ணுகெனத்
தேவாதி தேவன் அடித்தா
மரைகளைச் சிந்திப்பனே. (4)

---

687. கூர்ந்த அரைநொடியேனும். சேர்த்து ஆண்ட - சேரச்செய்து மேற்கொண்ட.

689. மார்த்தாண்டன் - சூரியன்.

மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள்

[ஐயரவர்களின் தமிழாசிரியர்]

(எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

690. எண்ணிய பலவும் மாணவர்க் கன்பின்
ஈந்திடும் நிதிதமிழ் விளங்க
நண்ணிய புகழ்மீ னாட்சிசுந் தரநன்
னாவலன் நன்கினி தாய்ந்து
பண்ணிய வீதி விடங்கர்தம் ஆடற்
பனுவலைப் பதிப்பிக்க இயைந்த
புண்ணிய மதனை நினைதொறும் எனது
புந்திமிக் கின்புறு மாலோ. (1)

(கட்டளைக் கலித்துறை)

691. தேனாட்சி செய்கவி யால்நின் செயல்முற்றும் செப்புமுன்னே
மீனாட்சி சுந்தர வள்ளலை எங்கள் விழுப்பொருளை
வானாட்சி செய்யப் புரிந்தனை தென் னைமன் வடிவுகொடு
தானாட்சி செய்திரு வாரூர்த் தியாகசிந் தாமணியே. (2)

(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

692. சுத்தமலி துறைசையிற்சுப் பிரமணிய தேசிகமெய்த்
தூயோன் றன்பால்
வைத்தமலி தருமன்பின் வாழ்ந்தினிய செந்தமிழை
வளர்த்தென் போல்வார்க்
கத்தமலி நூல்கள்நவில் மீனாட்சி சுந்தரப்பேர்
அண்ணா லேநின்
புத்தமுத வாக்கினையும் அன்பினையும் மறவேனெப்
போதும் மன்னே. (3)

---

690. இந்த இரண்டு பாடல்களும் தியாகராசலீலைப் பதிப்பு முகவுரையில் உள்ளவை (வரு 1905.)

691. தேன் ஆட்சிசெய் - தேனின் சுவைநிரம்பிய. மன்வடிவுகொடு - அரசக் கோலம்கொண்டு. தான் ஆட்சிசெய். தியாக சிந்தாமணியே - தியாகப் பெருமானே.

692. மீ. பிள்ளை சரித்திரம், II, ப. 288. அத்தம் - பொருள்.

லேடி லாலி

(கட்டளைக் கலித்துறை)

693. சீரார் தருமத்துட் கல்வித்
தருமம் சிறந்ததென் றும்
பேரார் அவற்றுள்ளும் பெண்கல்வி
பேணல் பெரிதென் றுங்கொண்
டேராரிப் பெண்கல்விச் சாலைக்கன்
போடும் எழுந்தருளும்
பாரார் புகழ்லேடி லாலிக்குச்
செய்வதென் பார்த்திடினே. (1)

(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

694. மதியம் கண்ட வாரிதியும்
வானம் கண்ட வான்பயிரும்
நிதியம் கண்ட மனிதர்களும்
நிகராம் எனச்சொற் றிடலாமால்
அதிக வளமார் புகழ்ச்சென்னைக்
கமைந்த அரசின் இன்றுணையாய்
வதியும் லேடி லாலியின்நல்
வரவால் மகிழிச் சாலைக்கே. (2)

(வெண்பா)

695. சென்னைநகர் வாழ்ந்திலங்கும் சீர்லேடி லாலியெனும்
அன்னை மகிழ்ந்தின் றடைந்தமையால்—தன்னிகரிப்
பெண்பாட சாலை பெறும்புகழை என்றெந்தப்
பெண்பாட சாலை பெறும். (3)

---

693. சென்னைக் கவர்னராக இருந்த ஸர் லாலியின் மனைவியின் மேல் பாடியவை, இது முதல் மூன்று பாடல்கள்.

694. வானம் - மழை, சென்னைக்கு அமைந்த அரசு – சென்னைக் கவர்னர்.

695. தன் நிகர் இப் பெண் பாடசாலை – தன்னைத் தானே நிகரும் இந்தப் பெண் பாடசாலை.

வாணி விலாச சபை

[திருப்பாதிரிப்புலியூரில் இருந்த சபை.]

(கட்டளைக் கலித்துறை)

696. தோன்றாத் துணையென் றும் தோன் றுந்
துணையாய்த் துலங்கிவைகும்
வான்றாழ் திருப்பா திருப்புலி
யூரில் வளம்பலவும்
ஆன்றாரும் வாணி விலாச
சபையின்னும் அற்புதங்கள்
சான்றாங் கமைகென் றத் தோன்றாத்
துணைபதம் தாழ்குவனே.

விக்டோரியா மகாராணி

(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

697. குலம்படைத்து வரற்போற்றும் குணம்படைத்து
நிகரரிய குடும்பம் தாங்கும்
நலம்படைத்துப் புவிபுரக்கும் நயம்படைத்துப்
பகைவர்கள்உள் நடுங்கத் தாக்கும்
வலம்படைத்துத் தீர்க்காயு வலிபடைத்து
மந்திரிமார் மதிக்க ஆயும்
புலம்படைத்த விக்டோர்யா அவர்களைப்போற்
புகழ்படைத்தார் புவியில் யாரே. (1)

---

696. தோன்றாத் துணை யீசர் என்பது திருப்பாதிரிப் புலியூரில் கோயில் கொண்டிருக்கும் சிவபெருமான் திருநாமம். வான் தாழ் - தேவர்கள் வணங்குகின்ற. ஆன்று ஆரும் - அமைந்து விளங்கும். சான்று - நிரம்பி.

697. இது முதல் ஐந்து பாடல்களும் விக்டோரியா மகாராணியின் ஆட்சியின் அறுபதாண்டு நிறைவு விழா (மணி விழா), கரூரில் நடந்தபோது படிக்க வேண்டுமென்று அவ்வூர் முன்சீப் ஏ. சாம்பமூர்த்தி சாஸ்திரிகள் கேட்டுக் கொண்டபடி பாடி அனுப்பப் பெற்றவை; ஜூலை, 1897.

வரன் - கணவன். நயம் - நீதி. வலம் - பலம். புலம் - அறிவு.

698. மேற்கொண்ட காரியங்கள் எல்லாம்நன்
முடிவெய்தும் வீறு வாய்ந்து
பாற்கொண்ட தேயவகை பலவுமனம்
களித்திடவே பரித்தெஞ் ஞான்றும்
சூற்கொண்ட மேகமென எவர்க்குமருள்
சுரந்தளித்துத் தூய தாஞ்செங்
கோற்கொண்ட விக்டோர்யா அவர்கள்பெருந்
தகையெம்மாற் கூறற் பாற்றோ. (2)

699. அற்றூர்க்கு நிதியனைய விக்டோர்யா அவர்களர
சாட்சிக் காலத்
துற்றூர்கள் நலம்பலவும் உற்றூர்கள் பெருஞ்செல்வம்
உற்றூர் நீதி
பெற்றூர்கள் அதிகாரம் பெற்றூர்கள் பலவகையாப்
பெருகும் கல்வி
கற்றூரவ் வழிநடக்கக் கற்றூர்கள் இவர்க்குநிகர்
கரைவார் யாரே. (3)

700. பூமேவு சததளச்செந் தாமரைமா தென்றெடுத்துப்
புகல்வேங் கொல்லோ
நாமேவு பலகலைக்கும் நாயகியார் என்றெடுத்து
நவில்வேங் கொல்லோ
தேமேவு சயமாதென் பேங்கொல்புகழ் மாதென்று
செப்பு வேங்கொல்
மாமேவு நயசுகுண விக்டோர்யா அவர்களையாம்
வகுக்குங் காலே. (4)

701. எக்காலத் திலும்இதமே புரிந்தகண்ட மண்டலங்கள்
எவையும் காக்கும்
மிக்காரா கியநமது விக்டோர்யா அவர்கள்செங்கோல்
மேன்மை தன்னை

---

698. பரித்து - தாங்கி.

699. கரைவார் - சொல்வார்.

700. சததளம் - நூறு இதழ். தாமரையின் மாது - திருமகள்.
சயமாது - கொற்றவை.

இக்காலத் தறியாதார் எவரதனை யாமேயோ
இசைக்க வல்லோம் [புகழ்
தக்கார்சொல் அவர்க்குநலம் தழைத்தோங்கக் கடவுள்
சாற்று வோமே. (5)

வேங்கட சுப்பையர்

[ஐயரவர்களுடைய தந்தையார்.]

(தரவு கொச்சகக்கலிப்பா)

702. மெய்யார நீறணிந்து விழிமணிமா லிகைபூண்டு
கையார மலரேந்திக் கசிந்துருகித் தினந்தோறும்
மையாரும் மணிமிடற்று மாதேவை அருச்சிக்கும்
ஐயாவென் ஐயாவென் ஐயாவெங் ககன்றனையே. (1)

703. விண்ணாறு தலைமடுத்த வேதியன்பால் அன்பினொடு
கண்ணாறு புனல்பெருகக் கசிந்துருகித் துதிகள்பல
பண்ணாறும் படிநவிலும் பயன்படைத்தோய் எனதுமனப்
புண்ணாறும் படியொருகாற் புகுந்துமுகம் காட்டாயோ.

704. விளங்குறுநின் உடனிருத்தல்
வீட்டின்பம் என்றிருந்தேன்
களங்குறுமற் றெனைத்துறத்தல்
காணஃதென் றகன்றனையால்
அளங்குறுமென் றுரும்பானேன்
அல்லலெவர் அறிந்திடுவார்
துளங்குறுநல் ஒழுக்கமுடைச்
சுகுணகரு ணாநிதியே. (3)

---

702. ஐயரவர்கள் தந்தையார் 7-10-1893- இல் இறைவன் திருவடியை அடைந்த போது பாடியவை, இது முதல் பத்துப்பாடல்கள்.

விழிமணி மாலிகை - ருத்திராட்ச மாலை.

703. விண்ணாறு – கங்கை. வேதியன் – சிவபிரான். பண் நாறும் படி - இராகம் விளங்கும்படி.

704. அஃது - வீட்டின்பம். அளங்குறும் - அலங்குறும்; சலிக்கும்.

705. பற்றலெங்கே செந்தமிழைப் பற்றிக்கற் றோர்பலர்பால்
துற்றலெங்கே மீனாட்சி சுந்தரநல் லாரியன்பால்
கற்றலெங்கே கற்றுக் கவலையொரீஇ அவ்வழியில்
நிற்றலெங்கே இன்றுவரை நீயருள்செய் யாவிடினே. (4)

706. நின்கடமை எல்லாம் நினைந்தியற்றி நீபிரிந்தாய்
என்கடமை ஒன்றும் இயற்றா திருந்தொழிந்தேன்
வன்கண்ணர் என்போல்வார் மற்றெவரே மாதேவன்
தன்கமல பாதந் தலைக்கொள்ளும் சாம்பவனே. (5)

707. அத்தா நினதுபிரி வல்லற் கடலழுத்திப்
பித்தாக்கி என்னைப் பெரிதும் வருத்துறுமால்
எத்தானஞ் சென்றாய் இதுவோநின் தண்ணளியே
சத்தான இன்பமுறு சங்கீத சாகரமே. (6)

708. ஒன்றும் அறியேற் குணர்த்தவும்நீ நல்லொழுக்கில்
நின்றும் அறியேன் நினைக்கண்டும் ஐம்புலன்கள்
வென்றும் அறியேனிவ் வீணைமற் றார்புரப்பார்
என்றும்மறி ஏற்ற இறைவனடிக் கன்புடையாய். (7)

709. அன்போடு சிவபூசை ஆற்றும் இடத்தொடுநீ
இன்போடு பாடி இருக்குமிட முந்தமியேன்
துன்போடும் படிவார்த்தை சொல்லுமிடந் தானுமந்தோ
என்போடும் உள்ளுருக என்னை வருத்துறுமால். (8)

710. தந்தாய் தனுவாதி தந்தாய் அருள்புரிய
வந்தாய் எனைத்தனியே வைத்தகன்றாய் நாயேனை
நொந்தாய் எனவருளின் நோக்குபவ ராரெனது
சிந்தா குலமகலச் செய்தருளல் உன்கடனே. (9)

---

705. துற்றல் - கல்வியை நுகர்தல். ஆரியன் - ஆசிரியன். ஒரீஇ - நீங்கி.

706. சாம்பவன் - சிவபக்தர்.

707. தானம் - இடம். சத்தான - நிலையான.

708. மறி - மான் கன்று.

710. தந்தாய் - தந்தையே. தனு - உடல். சிந்தாகுலம் - கவலை,

(வெண்பா)

711. பூதியொடும் அக்கமணி பூண்டஞ் செழுத்தெண்ணி
ஆதிதனைப் பூசித் தடியேனைப்—பாதுகாத்
தீண்டுற்றாய் யாங்களிடர் எய்தப் பிதாமகனே,
யாண்டுற்றாய் சொல்வாய் இனி. (10)

வேங்கட ரமண வைத்திய சாலை

(ஆசிரியப்பா)

712. பொன்னாட் டினுமிளிர் தென்னாட் டுளபல
நன்னாட் டினுக்கும் முன்னாட் டியவொரு
தலைநகர் ஆகி நிலைபெறீஇ எவற்றினும்
தன்னைநேர் இல்லாச் சென்னைமா நகரில்
கற்பகாம் பிகையொடு கபாலிவாழ் இடமாய்
ஊனசம் பந்தம் ஒழித்தருள் பெருமை
ஞானசம் பந்தர் நவில்பதி கத்தால்
என்புகள் உயிர்பெற் றெழுமாண் புடைத்தாய்
நேசமார் தருமருந் தீசனார் வான்மியூர்
பாங்கரிற் பெற்ற பயனுடைத் தாகி
வாயிலா ரொடுதிரு வள்ளுவர் முதலாம்
பெரியவர் பலர்க்கும் உரிய இடமாய்
கயிலைநேர் தூய மயிலைமா நகரில்
உத்தம குணத்தினன் உலப்பிலாக் கொடையன்
வித்தகர் போற்றுறு விப்பிர சிகாமணி
பற்பல அறங்கள் பண்ணிய இயல்பினன்

---

711. ஐயரவர்கள் குமாரர் கலியாண சுந்தரையர் சொன்னதாக இயற்றிய பாடல் இது.

பூதி – திருநீறு. அக்க மணி – ருத்திராட்ச மணி.

712. இந்த வைத்தியசாலையின் மேலறைகளை ஸர் எஸ். சுப்பிரமணிய ஐயரவர்கள் திறந்துவைத்தபோது பாடியது.

1. பொன்னாடு – தேவலோகம். 9. மருந்தீசனார்: திருவான்மியூர்ச் சிவபெருமான். வாயிலார் – வாயிலார் நாயனார்.

தோமிலாக் கிருஷ்ண சாமி வரோதயன்
தந்தை பெயரால் தாபித்து வெம்பிணித்
தீங்கட அமைத்த வேங்கட ரமண
தரும வைத்திய சாலையிற் கற்கும்
மாணாக்கர் சிறிதும் வருத்தம் இலாமல்
தங்கியே பயிலத் தக்கநல் லிடங்கள்
ஆக்குவித் துதவினன் அவன்யார் என்னின்
பிறர்க்குப கரித்தலை பேணிய உளத்தன்
அடுத்தோர் மிடியைக் கெடுத்தா தரிப்போன்
முயற்சி திருவினை ஆக்குமென் பதனுக்
கிலக்கிய மாக இயங்குறு பெரியோன்
எய்ப்பிடை வைப்பாய் ஏழையர் தமக்குத்
தனதா னியங்களைத் தந்தா தரிப்போன்
மேதா வியர்நவில் இராதா கிருஷ்ண
விப்பிர குலோத்தமன் ஒப்பிலாச் சுகுணன்
இயம்பிய அறங்களை இனிதுபா ராட்டிச்
சிறந்தவவ் விடத்தைத் திறந்தளித் தனன்அப்
பெரியன்யார் என்னிற் பிறங்குநீர் வையைத்
தென்ம துரைப்பதி திகழ்தரத் தோன்றிய
தன்ம துரையெனும் சற்குண மேரு
வேதியர் குலமணி விபுதர்சிந் தாமணி
நீதியர் சிகாமணி நிறைபொறை நிறைமணி
வடமொழி தென்மொழி வாணரா தியர்செந்
நாவிலும் பாவிலும் நடிக்கும் புகழ்மணி
ஆதுலர்க் கிருநிதி அறத்தின் வேலி
ஈசன் அடியே இரும்பவப் புணையென
எண்ணியே ஒழுகும் புண்ணியன் உலகிற்
கணியெனுஞ் சுப்பிர மணியமா மணியே.

---

17. தோம் - குற்றம். கிருஷ்ணசாமி வரோதயன் - வீ. கிருஷ்ண சாமி ஐயர். 19. தீங்கு அட. 25. மிடியை - வறுமையை.

37. விபுதர் - தேவர்களுக்குரிய. 41. ஆதுலர் - இரவலர். 42. பவப் புணை - பிறவிக்கடலுக்குத் தோணி.

வேங்கடேசுரெட்டுப் பாண்டியர்

[எட்டையபுரத்து மன்னர்.]

(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

713. மாமேவு கடிகைமுத்துப் புலவர்முத லாயதமிழ்
வாணர்க் காத்தோர்
பாமேவு குலம்விளக்கும் புகழ்வேங்கடேசுரெட்டுப்
பாண்டி யாவின்
தேமேவு தமிழ்ச்சுவைதேர் அரசேசிந் தாமணியின்
சிறப்பெ லாந்தேர்ந்
தேமேவு புலவர்மதித் திடநவிலும் செல்வாவொன்
றிசைப்பக் கேண்மோ. (1)

714. மிக்கஅன்பி னொடுவிடுத்த கடிதமுஞ்செந்
தமிழ்க்கொடியின் மெலிவு தீர்க்கத்
தக்ககொள்கொம் பாம்நிதியும் வாழிவேங்க
டேசுரெட்டுத் தரப்பெற் றேனால்
எக்கலைவா ணரும்புகழ இளசைநகர்
வாழ்தலைவா இந்த நன்றிக்
கொக்கவொரு நன்றியும்மற் றிலையென்ப
துண்மைமிகை யுரையேன் மன்னே. (2)

715. உகாவளமார் இளசைநகர் வளருமொரு
மன்னர்பிரான் ஒபபி லாத
மகாசமுகந் தனிலெனது நன்றியறி
வினைஒருகால் வகுக்கென் றுற்றோர்

---

713. இது முதல் மூன்று பாடல்கள் 18-3-1908 அன்று எட்டைய புரம் ஜமீன்தாருக்கு எழுதியவை.

சிந்தாமணி - சீவக சிந்தாமணி.

714. இளசை நகர் - எட்டையபுரம்.

உகாவிதங்காத் திடுமறிஞர் சிகாமணியாம்
நினையிரப்பல் உணர்வான் மிக்கோர்
குகாவெனப்போற் றிடத்தமிழ்நூல் இன்சுவைகூட்
டுணுஞ்சிறந்த குணக்கோ மானே. (3)

வேத நாயகம் பிள்ளை

[இவர் மாயூரத்தில் முன்சிபாக இருந்தவர்.]

(எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

716. தாயக மெனநன் னுவலர் பலர்க்கும்
தனமுதல் அளித்தியல் வேத
நாயக மகிபா நீயகம் மகிழ்ந்து
நன்கனுப் பியமுதற் பாவை
ஆயக மதில்வாழ் சுப்பிர மணிய
ஆரியன் பாலுடன் உரைத்தேன்
நோயகல் எவர்க்கும் நின்பெருஞ் சீரை
நுவன்றனன் நுவலரும் புகழோய். (1)

(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

717. வாய்ந்தசுவை பழுத்தகவி மழைபொழியும்
பசுமுகிலே வழுத்த யாரும்
ஏய்ந்தநடு நிலைமையினின் றொருகாலும்
தவறாத இயல்பு மேயோய்
வேய்ந்தபுகழ் மிகுவேத நாயகசிந்
தாமணியாம் விரும்பி நின்னை
ஆய்ந்தமகிழ் வொடுங்கண்டு மொழியாடி
நாட்கள்பல ஆன அன்றே. (2)

---

715. உகா – அழியாத. வருக்க என்று நினை இரப்பல். இது வேறு ஒருவருக்கு எழுதி, அவரைத் தமக்காக எட்டையபுரத்து ஜமீன்தாரிடம் நன்றி கூறும்படி அறிவித்தது.

716. முதற்பா – வெண்பா. ஆய் அகமதில் - ஆராயும் உள்ளத்தில்.

717. இது முதல் இரண்டு பாடல்கள், திருவாவடுதுறை யாதீனத்தில் 16–ஆம் பட்டத்து ஞானசிரியராக எழுந்தருளியிருந்த ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகரவர்கள் எழுதியனவாக இயற்றியவை.

சிந்தாமணி: விளி. யாம் விரும்பிக் கண்டு பல நாட்கள் ஆன.

718. ஆதலால் நீயிவண்வந் தளவளவ
யாம்மிகவும் அருத்தி உள்ளோம்
காதலால் நினைக்கினர்சுப் பிரமணிய
முனிவரன்றுன் காண வேண்டிப்
போதலால் அவன்இயம்பும் பொருள்முடித்திங்
கனுப்பும்வகை புகலு கின்றோம்
ஈதலால் இப்பொழுது விரைந்தாக
வேண்டியதொன் றில்லை மன்னே. (3)

தொட்டிக்கலை வேதாசல முதலியார்

[இவர் தொட்டிக்கலைச் சுப்பிரமணிய முனிவரை ஆதரித்த குடும்பத்தில் பிறந்தவர்.]

719. தவஞான மிகுதுறைசைச் சிவஞானப்
பெயர்கொளுமா தவன்றற் சார்ந்தோர்
அவஞான மகற்றுகச்சி யப்பமுனி
வரனாதி ஆன்றோர் தம்மைப்
பவஞான மறுமன்பிற் பாலனஞ்செய்
தருந்தமிழ்நூல் பலசெய் வித்தோர்
நவஞான மரபினன்வே தாசலமால்
தணந்ததுயர் நவிலற் பாற்றே. (1)

720. குலப்பெருமை உடையன்மிகு குணப்பெருமை
உடையனின்சொற் கூறி ஈயும்
நலப்பெருமை உடையனிசை நயப்பெருமை
உடையனல்யாழ் நவிற்றும் இன்ப

---

718. அருத்தி - விருப்பம். சுப்பிரமணிய முனிவரன் - சுப்பிரமணியத் தம்பிரான்.

719. முதலியார் மறைந்த போது பாடிய இரங்கற்பாக்கள், இது முதல் வரும் நான்கு செய்யுட்கள் (19-1-1907.)

தணந்த - பிரிந்த; இறந்த.

720. நவிற்றும் - வாசிக்கும்.

வலப்பெருமை யொடுபல்லோர் வருபெருமை
உடையனய வாதஞ் செய்யும்
புலப்பெருமை உடையனம்வே தாசலமால்
இவணீத்துப் போன தென்னே. (2)

721. நல்லோர்கள் மிகவருந்த நட்புடையோர்
மிகவருந்த நவில்சுற் றத்தார்
எல்லோரும் மிகவருந்த எழிற்புதல்வர்
மிகவருந்த இசையாழ் வல்ல
பல்லோரும் மிகவருந்தப் பல்லாரி
நகர்வருந்தப் பயின்ற கேள்வி
வல்லோன்வே தாசலமால் மண்பிரிந்து
விண்புரிந்த வகையென் னேயோ. (3)

722. தேமேவு பொழிற்கலைசைச் சிவகாமி
இடந்தழுவு சிதம்ப ரேசா
தாமேவு நினதுதிரு விளையாட்டு
முறையினைநா டொறும்பூ சித்தோன்
காமேவு பூவரங்க நாதமுகில்
மைத்துனனின் கமலத் தாள்சேர்
பூமேவு புகழ்வேதா சலன்புதல்வர்
ஆதியரைப் புரந்தாள் வாயே. (4)

வைத்திய லிங்க தேசிகர்

[இவர் திருவாவடுதுறை யாதீனத்தில் 19-ஆம் பட்டத்தில் எழுந்தருளி யிருந்த ஞானசிரியர்.]

(வெண்பா)

723. நீதி அளிக்கும் நிதியளிக்கும் அன்பர்க்குப்
பூதி அளிக்கும் புவியளிக்கும்—மேதினிசொல்
மாசிகந்த கோமுத்தி வாழும் வயித்யலிங்கத்
தேசிகப்பேர் கொள்ளும் சிவம். (1)

722. கலைசை - தொட்டிக்கலை, திருவிளையாட்டு முறை - திருவிளையாடற் புராணம்; முறை - நூல். பூ அரங்கநாதமுகில் - பூ. அரங்கநாத முதலியார்; பூண்டி அரங்கநாத முதலியார்.

723. பூதி - திருநீறு, கோமுத்தி - திருவாவடுதுறை. இப் பாடல் பாடிய தேதி : 14-2-1927.

724. வடமொழியுந் தென்மொழியும் வல்லோர்க்கெஞ் ஞான்றும்
திடமொழியா வண்ணமருள் செய்யும்—இடமின்றி
வந்தாரைக் காக்கும் வயித்யலிங்க தேசிகப்பேர்ச்
சிந்தா மணிதான் தினம். (2)

725. எற்பணிகொள் ஈசனுக் கெப்பணியும் கற்பணியும்
பொற்பணியும் அன்பிற் புரிந்துமிக—அற்புறுமே
மாசிகந்தோர் வாழ்துறைசை வள்ளல் வயித்யலிங்க
தேசிகர்கோன் நாளும் சிறந்து. (3)

(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

726. மண்படைத்த பயனாகி வளர்துறைசை மடாலயத்து
வாழ்வாய் ஓங்கித்
திண்படைத்த வயித்யலிங்க தேசிகோத் தமன்செய்யும்
சிறப்பைக் கண்டோர்
கண்படைத்த பயன்படைத்தேம் என்றுகளி படைத்தனரால்
கவினும் அன்னோன்
பண்படைத்த தவவொழுக்கம் சிவபக்தி நீடாயுள்
பழுத்து வாழி. (4)

(எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

727. தேர்வளர் வீதித் துறைசையா தீனம்
செழிக்கவீற் றிருந்தருந் தமிழோ
டேர்வளர் சைவம் ஆலயப் பணிகள்
இனும்பல தழைத்திடச் செய்தே
சீர்வளர் புகழ்சால் வைத்திய லிங்க
தேசிகன் சுப்பிர மணியப்
பேர்வளர் குருவின் திருவருள் படைத்த
பெரியன்மிக் கோங்குக மாதோ. (5)

---

724. பாடிய தேதி : 24–2–1927. செய்யும், காக்கும்: முற்று.
725. எற்பு அணிகொள் - என்பை ஆபரணமாகக் கொண்ட.
727. சுப்பிரமணியப் பேர் வளர் குரு - 18-ஆம் பட்டத்தில் விளங்கிய சுப்பிரமணிய தேசிகர்.

(கட்டளைக் கலித்துறை)

728. படிதாங்கு சேடனும் கூறற் கருநின் றன் பாக்கியத்தை
மிடிதாங்கு சிற்றடி யேனோ அறிந்து விளம்புவனின்
அடிதாங்கி வாழ அருள்புரி கோமுத்தி யாந்தலத்தெம்
குடிதாங்கி வாழும் வைத்திய லிங்க குருமணியே. (6)

வைத்தியலிங்கம் பிள்ளை

[இவர் சென்னை மாகாண அஞ்சல் தலைவராக இருந்தவர்.]

(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

729. தேம்பழுத்த குணமுடையாய் திறல்பழுத்த
அறிவுடையாய் சேர்ந்தோர்ச் சார்ந்த
தோம்பழுத்த வறுமையெனுங் கொடும் பிணியை
அடியோடுந் தொலைத்த லானே
நாம்பழுத்த கவலையெனும் அரும்பிணியைச்
சிறிதுமின்றி நலித லானே
ஏம்பழுத்த பெரியர்வைத் தியலிங்கம்
எனும்பெயர்நிற் கியம்பி னரால்.

லார்டு ஹாவ்லக் துரை

(எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

730. பெருத்தபல வகைப்பயனும் யாமடையும் வண்ணம்
பேணுசக்ர வர்த்தினியாம் விக்டோர்யா வுடைய
உருத்தகைய ப்ரதிநிதியாய்க் குணநிதியாய் மேன்மை
உற்றதயா நிதியாகி ஆராய்ந்தா ராய்ந்தே
திருத்தமுற எவற்றினையும் காலமதில் விரைந்தே
செய்துநலம் எய்திமிளிர் ஹாவ்லக்கு ப்ரபுவிற்
கொருத்தருநேர் இலையெனவாழ் நாளையருள் புரிகென்
றோங்குமுழு முதற்கடவுள் அடிகளையேத் துவமே.

728. மகா வித்துவான் பிள்ளையவர்களுடைய கொள்ளுப் பேரர் ஸ்ரீ மீனாட்சி சுந்தரம் பிள்ளை பாடியதாகப் பாடி அளித்தது. (மீ. சரித்திரம், II. ப. 264.) படி - பூமி. மிடி - வறுமை.

730. சென்னைக் கவர்னராக இருந்த இவர் 19—8—1898 அன்று கும்பகோணம் கல்லூரிக்கு வந்தபோது பாடியது.

சிறப்புப் பாயிரங்கள்

அவிநாசி, கருணாம்பிகை சதகம்

(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

731. பாமேவு வள்ளைகுமிழ் செவிநாசி அவிநாசி
பதியாப் பெற்ற
ஓமேவு பொருட்கருணாம் பிகைசதகத் தினையச்சிட்
டுதவென் றுண்மை
நாமேவ நிறுப்பண்ணுங் கறுப்பண்ண மால்விழைந்து
நவில அங்ஙன்
மாமேவச் செய்வித்துச் சபாபதிப்பேர்க் கவிஞனன்பின்
வழங்கி னானால்.

இங்கித மாலை உரை

732. சீர்பூத்த மதிவேணிப் பரனுயர்வும் மெய்யடியார்
சிறப்பி னோடு
தேர்பூத்த தமிழ்மறைகள் முதலாய பலவற்றின்
சிறப்புந் தேர்ந்தே
நார்பூத்த மன்கசிந்து தினந்தோறும் பலதுதிகள்
நவின்றோ னைய
ஆர்பூத்த கவிஞர்பிரான் இராமலிங்க வள்ளலின்சீர்
அறியா ராரே. (1)

733. அனையனவில் பலநூலுள் இங்கிதமா லையினுட்பம்
அறிதல் யார்க்கும்
நினையவரி தாதலினிச் சித்தோத அதற்கொருரை
நிகழ்த்தி னானால்

731. வள்ளை செவி, குமிழ் நாசி, அவிநாசி பதி ஆகப் பெற்ற ஓம் மேவு பொருள் - பிரணவத்தின் பொருள்.

732. இராமலிங்க சுவாமிகள் இயற்றிய இங்கித மாலைக்கு உரை செய்தவர் காஞ்சிபுரம் இராமானந்த சுவாமிகள்.

தனையனைய சுவைத்தமிழ்நூல் பலபயின்ற நயசுகுணன்
தளரா நாவோன்
புனையமிளிர் திருக்காஞ்சி இராமசா மிக்குரிசில்
புலமிக் கோனே. (2)

கந்தபுராணக் கீர்த்தனைப் பதிப்பு

(வெண்பா)

734. வான்றோய்சீர் வையை மருங்கார் பெருங்கரைவாழ்
சான்றோன் கவிகுஞ் சரமறையோர்—கோன்றான்செய்
நந்தாத கந்தபுரா ணக்கீர்த் தனைபதித்துத்
தந்தான்கோ டீச்சரவேந் தல்.

கலாவதி

735. பலாவதிகாத் தென்முகவைப் பாற்கரபூ பற்கே
கலாவதியைச் செய்தளித்தான் கற்றோர்—சுலாமதுரைச்
சூரிய நாரா யணசூரி தொன்னூல்தேர்
கூரியன் ஆ ராய்ந்து குறித்து.

குருவாசகக் கோவை

736. சுகவான் அருட்டவத்துச் சோதி ரமண
பகவா னருளாற் பகர்ந்தான்—திகழ்நயமார்
கருவா சகற்றுமியற் கண்ண முருகன்
குருவா சகக்கோவை கோத்து. (1)

---

734. பாடிய தேதி: 9-10-1914. கவிகுஞ்சரபாரதி இயற்றியது கந்த புராணக் கீர்த்தனை. அதைப் பதிப்பித்தவர் கோடீச்சுவரையர்.

735. வி. கோ. சூரிய நாராயண சாஸ்திரியார் கலாவதி என்னும் நாடகம் எழுதிப் பாஸ்கர சேதுபதிக்குச் சமர்ப்பணம் செய்தார்.

736. இந்நூல் பாரத்துவாசி முகவைக் கண்ண முருகனார் இயற்றியது. இந்தச் சிறப்புப் பாயிரம் அச்சிடப்படவில்லை.

737. குருவா சகக்கோவை கூறினனால் அன்பின்
திருவாச காதியுரை சீலன்—மருவாரம்
வண்ணமணிக் கோவையொளி மாழ்குமென மாமுகவைக்
கண்ணமுரு கப்பெரியோன் கண்டு. (2)

கைவல்ய நவநீத உரை

738. வல்லவரேத் துந்தமிழ்க்கை வல்லியநூற் கன்பினுடன்
நல்லவுரை ஒன்றியற்றி நல்கினனால்—மல்லல்
திருவேங் கடாசலமால் சேருளத்தன் ஆம்பூர்
வருவேங்க டாசலச்செம் மல்.

கொங்குமண்டல சதகப் பதிப்பு

(எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

739. பூமலி புலவர் பிறர்க்குவந் தளிக்கும்
புண்ணியச் சரிதத்தால் ஆய
தூமலி பயனை நன்குதேர்ந் தெங்கும்
துருவியே பலபட ஆய்ந்து
பாமலி கொங்கு மண்டல சதகப்
பனுவலைப் பதிப்பித்தீந் தனனால்
தேமலி முத்துச் சாமிப்பேர்ப் புலவன்
திருச்செங்கோட் டுறைதவத் தினனே.

சாக்கை உமையம்பிகை பிள்ளைத்தமிழ்

(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

740. கூறும்வழு தியும்பாராட் டிலனிவ்வா றென்றளகை
குடிகொள் செல்வி
ஊறுமுளத் துவகையுறச் சொற்பொருள்கற் பனையணியோ
டுவப்பில் பத்தி

---

739. 'விவேக திவாகரன்' பத்திராதிபர் தி. அ. முத்துசாமிக்கோனார், 1923, ஏப்ரலில் இந்நூலை அச்சிட்டார்.

740. அளகை - சாக்கை. நூல் அச்சிட்ட காலம் : ஜனவரி, 1874.

ஏறுசுவை மிகப்பிள்ளைத் தமிழியற்றி நல்கினன்பேர்க்
கியைய என்றும்
நாறுபுகழ்ச் சிரகிரிவாழ் தியாகரா சப்பெயர்நன்
னுவ லோனே.

சாவித்திரி வெண்பா

741. மாமேவு கற்பினர்சி காமணியாய் ஒப்பின்றி
வயங்கும் மேன்மைப்
பூமேவு புகழ்சாவித் திரிசரிதம் வெண்பாவாற்
புகன்றிட் டானால்
பாமேவு நயமிகுந்த தியாகரா சக்கவிஞன்
பாற்கற் றென்றும்
தூமேவு நடையுடைய சாமிநா தப்பெயர்கொள்
சுகுணன் மாதோ.

சித்த மான்மியம்

(வெண்பா)

742. தேர்ச்சித் தகைஞான சித்தன்சீர் ஆயகுரு
கூர்ச்சித்த மான்மியமொன் றேறினனூர்த்—தார்ச்சித்தன்
தென்மயிலைச் சண்முகப்பேர்ச் செம்மலெனக் கேட்டடைந்த
என்மகிழ்வுக் கெல்லையுண்டோ இன்று.

சிவகாசி மான்மியம்

(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

743. அன்புமிகும் அடியவரை ஆண்டருள்வான் அகலக்கண்
அம்மை யோடு
வன்புமிகும் அகிலேசன் இனிதுறையும் சிவகாசி
மான்மி யத்தை

---

741. ஆசிரியர் : ஐ. சாமிநாத முதலியார். வெளியான காலம்: 1901. தியாகராசக் கவிஞன் - தியாகராச செட்டியார்.

742. ஆர்ச்சித்தன் - ஆத்தி மாலையை அணிந்த சித்தனாகிய சிவபிரானுக்குரிய; இது மயிலைக்கு அடை. மயிலைச் சண்முகம் பிள்ளை பாடிய நூல் இது.

743. நூல் பாடியவர் : மு. ரா. அருணாசலக் கவிராயர்.

இன்புமிகுந் தெவருமினி துணர்ந்துவப்பத் தென்மொழியால்
இயம்பென் றேற்போர்
துன்புமிகு மிடியகற்றும் ஒருசின்னக் குட்டியெனுந்
தோன்றல் கேட்ப. (1)

744. வாய்ந்தவளத் துறைசையிற்சுப் பிரமணிய குருமணிகண்
மணியாய் வாழும்
ஏய்ந்தபுகழ் மிகுநமச்சி வாயதே சிகமணியி
னிடத்துப் பன்னூல்
ஆய்ந்தினிது கற்றுணர்ந்தோன் இராமசா மிக்கவிஞன்
அளித்த மைந்தன்
வேய்ந்தவளச் சேறையருணாசலப்பேர்க் கவிஞனங்ஙன்
விளம்பி னனே. (2)

சுப்பிரமணிய தேசிகர் பாமாலை

(கட்டளைக் கலித்துறை)

745. வற்றா அருட்சுப் பிரமணி யப்பெயர் வள்ளல்மலர்ப்
பொற்றாட் புகழைப்பல் பாமாலை யாகப் புனைந்தழகாச்
சொற்றான் இயற்சந் திரசே கரபண் டிதசுகுணன்
சற்றாய் பவர்களும் முற்று மகிழ்வு தலைக்கொளவே.

சுப்பிரமணிய தேசிகர் மும்மணிக் கோவை

(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

746. தேனூட்டு மலர்ப்பொழிற்கோ முத்தியிற்சுப் பிரமணிய
தேவன் என்னைத்
தானூட்ட இருபொருளும் ஒருங்கருள்த யாநிதியின்
சலசத் தாள்மேல்

---

744. நமசிவாய தேசிகர் : இவர் சின்னப்பட்டத்தில் இருந்தவர்.

745. சந்திரசேகர கவிராஜ பண்டிதர் திருவாவடுதுறை ஆதீனத்துக்கு வந்திருந்தபோது சுப்பிரமணிய தேசிகர்மீது ஒரு நான்மணிமாலையையும் வேறு பல பாடல்களையும் பாடினர். அவர் தனிப் பாடல் திரட்டை முதல் முதலில் அச்சிட்டவர். இது பாடிய காலம், ஆகஸ்டு, 1876.

746. பரமசிவத் தம்பிரான், தருமபுர ஆதீனத்து அடியவர். அவர்

வாஞட் டின் அமுதேய்ப்ப மும்மணிக்கோ வையைநவிற்றி
வனைந்தான் யாரும்
மேனட்டு நயசுகுணப் பரமசிவ முனிவரவித்
துவசிங் கேறே.

செந்தமிழ்ச் சிறப்பு

747. பாவாணர் பெருமையுஞ்செந் தமிழ்ச்சிறப்பும் இம்மொழியைப்
பாலிப் போர்தம்
ஓவாத பெருமையும்நன் கிலங்குறச்செந் தமிழ்ச்சிறப்பென்
றொருநூல் செய்தான்
தாவாத ஆங்கிலமும் தமிழ்மொழியும் தகவுணர்ந்தோன்
சம்பு வின்சீர்
நாவாரப் புனைந்திடுசுந் தரராச மறையவனன்
னலமிக் கோனே. (1)

(வெண்பா)

748. கருத்தை விரைந்து கவியாகச் சற்றும்
வருத்தமின்றிச் செய்யாற்றல் வாய்ந்த— திருத்தகுசீர்ச்
சுந்தர ராசச் சுகுணமறை யோனிந்நூல்
தந்ததிலுண் டாம்வியப்பென் றன். (2)

ஞான சித்த சம்பு

(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

749. மாமேவு திருக்குருகூர் வந்துதித்த ஞானசித்த
வள்ளல் செய்கை
பூமேவு மன்பதைகள் அறிந்துவப்பச் சம்புவொன்று
புகன்றிட் டானல்

திருவாவடுதுறையில் பல காலம் தங்கியிருந்தார். அவர் பாடியது இந்த நூல். (என் சரித்திரம், ப. 599.)

747. பாடியவர்: சுந்தர ராஜையர். இக்கவி பாடிய தேதி, 31-5-1917

749. ஆசிரியர்: பொ. இராகவாசாரியார்.

காமேவு சிரகிரிநம் மீனாட்சி சுந்தரமா
கவிஞன் பாற்கற்
றேமேவு நலம்படைத்த இராகவா சாரியெனும்
இசைமிக் கோனே.

ஞான ரத்தினாவளி

(வெண்பா)

750. துன்னுபுகழ்ப் பாண்டித் துரைவேள் தமிழ்ச்சங்கத்
தின்னுமுறை என்னஅரங் கேற்றினனால்—மன்னுவள
மானநெல்லைப் பால்வண்ண வண்ணலன்பிற் சித்தாந்த
ஞானரத்தி னாவளியை நன்கு.

தணிகைப் புராணப் பதிப்பு

(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

751. பூமேவு கோமுத்தி யாதினத் திடைக்கவிஞர்
போற்ற மேய
தேமேவு புகழ்க்கச்சி யப்பமுனி வரர்பெருமான்
தெரிந்து ரைத்த
காமேவு திருத்தணிகைப் புராணமதை அறிஞர்சிலர்
கருதிச் செய்த
நாமேவு குறிப்புரையோ டினிதச்சிற் பதிப்பித்து
நல்கி னானால். (1)

752. தூவிரிநல் லிசையெளவைப் பிராட்டிமுத லியர்பழிச்சுந்
தொண்டை நாட்டில்
காவிரிசீர்க் காவிரிப்பாக் கத்தினனெந் நகருள்ளும்
கவின்பெற் றோங்கி

750. ஆசிரியர்: பால்வண்ண முதலியார்.

751. 'நல்லாசிரியன்' ஆசிரியரும் சென்னை மேரியரசியார் கல்லூரித் தமிழாசிரியருமாகிய கா. நமசிவாய முதலியார் பதிப்பித்தது இந்நூல். இப்பதிப்பு 1929-ஆம் ஆண்டு வெளிவர வேண்டியது; முகவுரை, இந்தச் சிறப்புப்பாயிரம் ஆகியவை இன்றியே பிறகு வெளியாயிற்று.

மீவிரிசென் னையின்மேரி மகாராணி யார்பெயரால்
மிளிர்கல் லூரி
மாவிரிசீ ருறுதமிழ்ப்பண் டிதனுகி வாழ்நமச்சி
வாயன் ருனே. (2)

தம்பு சிந்தாமணி

(வெண்பா)

753. தம்புவேள் சீரைத் தமிழ்வல்லா ராய்ந்துவப்பத்
தம்புசிந் தாமணிநூல் சாற்றினனுல்—பம்புபுகழ்
வேங்கடசுப் புக்கவிஞன் வேந்தர்மதிக் கும்புலவன்
தேங்கலவு மின்மொழியான் தேர்ந்து.

திருக்குறள் முதற்பா விளக்கம்

(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

754. முப்பாலின் முதற்பாவுக் கிணையில்பரி மேலழகர்
மொழிந்த இன்ப
வைப்பாய உரையதனுக் கொருவிளக்க மியற்றியன்பின்
வழங்கி ஞனல்
எப்பாலும் புகழ்பாண்டேச் சுரம்வருவேங் கடசாமி
ஈன்ற மைந்தன்
துப்பார்வெம் பிணிப்பகைஞன் தூயகங்கா தரதேவ
சுகுணன் மன்னே.

திருப்புகழ்ப் பதிப்பு

(எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

755. பூவரும் அமலன் அயிற்கரச் செவ்வேள்
பொன்னடி யேங்கினந் துருகித்
தாவரும் அருண கிரிப்பெருங் கவிஞன்
சாற்றிய திருப்புகழ் பலவும்.

---

753. நூல் வந்த தேதி : 8—5—1901. தம்புவேள் - தம்புப்பிள்ளை
754. இதனைப் பதிப்பித்தவர்: பா.கங்காதர தேவர். தேதி: 21-1-1909.
755. வ. த. சுப்பிரமணிய பிள்ளை திருப்புகழ் பதிப்பித்ததைச் சிறப்பித்தது ; அவர் ஜில்லா முன்சீப்பாக இருந்தவர்.

மேவரு நிலையை உணர்ந்தவன் அருளை
மெய்த்துணை யாக்கொடு தேடி
யாவரும் பெறச்செய் சுப்பிரமணிய
ஏந்தல்சீர் இயம்புறற் பாற்றே. (1)

756. தக்கசீர் நீதி பதியெனத் தான்சேர்
தலந்தொறும் உளசிவா லயத்தின்
மிக்கசீர்த் தமிழ்நூல் பலவெளி வரச்சொல்
மேதகை அரனடி நினைந்தே
நெக்கசீர் உளத்தன் அவனடி யவர்பால்
நேயமிக் குடையவன் எங்கும்
தொக்கசீர் மிகுத்த சுப்பிர மணியச்
சுகுணவேள் போல்பவர் யாரே. (2)

திருப்புகழ்ப் பாராயணத் திருமுறை

(எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

757. அன்புடையார்க் கெளியனெனும் அறுமுகன்பொற் றுளில்
அருணகிரிப் பெரியார்முன் அணிந்ததிருப் புகழில்
இன்புறுபா ராயணத்திற் கேற்றவற்றைத் திரட்டி
எவரும்நல முறவளித்தான் அவன்யாவன் என்னின்
என்புருகத் திருப்புகழைப் பாடியும்பா டுவித்தும்
இலகுதிருப் புகழ்ச்சாமி எனும்பெயர்பெற் றுளிர்வோன்
....

திருமுக விலாசம்

(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

758. சுத்திரத்தாற் பயனிலையென் றுணவளிக்கும் சத்துருசங்
கார்க் கோட்டைச்
சத்திரத்தான் புலவர்பலர்க் கருந்தனமா டைகளளிக்கும்
தகைமை வாய்ந்தோன்

---

757. இதைத் தொகுத்தளித்தவர் வள்ளிமலைச் சுவாமிகளாகிய சச்சிதானந்த சுவாமிகள். பாட்டில் ஓரடி கிடைக்கவில்லை.

758. முறையூர்ச் சண்முகம் செட்டியார்மேல் மு. ரா. அருணாசலக் கவிராயர் பாடியது.

பத்திரத்தால் மலர்களிரு லீசனைப்பூ சனைபுரிவோர்
பத்தி மேயோன்
சித்திரத்தார் மாடமலி முறையூர்ச்சண் முகவணிகச்
செல்வன் மீதே. (1)

759. குருமுகமாத் தானுணர்ந்த பலதமிழ் நூற் பொருளையெலாங்
கூட்டிச் சேர்த்தே
திருமுகவி லாசமென ஒருநூல்பண் டிதருவப்பச்
செய்தீந் தானல்
மருமுகப்பூம் பொழிற்சேற்றூர் வந்தவரு ணசலநா
வலன வன்சீர்
ஒருமுகமா உரைக்கவெனக் கொண்ணுமோ புலவீர்நீர்
உணர்கு வீரே. (2)

திருவரங்கச் சிலேடை வெண்பா

(வெண்பா)

760. அணியரங்க மாலை அடிபணிந்தன் ஞன்றுட்
கணியரங்க மாலை யணிந்தான்—தணிவில்
அநந்தவளத் தென்பேரை யான்றலவ காரன்
அநந்தகிருஷ்ணப் பேர்க்கவிஞன் ஆய்ந்து.

திருவுசாத்தானப் புராணம்

(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

761. பூமேவு கடுக்கைமுடிப் பரன்றிருவு சாத்தானப்
புராணந் தன்னைத்
தேமேவு தமிழ்மொழியிற் காரைநகர்ச் சொக்கலிங்கச்
செல்வன் தன்னல்
நாமேவு பத்தியநன் னடையாக இயற்றுவித்து
நல்கி னுனல்
பாமேவு பழம்பதியாம் ஆலங்காட் டிலங்குசிதம்
பரவேள் மன்னே. (1)

760, ஆசிரியர் : தென்திருப்பேரை அனந்த கிருஷ்ணையங்கார். அச்சிட்ட காலம் : 1900

761. இதனைப் பாடியவர் : காரைக்குடி ராம. சொக்கலிங்கம் செட்டியார், இயற்றுவித்தவர் : சிதம்பரம் செட்டியார்.

762. அப்பணியும் செவ்வேணிக் கருமிடற்று மாதேவர்க்
கன்பி னோடும்
துப்பணியுந் திருப்பணியாங் கற்பணியும் பொற்பணியும்
தொண்ட ருக்காய்
எப்பணியும் நிதம்புரியுஞ் சிதம்பரவேள் சொற்பணியென்
றெவரும் போற்றும்
இப்பணியின் றியற்றுவித்த தியல்பன்றோ இறும்பூதென்
றிசைப்பார் யாரே. (2)

திருவேடகப் புராணம்

(எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

763. பூமலி கானப் பேர்த்தலத் தினுக்குப் புதுப்பணி
பற்பல புரியும்
தேமலி அருணா சலவணி கேசன்
சிந்தையி லின்பமீக் கூரத்
தூமலி திருவே டகப்பு ராணத்தைத்
தூத்தமிழ்க் கவிதையாற் சொற்றான்
நாமலி தஞ்சை விப்பிர மணியாம்
சுப்பிர மணியநா வலனே.

துறைசைச் சிலேடை வெண்பா

(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

764. கோமேவும் அரன்றுறைசைச் சிலேடைவெண்பா வதனோடு
குணக்குன் றாய
தேமேவு கடம்பணிவேள் இங்கிதமா லையும்நன்கு
செப்பி னானால்
தூமேவு துறைசைவயித் தியலிங்க தேசிகர்கோன்
றுணைத்தாட் கன்பன்
மாமேவு நயசுகுண மிகுபொன்னுச் சாமிப்பேர்
வாய்ந்து ளோனே.

---

763. இயற்றியவர் : தஞ்சைச் சதாவதானம் சுப்பிரமணிய ஐயர்.
764. இயற்றியவர் : திருவாவடுதுறை ஆதீன ராயசம் பொன்னுசாமிச் செட்டியார்.

நமச்சிவாய தேசிகர் நான்மணிமாலை

(வெண்பா)

765. வான்மணியாய்க் கோமுத்தி வாழ்நமச்சி வாயகுரு
நான்மணி மாலை நவின்றனனால்—கான்மலிந்து
தேமிக்க சோலைசுலாந் தென்னுறந்தை யூர்ப்பெரிய
சாமிப் பெயர்க்கவிஞன் தான்.

பாரி காதை

(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

766. பாரி அளித்த மகளிர்தமைப்
பரிந்தே ஔவைப் பெயர்ப்பெரியார்
காரி அளித்த மைந்தருக்குக்
கலியா ணஞ்செய் காதையெனும்
வேரி அளித்த விருந்துண்டேன்
விறல்சேர் நாக நாதமன்னன்
வாரி அளித்த மணியனையான்
மகுடா பிடேக வளர்தினத்தே. (1)

767. தொன்னூற் புலவர் கருத்தெல்லாம்
துலங்க நின்வா யிற்புலவன்
பன்னூல் பயின்ற இராகவமால்
பாடும் பாரி காதையெனும்
இந்நூல் நயத்திலென் னுள்ளம்
ஈடு பட்டே கிடந்ததம்மா
நன்னூல் நயந்தேர் தென்முகவை
நாக நாத நர்பதியே. (2)

---

765. இயற்றியவர் : உறையூர்ப் பெரியசாமி பிள்ளை. நமச்சிவாய குரு : திருவாவடுதுறை ஆதீனம் நிறுவிய முதல் ஞானாசிரியராகிய நமசிவாய தேசிகர்.

766. இராமநாதபுரம் திரு. நாகநாத சேதுபதியவர்கள் முடிசூட்டுத் திருநாளுக்குப் போயிருந்தபோது சேது சம்ஸ்தான மகாவித்துவான் ரா. ராகவையங்காரவர்கள் பாடியிருந்த பாரி காதையைக் கேட்டு இன்புற்றுப் பாடிய பாடல்கள் இவை. வேரி - தேன். வாரி - கடல்.

767. தென் முகவை - இராமநாதபுரம்.

768. சீரை அளித்த ரகுநாத
சேது பதிமால் அமுதகவிக்
கூரை அளித்தா னொருகோவைக்
குலகம் புகழும் இராகவனென்
பேரை அளித்த கவிஞனுக்கென்
பேற்றை அளிப்பா யோவறியேன்
நாரை அளித்த கொடைநாக
நாத னென்னும் நரேந்திரனே. (3)

(எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

769. திருமலி பறம்பிற் பாரியாம் வள்ளல்
சீரெலாம் விரித்தொரு காதை
உருமலி சங்க நூல்பல உணர்ந்தே
உரைத்தனன் சேதுகா வலர்தம்
குருமலி அவையப் புலவனு விளங்கிக்
குலவுசீர் இராகவப் பனவன்
மருமலி தமிழின் நயமெலாம் ஒருங்கே
மலிந்திடக் கவிஞரின் புறவே. (4)

770. புலவர்கள் பலர்முன் அதையரங் கேற்றப்
புரிவித்துப் பொற்கிழி யளித்தான்
நிலவுறு செட்டி நாட்டினுக் கரசன்
நிறைதிரு மதிகுணம் உடையோன்
கலவுறு-கலைக்குக் கோயிலென் றுரைபல்
கலைக்கழ கத்தினை நிறுவி
உலகுள தனையும் தன்புகழ் நாட்டி
உயர்அண்ணு மலைப்பெயர் மணியே. (5)

புதுக்கோட்டை இயன்மொழி,வாழ்த்து

(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

771. தாமேவு புதுக்கோட்டை மார்த்தாண்ட பைரவப்போர்த்
தொண்டை மான்மீ
தேமேவு தமிழ்வாணர் மகிழவியன் மொழிவாழ்த்தொன்
றிசைத்து ளானுல்

---

768. ஒரு கோவை - ஒரு துறைக் கோவை. என் பேரை - என்ற பெயரை. நாரை - அன்பை.

769—770. இவை இரண்டும் நூல் அரங்கேறியபோது (14-2-1934) பாடியவை.

மாமேவும் இயற்றமிழ்நூல் பலவுணர்ந்தோன் மறவாத
வன்மை வாய்ந்தோன்
பாமேவு சுவைநுகர்த்தின் புறுநாரா யணசாமிப்
பனவர் கோவே.

பேரகராதி

772. முன்னுபகந் தமிழ்மொழியின் உளவாய நூல்களிற்சேர்
மொழிகள் பல்ல
துன்னுபல புலவர்களைக் கொடுபலநாள் மிகமுயன்று
தொகுப்பித் தன்பர்
உன்னுதமிழ்க் கருவூலம் இஃதெனப்பே ரகராதி
ஒன்றி யற்றி
மின்னுமெழு தாவெழுத்தில் அமைத்துவழங் கினனவன்யார்
விளம்பென் பீரேல். (1)

773. நாவிருந்த வல்லியொடு பூவிருந்த வல்லிமரீஇ
நலமார்ந் தோங்கும்
பூவிருந்த வல்லிவரு சுப்பரா யக்குரிசில்
புதல்வன் முக்கண்
தேவிருந்த வளத்தினனு கியராச ரத்தினப்பேர்ச்
சீமான் பின்னோன்
பாவிருந்த நயசுகுணன் ராமநா தப்பெயர்கொள்
பயன்மிக் கோனே. (2)

மங்களாம்பிகை திருவருள் விலாசம்

774. சங்களாங் கமலமலர்த தடத்தினொடு காவிரியுந்
தளிர்கள் மல்கிக்
கொங்களாம் மலர்ப்பொழிலுஞ் சூழ்குடந்தை வாழமுத
கும்பே சன்றன்

772: இந்த நூல் பூவிருந்தவல்லி, சுப்பராய முதலியார் புதல்வர் இராமநாத முதலியார் பதிப்பித்தது. (1909)

774. ஆசிரியர் : ஐ. சண்முகம் பிள்ளை. இவர் தியாகராச செட்டியாரிடம் பாடம் கேட்டவர். புத்தகம் வெளியான காலம் : விரோதி, பங்குனி.

பங்களாம் பெருமாட்டி மந்திரபீ டத்தமரும்
பரையென் அன்னை
மங்களாம் பிகையருள்வி லாசமெனுந் துதியமிழ்தை
வகுத்தான் மன்னோ. (1)

775. மற்றவன்யார் என்றிடிற்றன் கற்றமொழி விளக்குருட
வாயில் வந்தோன்
கற்றவர்கள் சிரந்துளக்கக் காகுத்தன் கதையினிதாக்
கழற வல்லோன்
உற்றவருக் கொருதுணையாந் தியாகரா சக்கவிஞன்
உதவப் பன்னூல்
பெற்றவன்பன் னூலமைக்கும் பெற்றியன்சண் முகனெனுமா
பெருமை யோனே. (2)

மதுரைத் தமிழ்ச் சங்க மான்மியம்

(எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

776. புண்ணியன் பாண்டித் துரைமகி பாலன்
புரந்தளித் திடுமொரு பெருமை
நண்ணிய கூடல் நகர்த்தமிழ்ச் சங்க
நலத்தினை இயற்றமிழ் வாணர்
எண்ணிய விருந்தா உண்ணிய வாய்ந்தே
இன்றமிழ்க் கவிகளால் இசைத்தான்
கண்ணியன் எவர்க்கும் அண்ணியன் அப்துல்
காதிறு ராவுத்தக் கவியே.

மயிலைச் சிலேடை வெண்பா

(வெண்பா)

777. குயிலைப் புரந்தவிடக் கோச்சிம்புள் வாழ்தென்
மயிலைச் சிலேடைவெண்பா மாண்பின்—இயலுறவே
கண்ணன் வடமொழிப்பேர் கைக்கொள் மறை யோன்தமிழ்தேர்
அண்ணல் மொழிந்தனனால் ஆய்ந்து.

---

776. உண்ணிய - உண்ண.

777. குயிலை - உமாதேவியை. இடம் - இடப் பாகத்தையுடைய. சிம்புள் - சரபமூர்த்தி. கண்ணன் வடமொழிப் பேர் கைக்கொள் மறையோன் - கிருஷ்ணையர்; இவர் மாயூரத்தினர். பாடிய தேதி : 29-2-1904.

மயூரகிரிக் கலம்பகம்

(எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

778. சீர்மலிவேற் கரப்பெருமான் மயூரகிரிப் பெருமான்
சேவடிமேற் கலம்பகமா மாலைபுனைந் தணிந்து
பார்மலிசெந் தமிழ்ப்புலவர் கூட்டுணவே அச்சிற்
பதிப்பித்து நல்கினன்மற் றவன்யாவ னென்னின்
கார்மலிகந் தரப்பெருமான் திருமதுரைக் கோயிற்
கறபணியா திகள்செய்தோன் காமர்குலத் தோன்றல்
வார்மலிநல் லொழுக்கமுளோன் இராமநா தப்பேர்
வாய்ந்தவன்சீர் நகரதன வணிகர்சிகா மணியே.

மயூரகிரிக் கோவைப் பதிப்பு

(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

779. தூமேவு சருக்கரைப்பேர்க் கவியளித்த சாந்துகவி
சொற்ற தாய
தேமேவு நீரமைமயூரகிரிக் கோவைதனைத்
தேர யாரும்
ஏமேவு குறிப்புரையோ டினிதச்சிற் பதிப்பித்தான்
இலங்கு கேள்வி
பூமேவு நயசுகுணன் இராமசா மிப்பெயர்கொள்
புலவன் ஞனே.

மாம்பழக் கவிச்சிங்க நாவலர் பிரபந்தத் திரட்டுப் பதிப்பு

(ஆசிரியப்பா)

780. சீருறு செந்தமிழ்க் கீரனும் பெரியனும்
அருண கிரியெனும் பொருள்நயக் கவியும்
போற்றுறு பெருமை வீற்றுற மேவி

---

778. இதனைப் பாடியவர் வயிநாகரம் இராமநாதன் செட்டியார். இந்தச் சிறப்புப் பாயிரம் அச்சிடப்படவில்லை.

779. மயூரகிரி - குன்றக்குடி. இதனைப் பதிப்பித்தவர், சர்க்கரை இராமசாமிப் புலவர். பதிப்பித்த காலம் : ஜூன், 1908.

780. இதனைப் பதிப்பித்த காலம் : 1908, ஜூன் மீ.

அறுமுகன் படைவீ டாறனுள் ஒன்றாய்ப்
பல்வளம் செறிந்த பழனியம் பதியில்
விச்சுவ குலத்தில் மெச்சுறு தமிழ்பயில்
நன்மைசால் மரபிடைத் தொன்மையோர் செய்த
புண்ணியம் என்ன நண்ணிய அண்ணல்
கந்தன் பதத்திடை முந்தன் புடையோன்
உம்மைத் தவம்இவன் செம்மையின் உளன்எனச்
செந்தமிழ் மொழியின் ஐந்திலக் கணமும்
சிந்தையே ஏடாத் திரிபின் றுணர்ந்தோன்
தேனினும் பாலினும் தானினி தென்னச்
சொன்னயக் கவிபல பன்னுறு வாக்கி
அயலவர் கருத்தினை நயனுற அறிந்தே
வேகமாக் காள மேகமே என்னப்
பாடுபு வேத்தவை கூடிய தீரன்
ஏக சந்தக் கிராகி இவனெனப்
பாகசந் தக்கவி பாடுவோன் இவனென
ஆசு கவியென ஆசிலாக் கவியெனக்
கற்றவர் உவந்து சொற்றிட விளங்கியோன்
பன்னுறு முகவைப் பதிவயின் அடைந்து
மாது பதியுரச் சேது பதியும்
தோமில்சீர்ப் பொன்னுச் சாமியாம் மகிபனும்
ஆண்டுள புலவரும் அகமகிழ்ந் திடப்பாத்
தேம்பழம் எனத்தித் தித்திடப் பாடி
மாம்பழக் கவியெனும் மாப்பெயர் படைத்தே
இக்கார் விழுச்சுவை அக்கா ரக்கனி
நச்சும ணுரெனும் நாவலன் எனவுட்
குவிவீரும் அந்தகக் கவிவீர ராகவப்

---

10. உம்மைத் தவம் - முற்பிறப்பிற் செய்த தவம். 14. வாக்கி - வாக்குவளம் உடையவன். 17. வேத்தவை - அரசர் அவை. 19 பாகசந்தக் கவி - பக்குவமுள்ள சந்தக்கவிகளை. 20. ஆசுகவி - சொன்னதை உடனே பாடுபவன். ஆசிலாக் கவி - குற்றமில்லாத கவி. 23. மாது - திருமகள். உரம் - மார்பு. 24. பொன்னுச் சாமி மகிபன் - பொன்னுசாமித் தேவர். 28. இக்கு - கரும்பு. 30.இவர் அந்தகராதலின் அந்தகக்கவி உவமையானார்.

பாவலன் எனப்புகழ் மேவிய புலவன்
நன்றிபா ராட்டுறு நயமுடைச் சுகுணன்
இவன்போற் பாடல்மற் றெவர்க்குறு மோவெனக்
கவிஞர்கள் எண்ணப் புவியிடை மேயோன்
கூலமா மறுகிற் சேலமா நகர்வாழ்
மாரி யப்பவேள் மனமகிழ் நண்பன்
ஆகிய இவனை அறியார் எவரே
அனையவன் இயம்பிய புனைபல நூல்களும்
இனிப்பா உளவாம் தனிப்பாப் பலவும்
தொகுத்தே நிரையா வகுத்தே எவர்க்கும்
பயன்பட அச்சிற் பதிப்பித் தீந்தனன்
ஈண்டிய வளஞ்செறி பாண்டிநன் னாட்டில்
சீர்க்கயம் சுலவும் மார்க்கயன் கோட்டையன்
மேற்கூ றியகவி விழுக்குடிப் பிறந்தோன்
தோற்றுறு தமிழ்ச்சுவை தெரிந்து
சாற்றுறு பழனிச் சாமியென் பவனே.

முத்தமிழ் வசனக் கோவை

(கட்டளைக் கலித்துறை)

781. மாணிக்கக் கோவையின் மென்மையில் லாக்குறை
மாற்றுயர்ந்த
ஆணிப்பொன் னாரத்தில் வாசமில் லாக்குறை
யம்மலர்த்தார்
பேணிற் குறையது வாடுத லாமிவை
பேசற்கின்றி
வாணிக்கு முத்தமிழ்ப் பூமாலை இன்று
வனைந்தனனே.

---

35. கூலம் - தானியம். 46. பழனிச்சாமி : பெரியகுளம் தாலூகா மார்க்கயன் கோட்டை எம். பி. பழனிச்சாமி ஆசாரியார்.

781. நூல் இயற்றியவர் கூவிரட்டல் கிருஷ்ணமாச்சாரியார்.

வாகனக் கவி

(எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

782. சீர்மலிந்த தென்அரியக் குடிவாழும் பெருமை
திகழ்புலவர் பலர்கூடிப் பாடியுத வென்னப்
பேர்மலிந்த அந்தலம்வாழ் பெருமானேர் இளமான்
பிறங்குமார் புடைச்சீனி வாசநெடு மாலின்
ஏர்மலிந்த திருநாள்வா கனக்கவிகள் அமுதா
இனிக்கவளித் தனன்அமரா வதிபுத்தூர் உடையான்
தார்மலிந்த புயத்தண்ணு மலைப்பெரியோன் அளித்த
தமிழ்க்குருசில் இராமநா தப்பெயர்மே தகையே.

வேதநாயகி பிள்ளைத்தமிழ்

(வெண்பா)

783. ஆயபல நூற்சுவையும் ஆர்த்துபுந ணுவேத
நாயகிபிள் ளைத்தமிழ்நூல் நன்கிசைத்தான்—மேயவர்க்கு
முந்தசா மாற்றும் முகவூர் வருசுகுணக்
கந்தசா மிக்கவிஞன் கண்டு.

ஸ்ரீ ரமண சந்நிதிமுறை

(எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

784. அருள்மலி அருணை வாழ்தரு ரமணு
னந்தமா முனிவரன் அகஞ்சார்
இருள்மலி துயரம் போக்கிடும் கதிரோன்
இணையடிக் கன்புமீ தூர்ந்து
தெருள்மலி சுவையும் செவ்விய நடையும்
சேர்தரு சந்நிதி முறையைப்
பொருள்மலி முகவை வாழ்கண்ண முருகன்
புகன்றனன் யாரும்இன் புறவே.

---

782. அரியக்குடி ஸ்ரீநிவாசப் பெருமாள் திருவிழா வாகனக்கவி என்ற நூலை இயற்றியவர் வயி. நாக. ராம. அ. இராமநாதன் செட்டியார். இது அச்சான காலம்: ரத்தாட்சி ஹு ஆடி மீ.

783. இந்நூலை இயற்றியவர்: மு. ரா. கந்தசாமிக் கவிராயர்.

784. நூலாசிரியர்: பாரத்துவாசி முகவைக் கண்ண முருகனர் இரண்டாம் பதிப்புக்கு இச்சிறப்புப்பாயிரம் கிடைத்தது; அதனை அச்சிட்ட காலம் ஏப்ரல், 1939.

செய்யுள் முதற்குறிப்பகராதி

(எண் - செய்யுள் எண்)

அக்கடிதம் 421
அக்கர 492
அக்காலத் 572
அகத்தியனே 406
அகமகிழ்ந்து 437
அகலமுறு 481
அகவையின்நீ 633
அங்கமதி 525
அங்கிருந் 398
அடியார்க்கும் 417
அண்டர்கள் 370
அணியரங்க 750
அத்தகைய 664
அத்தா 707
அந்தகர் 585
அந்தார்ப் 488
அந்தி 393
அந்நாளில் அமிழ்தனைய 611
அந்நாளில் மீனாட்சி 592
அப்பணியும் 762
அருத்திமிக 665
அருமை 610
அருள்மலி 784
அருளாளன் 648
அருளினால் 636
அருளுருக் 625
அளவாச் 674
அளவில்பதந் 368
அளிமேவும் 465
அற்றூர்க்குத் தாயனைய 529
அற்றூர்க்கு விதியனைய 699
அன்பினொடு 561
அன்புடையார்க் 757
அன்புமிகும் 743
அன்போடு 709
அன்றியழுக் 362
அன்றியும்பாஸ் 651
அன்னசிவ 584
அன்னவன்பன் 503
அன்னான் 683
அனுதரவென் 613
அனையபெருந் 579
அனையன்நவில் சிவ 666
அனையனவில் பல 733
ஆங்கொருசார் 581
ஆண்டின் 656
ஆதலால் 718
ஆதார 453
ஆய்ந்து 504
ஆய்ந்தே 609
ஆயபல 783
ஆயினுஞ் சொற் 400
ஆயினும் நின் 428
ஆரியமென் 355
ஆனஞ்சும் 569
ஆனாலும் 628
இணையேதும் 554
இதுபொழுதில் 429
இதுவேநன் 392
இந்தமதி 405
இந்நூலா 668
இம்மகர 395
இமிழ்வாரி 597
இரக்கும் 348
இரவலர்கள் 544
இருந்தமிழே 379

இன்றிரப் 547
இன்றே பெரும்பயனை 388
இன்றேனும் 472
இன்னபெரு 407
இன்னவன்றிறம் 468
இனங்கொள்ளும் 671
இனமளித்தற் 402
இனமார்ந்த 576
இனித்தகுயின் 679
ஈத்துவக்கும் 549
ஈந்ததும்பா 424
ஈன்றதிருத் 660
உகாவளமார் 715
உண்ணுடு 475
உண்ணும் 346
உண்மதிக்கும் 511
உரம்பயிலும் 352
உரவலரும் 630
உருவில்லான் 519
உலகமார் 374
உனைப்போல 444
ஊர்க்குழைப்பான் 473
எக்காலத் 701
எங்கெழிலென் 659
எடுத்துரைப்பன் 517
எண்டிசையோர் 508
எண்ணிய காரியங்கள் 372
எண்ணிய பலவும் 376, 690
எண்ணுமிரு 381
எதுமுத 359
எந்நாளும் 513
எந்நேரமும்நீ 454
எல்லாக் கலைக்கும் 385
எல்லா நலமும் 446
எல்லாப் பொருளும் 527
எல்லா ரிடத்தும் 559
எல்லாரும் பரிதிங்கள் 512
எல்லாரும் புகழருட்சுப் 480
எவனுல 369
எள்ளலற 541
எற்பணிகொள் 725
என்பாட்டைப் 635
என்புடையார் 471
என்பைப்பெண் 386
என்னதுயர் 460
என்னமொழிந் 410
என்னே 442
எனக்குநிகர் 387
எனைப்பிரிந்த 605
ஏனுக்கும் 542
ஒப்பொன்றும் 455
ஒருகாலன் 603
ஒருவாது 477
ஒன்றும் 708
கண்டிந்த 505
கத்திரத்தாற் 758
கருணையெனும் 534
கருத்தை 748
கருப்பா 558
கரும்பன்றி 675
கரையில்புகழ் 464
கல்லாடத் 420
கழுத்துயரம் 351
கற்றவர்கள் 360
கன்றுடுங் 380
கன்றுல்முன் 497
காகமெலாங் 458
காட்சிக் 494
காட்சியினுற் 456
கார்நோக்கி 606
கார்பெற்ற 641
காவிரண்டு 677
குசைமணக்கும் 516
குணமழியா 384
குயிலைப் 777
குருமுகமாத் 759
குருவா 737
குலத்தாலும் 551
குலத்தினுல் 426
குலப்பெருமை 720

குலம்படைத்து	697	சுந்தர லிங்க	520
குலம்பூத்த	575	சும்மா	347
குலமுதல்வ	629	செந்தமிழ்	550
குவ்விடத்தார்	514	செம்மாந்து	568
கூறும்வழு	740	செல்லென்ன	361
கொடியணி	565	சென்னைநகர்	695
கொடையிற்	364	சேர்ந்தேன்	389
கோசிகமும்	526	சொல்லுதல்	491
கோபால	562	ஞானசம்	538
கோமேவும்	764	தக்கசீர்	756
கோல	507	தக்கமுக	676
சங்கத் தமிழ் நூல்கள்	423	தங்குவளக்	462
சங்கத் தமிழைத்	600	தஞ்சைப்	490
சங்கமரு	422	தண்டாத	484
சங்களாங்	774	தண்ணிய	582
சத்திரமா	680	தண்மையுறு	682
சருவசித்தாண்	536	தந்தாய்	710
சருவசித்தில்	589	தம்புவேள்	753
சற்றேனும்	618	தமிழ்செய்	608
சாது	553	தரங்க	445
சார்ந்தவர்கள்தமைத்	687	தவஞானம்	719
சார்ந்தவர்கள் மற்றை	419	தன்வருத்தம்	548
சாற்றுமலை	493	தன்னிடைமுன்	487
சிவஞான	620	தன்னினிமை	573
சீர்பூத்த துறைசையிலம்	602	தாம்படைத்த	595
சீர்பூத்த தென்கலைக்கும்	397	தாயக	716
சீர்பூத்த புலவரெலாம்	607	தாவாத	689
சீர்பூத்த மணிமுடிநீ	627	திங்களணி	450
சீர்பூத்த மதிவேணிப்	732	திண்மையால்	394
சீர்பெற்ற நின	643	தித்திக்கும்	489
சீர்பெற்ற பல	645	திருத்தகுமா	427
சீர்மலிந்த	782	திருத்தில்லை	655
சீர்மலிவேற்	778	திருமகளிர்	501
சீரார் தருமத்துட்	693	திருமலி	769
சீரார் விழுப்புகழ்ச்	614	திருவால	653
சீருறு	780	திருவென்றும்	499
சீரை	768	துன்றுசுவைத்	604
சுகவான்	736	துன்னுபுகழ்ப்	750
சுத்தமலி	692	தூசிலா	396
சுந்தர மூர்த்தி	537	தூமேவு சருக்கரைப்	779

தூமேவு தன துருவப்	350	நனையகணிக்கு	345
தூமேவு புதுக்கோட்டை	771	நாவலோர்	443
தூவிரிநல்	752	நாவிருந்த	773
தெங்கார்	383	நானடைந்த	391
தெய்வத்	543	நானுங்	357
தெரியாது	474	நித்தியனின்	431
தெருள்மணக்கும்	483	நிம்பையில்வந்	673
தென்மதுரை	623	நிரைநிரையா	545
தென்றடு	439	நிறந்தயங்கு	571
தேடியமால்	532	நின்கடமை	706
தேம்பழுத்த	729	நின்புடையே	555
தேமலி	378	நின்றாட்டை	649
தேமேவு	722	நின்றாதரவை	533
தேர்ச்சித்	742	நினையடைந்	409
தேர்வளர்	727	நீதி	723
தேவாரத் தேனின்	418	நீயோ	367
தேவார நயங்களை	414	நீர்படைத்த	485
தேன்என்கோ	432	நேரார்	363
தேனாட்சி	375, 691	நேற்றுதய	413
தேனாட்டு	746	பட்டபாட்	436
தேனூறு	470	படிதாங்கு	728
தேனேக்கும்	476	படிபுகழ்	469
தொன்னூற்	767	படைத்துச்	390
தோம்படைத்த	451	பண்ணிற்	644
தோளாத	667	பயன்மருவு	654
தோன்றுத்	696	பயன்மிகுத்த	626
நக்காலம்	634	பரசணி	563
நண்பார்	438	பரிசுபெற	580
நத்தன்	588	பலாவதிகாத்	735
நந்தாத பன்னூல்	556	பற்றலெங்கே	705
நந்தாத வான்பொரு	425	பன்மொழி நூல்	356
நயங்குலவு	570	பன்னரிய	688
நல்லோர்கள்	721	பன்னுறுசெந்	459
நல்வேலை	535	பனியார்	441
நலம்படைத்த சிதம்	586	பாடும்	433
நலம்படைத்தவளப்	523	பாமேவு தமிழ்	560
நலம்பிறங்கும்	619	பாமேவு வள்ளை	731
நலம்பூத்த	672	பார்த்தமுகம்	596
நன்னிதிச்சுப்	522	பார்பூத்த	408
நன்னூலி	377	பாராமல்	631

பாரிஅளித்த 766
பாரும் 382
பால்வேண்டும் 463
பாவாணர் 747
பாவார் 524
பிரிய வந்த 365
பிறப்பின்னா 601
பிறர் துயரை 552
பிறையூரும் 661
பின்னுமஃதொரு 652
புகழ்பூத்த 594
புண்ணிய சேது 452
புண்ணியன் 776
புலவர்கள் 770
புவியரசர் 587
பூதலம் 447
பூதியொடும் 711
பூமணக்கும் பொழில்மணக்கும் 500
பூமணக்கும் பொழில்முகவைப் 637
பூமலி கல்வி 518
பூமலி கானப் 763
பூமலி துணர்ச்சினைக் காமலி கூலப் 658
பூமலி துணர்ச்சினைக் காமலி வளஞ்சால் 506
பூமலி புலவர் 739
பூமேவு கடுக்கை 761
பூமேவு கயிலாய 531
பூமேவு கோமுத்தி 751
பூமேவு சததளச் 700
பூமேவு செந்தமிழைப் 624
பூமேவு திருமகளும் 430
பூவரும் 755
பூவுறை 353
பெருத்தபல 730
பெருந்துறையில் 599
பேரா 539
பொதுநோக் 457
பொருவாத 657
பொருளிலாப் 434
பொறையும் 557
பொன்னாட் 712
பொன்னாலும் 502
பொன்னைப் 440
மடந்தை 496
மடியென்றும் 591
மண்களிக்கும் 486
மண்படைத்த 726
மணமலிபைந் 578
மதிபோல் 495
மதியம் 694
மந்தரமா ளிகைஇளசை 564
மந்தரமா ளிகைவீதித் 411
மருத மரத்து 685
மற்றவன்யார் 775
மன்னியநற் 509
மன்னும் கல்வி 448
மன்னுவளம் 467
மனையிழந் 349
மாகநா 415
மாசிகந்த கோமுத்தி 416
மாசிகந்த பெரியருறை 647
மாசிகந்தோர் 540
மாண்பனைசைத் 479
மாணிக்கக் 781
மாதனமென் 354
மாமேவு கடிகைமுத்துப் 713
மாமேவு கற்பினர் 741
மாமேவு திருக்குருகூர் 749
மாமேவு பலகலைகள் 639
மாமேவு பிறைச் 616
மாமேவு புகழ்த் 412
மாமேவு புலவர்பலர் 615
மாமேவும் இளமை 686
மாமேவு வடமொழி 401
மாருத 510
மிக்கஅன்பி 714
மீகாமன் 366
முத்திக்கு 399

முப்பாலின்	754	வற்று அருட்சுப்	745
மும்மணிக்கோ	482	வற்றுத	593
முற்காட்சி	646	வறனுண்மிக்	373
முன்னர்மகிழ்ந்	632	வறுமைப்	546
மூன்றுடுந்	515	வன்பாண்ட	612
மூன்று ளிடையே	371	வன்னமைந்தில்	663
மூன்றுபசுந்	772	வாய்ந்தசுவை	717
மூன்றுமுயிர்த்	521	வாய்ந்தபல	598
மெய்யார	702	வாய்ந்தபுகழ்	566
மெற்றுசிற்	681	வாய்ந்தமான்	662
மேற்கொண்ட	698	வாய்ந்தவளத்	744
மொழியிணைத்துக்	435	வாழ்சுப்	498
யான்செய்த	670	வான்பூத்த	404
வஞ்சமனப்	669	வான்மணியாய்க்	765
வடமொழியும்	724	வான்றேய்சீர்	734
வணங்கா	642	வாருட்சி	590
வதிந்தருள்பஞ்	583	வாறு	478
வந்தடுத்த	530	விண்ணுறு	703
வந்த வழக்கை	449	விருப்பமகன்	461
வரமளிக்கும்	403	விரும்பி	358
வருந்தியருந்	567	விளங்குவளப்	622
வரைநாட்டு	466	விளங்குறுநின்	704
வல்லவரேத்	738	வீற்றிருக்கும்	577
வல்லான்றென்	528	வீறியபே	617
வலம்பூத்த இடைமருதம்	650	வெண்பாப்பல்	678
வலம்பூத்த திருவால	640	வெள்ளைநிறத்	344
வலமலியும்	574	வேட்டடைந்தோர்	684
வள்ளலெனும்	621	வேண்டுவார்	638

[402-ஆம் பாடல் அடுத்தடுத்து இரண்டு முறையும், 375, 376-ஆம் பாடல்கள் 691, 690-ஆம் பாடல்களாக இரண்டாம் முறையும் தவறாகப் பதிப்பிக்கப்பட்டுள்ளன.]

சென்னை, அடையாறு

மகாமகோபாத்தியாய டாக்டர்

உ. வே. சாமிநாதையர் நூல் நிலைய

வெளியீடுகள்

நூல் நிலையத்தில் கிடைப்பன :

			ரூ.	ந.பை
1.	பரதசேனாபதீயம்	...	1	25
2.	நவநீதப் பாட்டியல் - மூலமும் உரையும்	...	2	00
3.	கும்பேசர் குறவஞ்சி நாடகம்	...	1	50
4.	கம்பராமாயணம் — ஆரணிய காண்டம்	...	12	00
5.	,, — கிஷ்கிந்தா காண்டம்	...	12	00
6.	,, — சுந்தர காண்டம்	...	12	00
7.	,, — யுத்த காண்டம்		(அச்சில்)	
8.	சூளாமணி	...	12	00
9.	திருவாசக வியாக்கியானம்	...	13	00
10.	மகாபாரத சூடாமணி — பகுதி 1	...	10	00
11.	,, — பகுதி 2	...	5	62
12.	திருக்குற்றால நாதருலா	...	2	50
13.	அபிநய தர்ப்பணம் (படங்களுடன்)	...	5	50
14.	தக்கயாகப்பரணி — மூலமும், உரையும்	...	6	50
15.	நளவெண்பா	...	5	00
16.	மருவிஞ்ஞானேசுவரீயம்	...	4	00
17.	கமலாலயச் சிறப்பு என்னும் திருவாரூர்ப் புராணம்	...	5	00
18.	அகிலாண்ட நாயகி மாலை	...	0	50
19.	தமிழ்ச் சுவடிகளின் நாமாவளி	...	0	37
20.	சுவடிகளின் விளக்கம் (Descriptive Catalogue, Vol. II)	...	10	00
21.	சுவடிகளின் விளக்கம் (Descriptive Catalogue, Vol. III)		(அச்சில்)	
22.	திருக்குறள் - மூலமும் ஒரு பழைய உரையும்	...	4	00
23.	தமிழ்ப்பா மஞ்சரி — பாகம் I	...	1	50
24.	தமிழ்ப்பா மஞ்சரி — பாகம் II	...	2	50

அடையாறு, கலாக்ஷேத்திரத்தில் கிடைப்பன :

திருக்குற்றாலக் குறவஞ்சி	...	0	75
மூவருலா - பழைய குறிப்புரைகளுடன்	...	5	00
யாப்பருங்கலக் காரிகை - மூலமும் உரையும்	...	3	50
கம்பராமாயணம் —			
பாலகாண்டம் - மூலமும் குறிப்புரையும்	...	6	50
அயோத்யா காண்டம் ,,	...	6	50

சென்னை கவர்ன்மெண்டு ஓரியண்டல்
மானுஸ்கிரிப்ட்ஸ் லைப்ரெரியில் கிடைப்பன

கப்பற் கோவை	...	3	00
சுவடிகளின் விளக்கம் (Descriptive Catalogue, Vol. I	...	10	00